REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 பெப்ரவரி 26 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
89
1932 - 2021

வரு. 90 இல. 49 | Saturday 26, February, 2022 | 16 பக்கங்கள் | 30/-

## சுமத்ரா தீவில் நிலநடுக்கம்
# இலங்கைக்கு சுனாமி எச்சரிக்கை இல்லை

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவின் மேற்கு கரையோரத்தில், நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட 6.2 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தைத் தொடர்ந்து இலங்கைக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லையென அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, இலங்கைக்கு சுனாமி அச்சுறுத்தல் எதுவும் விடுக்கப்படவில்லையென

06

# ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் திங்கள் ஆரம்பம்
## இலங்கை குறித்து 3ஆம் திகதி உரையாடல்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதம் (03) உரையாடல் நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு இம்மாதம் (28) முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட எழுத்து

06

# பழைய தேர்தல் முறையில் விரைவில் மாகாண சபை தேர்தல்
## பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பரிந்துரை



புதிய தேர்தல் முறை உருவாக்கப்படும் வரை பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டுமென அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறைகள் மற்றும் தேர்தல் சட்டங்கள் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான விஷேட பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையில் இவ்வாறு பரிந்துரைகளை முன்வைக்க அந்த தெரிவுக் குழு இணக்கம்

06

## பயங்கரவாத தடைச் சட்ட திருத்தம்
# பிரான்ஸ் செனட் சபை உறுப்பினர்களுக்கு விளக்கம்



அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் இலங்கையின் முன்னெடுப்புக்கள், பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொள்ளப் படவுள்ள திருத்தங்கள் உட்பட, இலங்கை கடந்த காலங்களில்

06

## கடந்த இரண்டு தசாப்த கால உலக வரலாற்றில்
# மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பல நாடுகளே இலங்கை மீது குற்றச்சாட்டு
## வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே



**எதையும் செய்யுமாறு எந்தவொரு நாடும் எமக்கு அழுத்தங்களை கொடுக்கத் தேவையில்லை**

மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது குற்றம் சுமத்தும் பல நாடுகள், கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் (28) ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடருக்கான இலங்கையின் தயார்ப்படுத்தல் தொடர்பில், அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் விளக்கமளித்தபோதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும் மார்ச் (03) விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில், ஜெனிவா கூட்டத்தொடர் குறித்து கருத்து தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே, எதனையும் செயற்படுத்த

06

# புதிய அமெரிக்க தூதுவர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியூன் சங் (Julie Jiyoon Chung) நேற்று ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷவிடம் தனது நற்சான்றுப் பத்திரங்களை கையளித்த பின்னர் ஜனாதிபதியுடன் எடுத்துக்கொண்ட படம். இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, செயலாளர் காமினி செனரத் ஆகியோரையும் படத்தில் காண்க.

# பசிலின் இந்தியப் பயணம் மீண்டும் ஒத்திவைப்பு!
## விரைவில் புதிய திகதி அறிவிப்பு



நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவினால் வழங்கப்படும் நிதியுதவி தொடர்பான ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்காக நேற்று அவர் இந்தியாவுக்கு விஜயம் செய்வாரென முன்னதாக அறிவிக்கப்பட்டது.

06

# வார இறுதியில் மின்வெட்டை தவிர்க்குமாறு கோரிக்கை
## முடியாவிடின் குறைந்தபட்ச மின்வெட்டு

நாட்டில் வாரஇறுதியில், இரவு வேளைகளில் மின்வெட்டை தவிர்க்குமாறு அல்லது குறைந்தபட்ச மின்வெட்டையேனும் அமுல்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தவிடயம் தொடர்பாக இலங்கை மின்சார சபைக்கு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தி உள்ளது.

நாடு முழுவதும் இடம்பெறும்

06

# சபைக்குள் டோர்ச் லைட் எடுத்து வந்தமை எப்படி?
## IGP க்கு அறிவிக்க சபாநாயகர் முடிவு



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

பாராளுமன்றத்திற்குள் எதிர்க்கட்சினர் டோர்ச் லைட்டுக்களை கொண்டு வந்து சபைக்குள் ஆர்ப்பாட்டம் செய்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபருக்கு அறிவிக்கப்படுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

06

## சபைக்குள் டோர்ச்லைட் விவகாரம்:
# எனக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்
## ஹரீன் எம்பி சபையில் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பாராளுமன்றத்திற்குள் டோர்ச் லைட் கொண்டு வந்த விவகாரம் தொடர்பில் தமக்கு எதிராக எத்தகைய விசாரணையை முன்னெடுத்தாலும்

06

# தாதியர் சங்கத்துக்கு எதிரான நீதிமன்ற தடையுத்தரவு நீடிப்பு
## மார்ச் 11 வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தடை



தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு அரச தாதியர் சங்கத்துக்கும் அதன் தலைவர் சமன் ரத்னப்பிரியவுக்கும் கொழும்பு மாவட்ட நீதவானால் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அரச தாதியர் சங்கத்துக்கு எதிர்வரும் மார்ச் 11 ஆம் திகதி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தொடர்ந்தும் தடைவிதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த

06


# எரிபொருள் இன்மையால் மின் நிலையங்கள் செயலிழப்பு
## மின்சார சபை பேச்சாளர் அண்ட்ரூ நவமணி

எரிபொருள் இன்மையால், மின்னுற்பத்தி நிலையங்கள் தொடர்ந்தும் செயலிழந்த நிலையில் உள்ளன.

கொழும்பு துறைமுக பத்தல மின்முனையம் உலை எண்ணெய் இன்மையால், இன்று (26) மதியத்துடன் செயலிழப்பதாக மின்சார சபை பேச்சாளர் அண்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார். அதேநேரம், தற்போது 165 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும்

06

## பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கு;
# 20 வருடங்களின் பின்னர் லண்டனில் சந்தேக நபர் கைது



யாழ்ப்பாணத்தில் 20 வருடங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்ட பிரபல பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலையுடன் சம்மந்தப்பட்ட சந்தேகநபர் லண்டனில் கைது செய்யப்பட்டுள்ளார்.

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு பொறுப்பான பொலிஸார் கடந்த

06

# உக்ரைனில் அதிகரித்து வரும் வன்முறைகள்
## இலங்கை அரசு ஆழ்ந்த கவலை

உக்ரைனில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆழ்ந்த கவலையடைந்துள்ளதாக வெளிநாட்டமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

06

03
## கடமையிலிருக்கையில் மரணமா?
## ஊழியர்களுக்கு அதிகபட்ச இழப்பீடாக ரூ.02 மில்லியன்

03
## தீயில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம்
மட்டு. வாகரையில் மீட்பு

03
## நெதர்லாந்து பெண் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம்

# உக்ரைன் மீது ரஷ்யா சரமாரித் தாக்குதல்
## 137 இராணுவத்தினர் பலி, 316 பேர் காயம்
## 'எமக்கு உதவ எந்த நாடுகளும் இல்லை' உக்ரைன் ஜனாதிபதி கவலை தெரிவிப்பு



**ரஷ்யா மீது அமெரிக்கா பொருளாதார தடை விதிப்பு**



உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய முதல்நாள் தாக்குதலில் 137 உக்ரைன் இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோதிமீர்

06

# சஹ்ரானின் மனைவி மீதான வழக்கு மே.27க்கு ஒத்திவைப்பு
## அரச சட்டத்தரணியின் ஆட்சேபனையும் நிராகரிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான பயங்கரவாதி சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்ட மா அதிபர் தாக்கல் செய்துள்ள குற்றப்பத்திரிகை வழக்கு எதிர்வரும் மே (27) வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில், இவ்வழக்கு (24) விசாரணைக்கு எடுத்துக்காள்ளப்பட்டபோதே, மே 27 வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. இதன்போது சஹ்ரான் ஹாஷிமின் மனைவி அப்துல் காதர் பாத்திமா ஹாதியா பலத்த

06

## விக்கல் வீராச்சாமி



காணி அபகரிப்பெண்டு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால எங்கட தமிழ் எம்பிக்கள் நடத்தின ஆர்ப்பாட்டத்த பாத்–தீங்களே....

குழந்தை பிள்ளைக்கும் தெரியும் மார்ச் மாதத்தில இவை இப்படி செய்வினம் எண்டு, இது தெரிஞ்சும் ஊடகங்கள் லீட் நியூஸ் அடிக்கினம்...!!!

# இலங்கைத் தூதுவர் ஜகத் வெள்ளவத்த இத்தாலி ஜனாதிபதியிடம் நற்சான்றிதழ்கள் கையளிப்பு

இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் ஜகத் வெள்ளவத்த இத்தாலியின் ரோமிலுள்ள பலாஸ்ஸோ டெல் குய்ரினாலேவில் வைத்து (18) இத்தாலி ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரெல்லாவிடம் நற்சான்றிதழ் கடிதங்களைக் கையளித்தார்.

நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தூதுவர் ஜகத் வெள்ளவத்த, இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அன்பான வாழ்த்துக்களை ஜனாதிபதி செர்ஜியோ மட்டரெல்லா, இத்தாலியக் குடியரசின் அரசாங்கம் மற்றும் மக்களுக்குத் தெரிவித்தார்.

நற்சான்றிதழ்கள் சமர்பிக்கப்பட்டவுடன், தூதுவர் ஜகத் வெள்ளவத்த ஜனாதிபதி செர்ஜியோ மட்டரெல்லாவுடனான கலந்துரையாடலுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன் போது இலங்கை மற்றும் இத்தாலிக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை அனைத்து மட்டங்களிலும் தொடர்ந்து மேம்படுத்துவதற்கு தூதுவர் வெள்ளவத்த தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

இலங்கை மற்றும் இத்தாலியின் அபிவிருத்திக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய பெருமளவிலான இலங்கையின் புலம்பெயர் சமூகங்களின் தாயகமாக இத்தாலி விளங்குவதாக தூதுவர் வெள்ளவத்த சுட்டிக்காட்டினார். கோவிட்19 தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின் போது சமூகத்தின் நலனில் விஷேட கவனம் செலுத்தியமைக்காக, குறிப்பாக, அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்களை இத்தாலியில் விருந்தளித்தமைக்காக இத்தாலிய அரசாங்கத்திற்கு தூதுவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.






இருதரப்பு உறவுகள், கலாசாரம், வர்த்தகம், முதலீடு, தொழிலாளர் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் தற்போதுள்ள உறவுகளையும் ஒத்துழைப்பையும் மேம்படுத்துவதற்கான தனது பணியை தூதுவர் வெள்ளவத்த வெளிப்படுத்தினார். இலங்கைப் பணியாளர்களின் திறன் மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி வாய்ப்புக்களைப் பெறுவதற்கு இத்தாலிய அதிகாரிகளின் ஆதரவை நாடும் அதே வேளையில், இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக இளைய தலைமுறையினரை மையமாகக் கொண்டு கல்வித் துறையில் ஒத்துழைப்பையும் பங்காளித்துவத்தையும் விரிவுபடுத்துவதற்கான தனது விருப்பத்தை தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி செர்ஜியோ மேட்டரெல்லா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் போது, இத்தாலியில் பெருமளவிலான புலம்பெயர் இலங்கையர்கள் இத்தாலியில் பல்வேறு துறைகளில் பிரசன்னமாகியிருப்பதும், நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பும் தன்னை மிகவும் கவர்ந்ததாகத் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான பல்வேறு துறைகளில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான கூட்டு முயற்சிகளுக்கு இத்தாலியின் ஆதரவை ஜனாதிபதி உறுதிப்படுத்தினார்.

தூதுவர் வெள்ளவத்த சமூகவியல் துறையில் ஒரு கல்வியாளராவார். அவர் ஏறக்குறைய 30 ஆண்டுகளாக சமூகவியலின் சிரேஷ்ட விரிவுரையாளராக கல்வி வாழ்க்கையில் தேசியக் கொள்கையை இயக்கும் திறனில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளதுடன், சமூகவியலின் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சியாளராகவும் உள்ளார். தேசிய அளவில் கொள்கை உருவாக்கம் வரை தனியார் துறைக்குள் உயர்மட்ட தீர்மானம் மேற்கொள்ளலை உள்ளடக்கிய பல்வேறு துறைகளில் ஒத்துழைத்த அனுபவமும் அவருக்குள்ளது.



தூதுவர் வெள்ளவத்த 1987 இல் கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டம் பெற்றார். அவர் இத்தாலிக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வந்தார். அவரது முந்தைய பதவிகளில் இலங்கை காப்புறுதிக் கூட்டுறவுத் தலைவர், அரச ஈட்டு, முதலீட்டு வங்கியின் தலைவர், தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணைக்குழுவின் தலைவர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர், லங்கா ஹொஸ்பிடல்ஸ் கோப்பரேஷன் பி.எல்.சி.யின் பணிப்பாளர், கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினர் ஆகியன உள்ளடங்கும். மேலும், அவர் பல்வேறு பாடங்களில் பல கல்விக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளதுடன், பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூகத் துறைகளில் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார். சமூகவியலில் பல நூல்களையும் எழுதியுள்ளார்.



இலங்கை சீன நட்புறவுக்கு 65 ஆண்டுகள் பூர்த்தியாவதையிட்டு தெசதிய சஞ்சிகையின் அட்டைப்படக் கதையாக 'பட்டுப்பாதையில் பிரியாத நட்பு' என்ற சிறப்புக் கட்டுரை பெப்ரவரி மாத இதழில் பிரசுரமாகியுள்ளது. இதன் பிரதியை தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மொஹான் சமரநாயக்க, இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் Qi Zhenhong க்கு கையளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# Telecom குழும வருமானம் 100 பில். ரூபாவை கடந்தது

## வரிக்கு பிந்திய இலாபமாக ரூ.12.2 பில்லியன் பதிவு

ஸ்ரீலங்கா டெலிகொம் குழுமத்தின் வருமானம் 100 பில்லியன் ரூபாவைக் கடந்ததுடன் வரிக்குப் பிந்திய இலாபமாக 12.2 பில்லியன் ரூபாவைப் பதிவு செய்துள்ளது.

ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சி குழுமம் டிசம்பர் 31, 2021 உடன் நிறைவடைந்த நிதியாண்டில் மொத்த வருமானம் 102.3 பில்லியன் ரூபாவை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிறுவனத்தின் மொத்த வருமானம் 12.3 வீத வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் எஸ்.எல்.டி குழுமத்தின் வரிக்குப் பிந்திய இலாபம் 12.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 54.3 வீத வளர்ச்சியாகும்.

முதலீடுகள் மற்றும் 4G LTE வலையமைப்பில் பெருமளவான விரிவாக்கங்கள் மற்றும் மேம்படுத்தல்கள் போன்றன புரோட்பான்ட் வருமானத்தில் அதிகளவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தன. மேலும் தரமான கல்வி மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் போன்றவற்றை வழங்குகின்றமைக்காக Peo TV சந்தையில் வளர்ச்சி பதிவாகியிருந்ததுடன் வருமானத்தில் அதிகரிப்பையும் பதிவு செய்திருந்தது. நவீன வசதிகள் படைத்த டேட்டா நிலையத்தினூடாக SLT Mobital இன் டிஜிட்டல் ஆற்றல்கள் மேம்படுத்தப்பட்டிருந்தது.

## காணி அமைச்சரின் வருகையை அறிந்தே

# தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் "வேகாத வெயிலில்" போராட்ட நாடகம்

## அங்கஜன் இராமநாதன் எம்.பி அறிக்கை

காணி அமைச்சரின் வருகையை அறிந்தபின்னரே தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் "வேகாத வெயிலில்" போராட்ட நாடகம் நடத்தியதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் போராட்டம் நடத்தியமை தொடர்பில், அங்கஜன் இராமநாதன் எம்.பி விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கில் காணி சார்ந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வொன்றை பெறுவதற்கான உயர்மட்ட கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 09 ம் திகதி வெளியுறவுத்துறை அமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சரின் விஜயம் மற்றும் தீர்வுக்கான உயர்மட்ட கூட்டம் தொடர்பான தகவல்களை அறிந்த, தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் உடனடியாக கூடிப்பேசி தமது அரசியல் இருப்புக்கான அடையாள போராட்டத்தை ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் மேற்கொண்டனர்.



வடக்கு, கிழக்கில் தொல்லியல் துறை, மகாவலி அதிகாரசபை, வனத்துறை உள்ளிட்ட துறைகளினால் மக்களது காணிகள் கையகப்படுத்தப்படுவது தொடர்பில் உரிய கரிசனையோடு நாம் செயற்பட்டு வருகின்றோம். இவ்விடயம் தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் என்ற அடிப்படையில், யாழ் மாவட்டத்தில் அபிவிருத்திகளை முன்னெடுக்கும்போது இத்தகைய காணி கையப்படுத்தல்களால் நாம் பெரும் சாவல்களை சந்திப்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளோம்.

இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் தொடர்ச்சியாக தெரியப்படுத்தி, இதுபற்றி ஆராய்வதற்காக துறைசார் அமைச்சர்களை வடபகுதிக்கு அனுப்பி வைக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்திருந்தேன்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த நீதி அமைச்சர் அலி சப்ரியுடன், யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற காணி விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பில் விரைவில் எமது மக்களுக்கு தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில், காணி கையகப்படுத்தல் விடயத்தில் உள்ள சிக்கல்கள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பில் நேரில் ஆராய்வதற்காக எனது அழைப்பின் பேரில் வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சர் சீ.பி ரத்நாயக்க எதிர்வரும் மார்ச் மாதத்தின் முதல்வாரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயமொன்றை மேற்கொள்ளார் எனவும் அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மருத்துவம் சம்பந்தமான" கிவுவேவ்"(QWAVE) எனும் சஞ்சிகையின் முதல் பிரதியை அண்மையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசனை சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமரிடம் கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து மருத்துவக் கல்லூரி மாணவி அப்ரா நியாஸ் மற்றும் பயாஸ் அஹமட் ஆகியோர் இணைந்து வழங்குவதை படத்தில் காணலாம். கொழும்பு பல்கலைக்கழக ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் மர்சாட் பாரி உடன் காணப்படுகின்றார்.

## தாவர,விலங்கினபாதுகாப்பு (திருத்தச்)சட்டமூலம்

# இரண்டாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்க அமைச்சுசார் ஆலோசனை குழுவில் அனுமதி

தாவர, விலங்கினப் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமூலத்தை இரண்டாவது வாசிப்புக்காக முன்வைக்க வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் அனுமதிக்கு (22) இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

வனசீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பீ.ரத்னாயக மற்றும் இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக ஆகியோரின் தலைமையில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் கூடியது. இதற்கமைய இந்தச் சட்டமூலம் (24) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சர் சீ.பீ.ரத்னாயக தெரிவித்தார். இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஆபத்துக்கு உட்படக்கூடிய காட்டு விலங்குகளின் சர்வதேச வியாபாரத்தின் மீதான சமவாயத்துக்கு (CITES) பயன்கொடுப்பதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கு அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்படும். ஜீ.எஸ்.பி சலுகையைப் பெற்றுக் கொள்ளும்போது கவனத்தில் கொள்ளப்படும் இந்தத் திருத்தம் 15 வருட காலமாகக் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், இறுதியாக இதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்புக் கிடைத்திருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கு சுற்றாடலுக்கு நட்பான சுற்றுலாத் துறையை (Eco tourism) அபிவிருத்தி செய்வது, சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவரும் இலங்கை சிறுத்தைகளைப் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.இதன்படி பொலன்னறுவை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தில் சிறுத்தைகள் ஆய்வுநிலையமொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

பல வருடங்களாக சேவையாற்றி இதுவரை நியமிக்கப்படாத தொண்டர் பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து உடனடியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 பெப்ரவரி 26 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



**தொழுகை நேரம்**

25முதல் 28 வரை

சுபஹ் - 05.09
லுஹர் - 12.25
அஸர் - 03.45
மஃரிப் - 06.23
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மாசி 14

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 9.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: ஏகாதசி

**இராசி பலன்கள்**

மேஷம் - நன்மை
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நிறைவு
விருச்சிகம் - சுகம்
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - செலவு

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# அரசியலை வர்த்தகமாக்கிக் கொள்ளாது மக்கள் சேவை செய்தவர் எம்.ஆர்.மித்ரபால

## -அனுதாபப் பிரேரணையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்)

அரசியலை வர்த்தகமாக்கிக் கொள்ளாது தனது இறுதி மூச்சு வரை மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.மித்ரபால என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை, ஏழை எளிய மக்களுக்காக நீதிமன்றத்தில் இலவசமாக ஆஜராகியவர் அவர் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (25) காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எச். ஆர்.மித்ரபால, ஆனந்த சரத் குமார ரத்நாயக்க, ஆர். ஆர் . டபிள்யூ ராஜபக்ஷ, சோமவீர சந்திரசிறி, பி.பி.திசாநாயக்க ஆகியோரது அனுதாபப் பிரேரணைகள் மீதான விவாதம் நடைபெற்றது.

அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

**ஆனந்த சரத்குமார ரத்நாயக்க தொடர்பில்** கருத்து தெரிவித்த பிரதமர், வடமத்திய மாகாண சபையில் பல்வேறு பதவிகளை வகித்த அவர், எந்தப் பதவிகளிலும் மக்கள் சேவைக்காக தம்மை அர்ப்பணித்து செயல்பட்டார் என்றும் தெரிவித்தார்.

**ஆர். ஆர். டபிள்யூ.ராஜபக்ஷ தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதமர்:**

1951ஆம் ஆண்டு கிராம சபை மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த அவர், 2017 ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்புள்ள சமூக சேவைகளை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

**சோமவீர சந்திரசிறி தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதமர்,**

இலங்கை தொழிலாளர் சங்கத்தின் மத்திய சபையில் செயலாளராக செயல்பட்டுள்ளார். இலங்கை வங்கி உள்ளிட்ட பல்வேறு அரச



நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவதற்கெதிராக தொழிற்சங்க நடவடிக்கைகளை தலைமை தாங்கி முன்னெடுத்தவர்.

இதேபோன்று, எனது ஜனாதிபதித் தேர்தல் வெற்றியிலும் அவரது பங்களிப்பு அளப்பரியதாக இருந்தது என்றும் தெரிவித்தார்.

**பி.பி. திசாநாயக்க தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதமர்,**

1991ஆம் ஆண்டு மாகாண சபை தேர்தல் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்த அவர், அனைத்து பதவிகளிலும் வடமத்திய மாகாண மக்களுக்காக அர்ப்பணிப்புள்ள சேவையை வழங்கினார். 2019ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை மக்கள் சேவையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்ததாகவும் தெரிவித்தார்.

நேற்றைய தினம் அனுதாபப் பிரேரணை நிகழ்த்தப்பட்ட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் அரசாங்கத்தின் சார்பில் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

# கலால் அனுமதிப் பத்திரம் பெறும் நடவடிக்கையை எளிதாக்க நடவடிக்கை



ශ්‍රී ලංකා සුරාබදු දෙපාර්තමේන්තුව
Excise Department of Sri Lanka
கலால் வரி திணைக்களம்

கலால் அனுமதிப் பத்திரம் பெறும் நடவடிக்கையை எளிதாக்க கலால் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கலால் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எல்ல சுற்றுலாப் பகுதியில் உள்ள உணவகங்களில் கலால் திணைக்களம் அண்மையில் சோதனை நடத்தியது. இந்த சோதனை சுற்றுலா பயணிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு கலால் திணைக்கள ஆணையாளருக்கு நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். அதன்படி, கலால் திணைக்கள ஆணையாளர் நேற்று எல்ல ஹோட்டல் உரிமையாளர்களைச் சந்தித்து இது

06

# தீயில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு வாகரையிலுள்ள வீடொன்றில் 64 வயது பெண் ஒருவர் தீயில் எரிந்து மரணமான நிலையில், நேற்று வெள்ளிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

நாகபுரம் பால்சேனையைச் சேர்ந்த 64 வயது பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சம்பவதினம், இப்பெண்(24) இரவு குப்பி விளக்கொன்றை எரியவைத்துவிட்டு அதற்கருகில் ஆழ்ந்த நித்திரையில் உறங்கியுள்ளார். இதன்போது குப்பிவிளக்கு தீ அவர் மீது வீழ்ந்ததால், அவர் தீபற்றி எரிந்து, சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பிபிலை ரிதிமாலியத்த பகுதியில்:

# 65,000 ஏக்கர் காணி எவருக்கும் மகாவலி அதிகார சபையால் வழங்கப்படவில்லை

## அனுரகுமார திஸாநாயக்கவின் கேள்விக்கு அமைச்சர் சமல் ராஜபக்ஷ சபையில் பதில்

லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்

பிபிலை ரிதிமாலியத்த பிரதேசத்தில் சீனி உற்பத்தி தொழிற்சாலை நிறுவுவதற்காக 149 ஹெக்டயார் பரப்பளவு காணியே வழங்கப்பட்டுள்ளது என்றும் 65,000 ஏக்கர் காணி வழங்குவதற்கான எந்த அனுமதியையும் மகாவலி அதிகார சபை உத்தியோகபூர்வமாக எந்த நிறுவனத்திற்கும் வழங்கவில்லை என்றும் அமைச்சர் சமல் ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜே.வி.பி.எம்பி அநுரகுமார திசாநாயக்க எழுப்பிய 27/2ன் கீழ் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுரகுமார திசாநாயக்க எம்பி தமது கேள்வியின் போது:

பிபிலை ரிதிமாலியத்த பிரதேசத்தில் மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் 65ஆயிரம் ஏக்கர் காணி சீனித் தொழிற்சாலை மற்றும் கரும்பு பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். அந்தக் காணியில் நூற்றி நாற்பத்தி ஒன்பது ஏக்கர் காணி பரம்பரை பரம்பரையாக அங்கு விவசாயம் செய்யப்படுபவர்களிடமிருந்து அபகரிக்க ப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவ்வாறு இந்தக் காணி பெறப்படுவது சுற்றாடல் மற்றும் தொல்பொருள் சட்டங்களை மீறிய செயலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ச;

மேற்படி காணியானது தற்போது விவசாயம் செய்பவர்களால் அத்துமீறி பெற்றுக்கொள்ளப்பட்ட காணி எனவும் அதற்கான எந்த அனுமதியும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் அந்த காணி மகாவலி அதிகார சபைக்கு சொந்தமானது எனவும் நீதிமன்றத்தின் மூலம் அந்தக் காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க மகாவலி அதிகார சபை அங்கு சீனித் தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கு தயாராகும் ஐ.எம்.எஸ். ஹோல்டிங் சிங்கப்பூர் நிறுவனத்திற்கு 149. 3 ஏக்கர் காணியை வழங்கியுள்ளது. அவ்வாறு 65,000 ஏக்கர் காணியை மகாவலி அதிகாரசபை வழங்கவில்லை.

அதற்கான எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார். எவ்வாறாயினும் காணி பெறப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேளை மாற்றுக் காணிகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### உக்ரைனிலுள்ள இலங்கையருக்கு

# வெளிநாட்டமைச்சு விடுத்துள்ள அறிவித்தல்

உக்ரைனில் நிலவும் நிலைமையைக் கருத்தில் கொண்டு, உக்ரைனில் எஞ்சியுள்ள இலங்கைப் பிரஜைகளைப் பாதுகாப்பாக ஒருங்கிணைப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, தலைநகர் கியவுக்கு ஒரே நேரத்தில் அங்கீகாரம் பெற்றுள்ள அங்காராவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளிநாட்டமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

உக்ரைனிலுள்ள இலங்கைப் பிரஜைகள் இது தொடர்பாக துருக்கி தலைநகர் அங்காராவிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் நிறுவப்பட்டுள்ள வாரத்தில் 24 மணி நேரமும் இயங்கும் அவசர தொலைபேசி இலக்கமான +90 534 456 94 98, நிலையான தொலைபேசி இலக்கமான +90 312 427 10 32 மற்றும் மின்னஞ்சல்

06

# புதிய அலை கலை வட்டத்தின் மகா சிவராத்திரி நிகழ்வு



புதிய அலை கலை வட்டத்தின் மகா சிவராத்திரி நிகழ்வு இம்முறை ஹெவாஹெட்ட பிரதேசத்திலுள்ள ஹோப் கிளையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இங்கு வட்டம் 1997 ஆம் ஆண்டு நிறுவிய கஜலக்ஷ்மி அறநெறி பாடசாலையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. ஹோப் கிளையின் பிரதான அமைப்பாளர் எம்.ராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சிகளை, அறிநெறி பொறுப்பாளர்கள் ரி.தீபிகா,என்.பிருந்தா, ஆர்.லுஸ்மி ஆகியோர் நெறிப்படுத்துகின்றனர் .




# திறைசேரிக்கு செலுத்தவேண்டிய உரிமைத்தொகையை செலுத்துங்கள்

## புவிச்சரிதவியல் அளவைச் சுரங்க பணியகத்துக்கு கோப் குழு அறிவுறுத்தல்

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்தின் ஊடாக அரசாங்கத்தின் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிமைத்தொகை, பல வருடங்களாக உரிய முறையில் பரிமாற்றம் செய்யப்படவில்லையென்றும், இதனை உரிய முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழுவின் (கோப் குழு) தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பேரசிரியர் சரித ஹேரத் வலியுறுத்தினார்.

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் (23) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய

06



# நெதர்லாந்து பெண் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம்

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நெதர்லாந்து பெண்ணொருவரின் சடலம் வெள்ளவத்தை தொடர்மாடி குடியிருப்பொன்றிலிருந்து (24) இரவு மீட்கப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாநதைச் சேர்ந்த 67 வயதுடைய கலிடீன் நிஷா காடன் (Kalidien Nisha Gatoen) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Tik Tok சமூக வலைத்தளத்தினூடாக அறிமுகமான சிங்கள இளைஞரொருவருடன் காதல் தொடர்பு கொண்டிருந்த இப் பெண், அவரை தேடி இலங்கைக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வந்து இளைஞருடன் அந்த வீட்டில் தங்கி இருந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த மரணத்துக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், சடலம் தற்போது களுபோவில தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

### கடமையிலிருக்கையில் மரணமா?

# ஊழியர்களுக்கு அதிகபட்ச இழப்பீடாக ரூ.02மில்லியன்

பணியிலிருக்கும்போது விபத்துக்களில் காயமடைதல், அல்லது மரணமடைதல் அல்லது முழுமையான ஊனம் ஏற்பட்டால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையை 20 இலட்சமாக அதிகரிக்க தொழிலாளர் தொடர்பான அமைச்சரின் ஆலோசனைக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. இவ்வாறு நிகழின், தற்போது 5,50,000 ரூபா இழப்பீடு இலவசமாக வழங்கப்படுகிறது.

பணிக்காகப் பயணிக்கும் போது ஏற்படும் சம்பவங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதற்கும் இழப்பீட்டு விதிமுறைகளின் விளக்கத்தை இது விரிவுபடுத்தவுள்ளது.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் மாசி மாதம் 14ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரஜப் பிறை 24

## குறள் தரும் சிந்தனை



விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
ஆக்கம் பலவும் தரும்

எந்த நிலைமையிலும் அன்பு குறையாத சுற்றம் ஒருவருக்குக் கிடைத்தால் அது அவருக்கு ஆக்கமும், வளர்ச்சியும் அளிக்கக் கூடியதாக அமையும்.

# தமிழ் அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டிய யதார்த்தம்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தரவிருப்பதனால் அவருடனான சந்திப்பொன்றுக்கு ஏற்பாடு செய்யும் முயற்சிகளில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபட்டிருப்பதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இந்தியப் பிரதமருடனான சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து கொள்வதில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அதேசமயம் தமிழ் அரசியல் கட்சிகள் ஏற்கனவே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக நரேந்திர மோடிக்கு நீண்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தன. தற்போது பிரதமர் நரேந்திர மோடியை நேரில் சந்தித்துப் பேசும் முயற்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன், இலங்கை இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு இந்தியா தனது அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டும் என்பதும் தமிழ்க் கட்சிகளின் கோரிக்கையாகும்.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது தமிழ்க் கூட்டமைப்புடனான சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்படும் என்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை. ஆனாலும் இலங்கை விவகாரத்தில் இந்தியா தற்போது கூடுதல் அக்கறை செலுத்தி வருவதனால் தமிழ்க் கூட்டமைப்புடனான சந்திப்பை நரேந்திர மோடி நிராகரிப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியத் தலையீடு அவசியம் என்பதில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையே மாறுபட்ட நிலைப்பாடு இருந்ததில்லை. ஆனாலும் இனப்பிரச்சினைக்கு பதின்மூன்றாவது திருத்தமே தீர்வு என்பதில் தமிழ்க் கட்சிகளுக்கிடையே மாறுபட்ட நிலைப்பாடே காணப்படுகின்றது. முப்பது வருட காலத்துக்கு முன்னர் இலங்கை_ இந்திய ஒப்பந்தத்தின் பயனாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்க் கட்சிகளின் சில தரப்பினர் கோருகின்றனர்.

ஆனால் குறைந்தபட்ச அதிகாரங்கள் கொண்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகள் தீர்ந்து விடப் போவதில்லை என்று மற்றொரு தரப்பினர் கருதுகின்றனர். ஆகவே இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் தமிழ்க்கட்சிகளுக்கு இடையேயும் ஒன்றுபட்ட நிலைப்பாடு இல்லை என்பது இப்போது தெளிவாகத் தெரிகின்றது.

இவ்வாறானதொரு முரண்பட்ட நிலைப்பாடுகளின் மத்தியிலேயே பிரதமர் நரேந்திர மோடியுடனான நேரடிச் சந்திப்புக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு தற்போது முயற்சித்து வருகின்றது. இனப்பிரச்சினை விவகாரத்தில் கடந்த சில வருடங்களாக மௌனம் காத்து வந்த தமிழ் அரசியல் கட்சிகள் தற்போது இந்தியாவின் அனுசரணை கோரி தீவிரமாக களத்தில் இறங்கி இருப்பதற்கான காரணம் தொடர்பாக பல்வேறு கேள்விகள் எழுகின்றன. இலங்கையில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாலேயே தமிழ்க்கட்சிகள் அரசியல் தீர்வு விடயத்தில் தற்போது ஆர்வம் காட்டத் தொடங்கி இருக்கலாம் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இல்லையேல் தமிழ்க்கட்சிகளின் நீண்டகால உறங்குநிலையானது தமிழ் மக்கள் மத்தியில் சலிப்பை ஏற்படுத்தி உள்ளதனாலேயே மீண்டும் இவ்விவகாரத்தை அக்கட்சிகள் கவனத்தில் எடுத்துள்ளதாகவும் கருத முடிகிறது.

நிலைமை இவ்வாறு இருக்கையில், இலங்கை மீதான இந்தியாவின் இன்றைய அக்கறையானது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டதா என்பதை அறுதியிட்டுக் கூற முடியாதுள்ளது. இலங்கையில் கடந்த இரு வருட காலமாக சீனாவின் பிரசன்னம் அதிகரித்துள்ளது என்ற கவலை இந்தியாவுக்கு உள்ளது. இலங்கையின் அபிவிருத்தி கட்டுமானத் திட்டங்கள் பலவற்றில் சீனாவின் முதலீடு தொடர்பாக இந்தியா தனது அதிருப்தியை கடந்த காலத்தில் மறைமுகமாக காண்பித்து வருகிறது. எனினும் இலங்கையில் சீனாவின் பிரசன்னத்தை கட்டுப்படுத்துவது என்பது இந்தியாவினால் இயலாத காரியமாக இருந்து வந்துள்ளது.

இவ்வாறான பின்னணியில் இலங்கை மீது மறைமுகமான செல்வாக்கு செலுத்துவதற்கான வாய்ப்பு இன்றைய காலத்தில் இந்தியாவுக்கு கிடைத்துள்ளது. உலகளாவிய கொவிட் தொற்று காரணமாக இலங்கையின் பொருளாதாரம் ஓரளவு வீழ்ச்சி நிலைமைக்குச் சென்றுள்ளது. வெளிநாட்டுக் கடன் உதவிகளை எதிர்பார்க்கும் நிலைமையில் இலங்கை உள்ளது. பிரதானமாக எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் இந்திய உதவியை நேரடியாகவே இலங்கை கோரியிருந்தது.

இந்த நிலைமையானது இலங்கை மீது செல்வாக்கு செலுத்துவதற்கு இந்தியாவுக்கு அரியதொரு வாய்ப்பு என்றே ஊகிக்கப்படுகின்றது. இலங்கைக்கு எரிபொருள் கொள்வனவுக்காக இந்தியா பெருமளவு நிதியை சமீபத்தில் வழங்கி இருந்ததையும் இவ்விடத்தில் குறிப்பிடுவதே பொருத்தமானது.

இவ்வாறிருக்கையில், இலங்கைத் தமிழர்களின் அரசியல் விவகாரம் தொடர்பில் இந்தியா தற்போது முன்னுரிமை செலுத்துமா என்பது முக்கிய வினாவாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பானது தனது அரசியல் உறங்குநிலையை கலைத்துக் கொள்வதற்காகவே நரேந்திர மோடியுடனான சந்திப்புக்கு முயற்சிப்பதாகத் தெரிகின்றது. உள்நாட்டு விவகாரத்தில் அந்நிய தலையீடு பயன்தரப் போவதில்லை என்ற வரலாற்று யதார்த்தம் தெரிந்துள்ள போதிலும் தமிழ்க் கூட்டமைப்பானது இந்தியப் பிரதமரை சந்திக்க முற்படுவது சந்தேகங்களையே தோற்றுவிக்கின்றது.

editor.tkn@lakehouse.lk

# நேட்டோ நாடுகள் உச்சகட்ட போரில் இறங்கினால் ரஷ்யாவுக்கு ஆபத்து!



உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது. வான்வெளி தாக்குதலில் ஈடுபட்டு உக்ரைன் நாட்டு நகரங்களில் ரஷ்யா குண்டு வீசி வருகிறது. இருநாடுகளுக்கு இடையேயான இந்தப் போருக்கு முக்கிய காரணமாக ஒன்று உள்ளது. அதாவது நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைய முயற்சித்ததுதான் போருக்கு 'பிள்ளையார் சுழி' போட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

நேட்டோ என்பது வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு ஆகும். 2 ஆம் உலகப் போருக்குப் பிறகு சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பாவில் இருந்து படைகளை திரும்பப் பெற மறுத்தது. இதை முறியடிக்கும் வகையில் நட்பு நாடுகள் இணைந்து உருவாக்கியதுதான் இந்த நேட்டோ படைகள்.

தொடக்கத்தில் அமெரிக்கா,பிரிட்டன், பிரான்ஸ், கனடா, இத்தாலி, நெதர்லாந்து, ஐஸ்லாந்து, பெல்ஜியம், லக்சம்பேர்க், நோர்வே, போர்த்துக்கல், டென்மார்க் நாடுகள் உறுப்பினர்களாக இருந்தன. தற்போது நேட்டோவில் 30 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகளின் இராணுவ வீரர்கள் நேட்டோ படையில் அங்கம் வகிக்கின்றனர். இதில் இணைவதன் மூலம் இக்கட்டான சூழலில் நேட்டோ இராணுவ உதவிகளைப் பெற முடியும். தொடர்ச்சியாக இந்த அமைப்பில் புதிய நாடுகள் இணைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கிடையே தான் 1991 டிசம்பர் 25 இல் சோவியத் யூனியன் 15 நாடுகளாகப் பிரிந்தது. சோவியத் யூனியனில் அங்கம் வகித்த ஆர்மீனியா, அஜர்பைஜான், பெலாரஸ், எஸ்டோனியா, ஜோர்ஜியா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், லாட்வியா, லிதுவேனியா, மோல்டோவா, ரஷ்யா, தஜிகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், உக்ரைன், உஸ்பெகிஸ்தான் ஆகியவை தனிநாடுகளாகின. 2 ஆம் உலக போர் சந்தர்ப்பத்தில் உலகில் வல்லரசு நாடுகளாக அமெரிக்கா, சோவியத் யூனியன்கள் (ஒருங்கிணைந்த ரஷ்யா) விளங்கிய நிலையில் நாடுகளின் பிரிவால் இது மாறிப் போனது. அமெரிக்கா மட்டுமே உலகில் பலம் வாய்ந்த நாடாக மாறியது.

## உக்ரைன் மீது ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் இத்தனை சீற்றம் கொள்ள காரணம் என்ன?





இதை ரஷ்யாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. மேலும் சோவியத் யூனியில் அங்கம் வகித்த எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகிய நாடுகள் 2004 இல் நேட்டோவில் இணைக்கப்பட்டன. இதற்கு ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தது. மேலும் ஜோர்ஜியா, உக்ரைன் நாடுகளை இணைக்க உள்ளதாக 2008 இல் உறுதி அளித்தது. இந்த உறுதிமொழி தற்போது வரை நிலுவையில் உள்ளது.

தங்களுடன் எல்லை பகிரும் உக்ரைன் நேட்டோவில் இணைந்தால் அது ரஷ்யாவின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் என அதன் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நினைக்கிறார். இதனால்தான் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்த நாடுகள் நோட்டோ படையில் இணையக் கூடாது. குறிப்பாக உக்ரைனை சேர்க்கவே கூடாது என வலியுறுத்தி வருகிறார். ஆனால் உக்ரைன் செவிசாய்க்கவில்லை. இதனால்தான் உக்ரைன் மீது ரஷ்யா போர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மேலும் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து வரும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் விமர்சித்து வருகிறார்.

ஆனால் நேட்டோவில் இணைய உக்ரைன் ஆர்வம் காட்டுகிறது. ரஷ்யாவின் எதிர்ப்பையும் மீறி நேட்டோவில் உக்ரைன் இணைய விரும்புவதற்கு பின்னணியில் முக்கிய விஷயங்கள் உள்ளன. அதாவது நேட்டோவில் இணைவதன் மூலம் உக்ரைன் நாட்டிடம் எல்லைப் பிரச்சனையில் வாலாட்டும் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுப்பதோடு, கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்களை சமாளிக்கலாம் என உக்ரைன் நம்புகிறது.

மேலும் ரஷ்யாவை விட உக்ரைன் இராணுவம் பலத்தில் சிறியது. ரஷ்யாவில் 8.5 இலட்சம்ஈராணுவ வீரர்கள் உள்ள நிலையில், உக்ரைனில் வெறும் 2 இலட்சம் வீரர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் ரஷ்யாவின் தொடர் தொல்லைகளை சமாளிக்க வேண்டும் என்றால் அது நேட்டோ அமைப்பில் இணைவதுதான் என்பதை உக்ரைன் புரிந்து வைத்து காய்நகர்த்தி வருகிறது.

இருப்பினும் அமெரிக்கா உட்பட நேட்டோ அமைப்புடன் மோதுவது ரஷ்யாவுக்கு பின்விளைவுகளை ஏற்படுத்தலாம். ரஷ்யாவின் இராணுவ பலத்தைக் காட்டிலும் 30 நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள நேட்டோ இராணுவம் பலமானது. 2021 இல் மட்டும் நேட்டோ பாதுகாப்பு படைகளுக்கு மொத்தம் 1,174 பில்லியன் அமெரிக்க டொலர் செலவு செய்யப்பட்டுள்ளது. இது 2020 இல் 1,106 பில்லியன் டொலராக இருந்தது. இதை ஒப்பிடும் போது ரஷ்யா தனது இராணுவத்துக்கு 2020 இல் 61.7 பில்லியன் டொலர்களை மட்டுமே செலவிட்டுள்ளது. இதனால்தான் நேட்டோவில் உக்ரைனை இணைக்க ரஷ்யா கடும் எதிர்ப்பு தெரிவித்து போரை தொடக்கியுள்ளது.

இந்த நிலையில்தான் 40,000 நேட்டோ வீரர்கள் உக்ரைனுக்கு ஆதரவாக ரஷ்யாவை எதிர்த்து போரிடும் வகையில் தயாராக உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. நேட்டோ நேரடியாகப் ரஷ்யாவுடன் மோதினால் அது உலகப் போராக மாறுவதோடு, ரஷ்யா ஈடுகொடுக்க முடியாத நிலைமை ஏற்படலாம். மேலும் உலக பொருளாதாரத்தை அது கடுமையாக பாதிக்கும் வாய்ப்புள்ளது குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடம் 'மானுடம் 2022' என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜுலை மாதம் நடத்தத் திட்டமிட்டுள்ளது. 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒரு பகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

இது தொடர்பாக, 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாட்டின் அமைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை அது ஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டு கால வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சர்வதேச ஆய்வு மாநாடு 2022 (Jaffna University International Conference JUICE 2022) இன் ஒரு துணைமாநாடாகவும், 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்ற கருப்பொருளிலே, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம், 'மானுடம் ஆராய்ச்சி மாநாடு 2022' இனை எதிர்வரும் ஜுலை மாதம் நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நாடு ஒரு பெருந்தொற்றுநோயின் பிடியிலும், நாட்டினுடைய கல்வி உட்பட பல்வேறு துறைகள் பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடிகளிலும் தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு சூழலிலே, இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் மூன்றாம் நிலைக்கல்வி ஆரம்பிக்கப்பட்டதன் நூறு ஆண்டுகளின் (1921 – 2021) பூர்த்தி இடம்பெற்றிருக்கிறது.

புரட்சிகரமான திறவுகள் மற்றும் நெருக்கடிமிக்க சவால்களை உள்ளடக்கிய இந்த நூற்றாண்டுகால கால வரலாற்றை மீட்டுப் பார்த்து, அதனை விசாரணை செய்யும் செயன்முறைகளின் ஒரு பகுதியாகவும், மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் தற்போதைய நிலைமையை இந்த வரலாற்றின் வெளிச்சத்தில் இருந்து அணுகுவதற்கும், விளங்குவதற்குமான ஒரு முயற்சியாகவும் இந்த சர்வதேச ஆய்வு மாநாடு அமையும்.

இந்த மாநாட்டுக்காக பின்வரும் உபகருப்பொருட்களில் ஒன்றின் மீதோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் மீதோ கவனத்தினைக் குவிக்கும் வகையிலான ஆய்வுக் கட்டுரைகள் அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கலைஞர்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களிடம் வரவேற்கப்படுகின்றன.

★ 1921 ஆம் ஆண்டிற்கு முன்னரும் பின்னரும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளினதும் அவை சார்ந்த ஆய்வுகளினதும் பரப்பு, உள்ளடக்கம் மற்றும் இயல்புகள்

★இந்தக் கல்விப்புலங்களின் வீச்சுகள் மற்றும் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் இந்தத் துறைகளிலே அவதானிக்கப்படும் தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள் சிலோன்/ இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளிலே கற்றல், கற்பித்தல் மற்றும் ஆய்வுச் செயன்முறைகளை வடிவமைக்கும் தத்துவங்கள், கட்டமைப்புகள் மற்றும் சட்டகங்கள்

★ இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் போக்குகளின் மீது செல்வாக்குச் செலுத்தும் சமூக, அரசியல், பொருளாதார, கலாசாரக் காரணிகள்

★ ஜனநாயகமயமாக்கல், சமுதாய அபிவிருத்தி, சமூக நீதி, பால்நிலைசார் நீதி, கலாசார சகவாழ்வு போன்றவற்றினைப் படைப்பதிலும், ஊக்குவிப்பதிலும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் வகிபாகம்

★ பன்மைத்துவம், நிலம், இலவசக்கல்வி, இராணுவமய நீக்கம், நினைவேந்தல், மனித உரிமைகள், நீதி, சமத்துவம், சுயநிர்ணயம், சகவாழ்வு போன்ற இலக்குகளினை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் உள்ளூர், பிராந்திய மற்றும் தேசிய போராட்டங்களை ஆதரிப்பதிலும், வலுப்படுத்துவதிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதன் சமூகமும் செய்த முயற்சிகள் மற்றும் செயற்பாடுகள்

★ இலங்கையில் இனம், மதம், கலாசாரம், பிராந்தியம், வர்க்கம், சாதி, பாலினம், பாலுணர்வு போன்றவற்றின் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துகின்ற மற்றும் ஏற்றத்தாழ்வுகளை ஆழப்படுத்துகின்ற, மேலாதிக்க, பேரினவாத மற்றும் நவதாராளவாத நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகள் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றமை

★இலங்கையில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளில் அவதானிக்கப்படும் மையங்களும் விளிம்புகளும்; அத்துறைகளிலே நோக்கப்படும் ஆதிக்க நீரோட்டங்களும் எதிர்ப்பு நீரோட்டங்களும்

★மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளிலே பெருந்தொற்று நோய் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் நெருக்கடிகள் மற்றும் இந்தத் துறைகளும், இந்தத் துறைகளுடன் தொடர்புடைய கற்பித்தல், கற்றல் மற்றும் ஆய்வுச் சமூகங்கள் இந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதிலே வெளிக்காட்டி வரும் புத்தெழுச்சி.

★இன்றைய இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞான கற்கைகளின் இடம், வகிபங்கு, மற்றும் எதிர்காலத்தில் இத்துறைகள் செல்ல வேண்டிய திசைகள்

முழுமையான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாக மார்ச் 29 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மாநாடு ஜுலை மாதம் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது.




## ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி மார்ச் 29



# இயற்கை எழில் மிகுந்த வளமான இலங்கையை நான் நேசிக்கின்றேன்

## நாவிதன்வெளியைப் பூர்வீகமாகக் கொண்டவரும், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச அழகியுமான இவஞ்சலின் லட்சுமணர் அளித்த பேட்டி

**இலங்கைக்கு முதல் தடவையாக வருகை தந்துள்ளேன். இலங்கை இயற்கை எழில் மிகுந்த வளமான நாடு. இலங்கையர்கள் கனிவான மக்கள். நல்ல விருந்தோம்பல் பண்புள்ளவர்கள். இலங்கையை எனக்கு நன்கு பிடித்துள்ளது. எனது பூர்வீகம் இலங்கைதான். அதுவும் நாவிதன்வெளி. எனது பாட்டனார் ராஜசிங்கம் அதிபராயிருந்து படிப்பித்த பாடசாலைக்கு இன்னும் நாங்கள் உதவுவோம். மக்களுக்கும் நிறைய உதவுவோம். இவ்வாறு கூறுகிறார் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேசஅழகி (Miss International Uk 2020_2022) செல்வி இவஞ்சலின் லட்சுமணர்.**





ஆசியாவிலிருந்து இந்த உயர்விருதுக்குத் தெரிவான முதல் பெண் இவஞ்சலின். 21வயதான இவஞ்சலின் நடிப்பு மற்றும் தொலைக்காட்சித் துறையில் கனடாவில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர். லண்டனில் இவங்சலின் பெஷன் லிமிட்டட் (Evanjelin Fashion Ltd) நிறுவனத்தின் ஸ்தாபகராகவும் இயக்குனராகவும் உள்ளார்.

லண்டனில் பிறந்து வளர்ந்தவர். ஓரளவு தமிழில் உரையாடுகின்றார். அழகியல்துறையில் சிறந்து விளங்கும் இவர் ரெனிஸ், கூடைப்பந்து, கிரிக்கட், காற்பந்து, வலைப்பந்து போன்ற விளையாட்டுகளில் தலைமைத்துவத்தை வகித்து சம்பியன் விருதுபெற்றவர்.

2017_18 வருடத்திற்கா Miss Teen Great Britain CROWN பெற்றவர். 2016_17இல் Miss Junior Teen Great Britain CROWN 1st runnerup பெற்றவர்.

லண்டன் பிஷப் சொலனரில் நடைபெற்ற 18வயதுக்குட்பட்ட பெண்களுக்கான காற்பந்தாட்டத்தில் மிட்லண்ட கோப்பையை வென்றெடுத்தவர். அதேவேளை கிரிக்கட் சுற்றுப்போட்டியிலும் மிட்லண்ட கப் (Midland cup)பெற்றவர். எதிர்வரும் ஒக்டோபரில் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உலகஅழகி தெரிவுப்போட்டியில் கலந்துகொள்ளவிருக்கும் பிரித்தானிய உலகஅழகி இவஞ்சலினை நாவிதன்வெளியில் சந்தித்துப் பேசினோம்.

நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில்(தேசிய பாடசாலை) அவரால் நிறுவப்பட்ட 10அடி உயர சரஸ்வதி சிலையை கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் திறந்து வைத்தார். 1970களில் நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் அதிபராயிருந்த ராஜசிங்கம் அவர்களின் பேத்தியான இவர் பெரிய பிரித்தானியாவின் அழகுராணியாக மூன்று தடவைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வசதியில்லாத மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், பாடசாலைகளுக்கு உதவுதல் போன்ற சமூகசேவைகளில் அவர் ஈடுபட்டு வருகின்றார்.

நாவிதன்வெளியை பூர்வீகமாகக் கொண்ட இவஞ்சலின் லட்சுமணர் சரஸ்வதி சிலையை திறந்து வைப்பதற்காக இலங்கை வந்திருந்தார்.





கேள்வி: உங்களது இலங்கைப் பயணம் எவ்வாறு உள்ளது?

பதில்: இதுதான் இலங்கைக்கான எனது முதல் பயணம். எனது அம்மா பிறந்த காலி தொடக்கம், எனது அப்பா பிறந்த நாவிதன்வெளி வரை இதுவரை இரண்டரை வார காலப் பயணத்தில் சுகமான அனுபவம் பெற்றேன். யாழ்ப்பாணம் சென்று மீண்டும் கொழும்பு செல்லவிருக்கிறேன். இலங்கை வளமான நாடு. நல்ல மக்கள். எங்கும் இன்முகத்தோடு வரவேற்கும் நல்ல உள்ளம் கொண்ட மக்கள். கண்டி தலதா மாளிகைக்கும் சென்றோம். அழகான வணக்கஸ்தலம். அங்கு மக்கள் பெருவரவேற்பு அளித்தார்கள்.

கேள்வி: நாவிதன்வெளியில் உங்களுக்கான வரவேற்பு எப்படி இருந்தது?

பதில்: உச்சக்கட்ட மனம்பிடித்த வரவேற்பு. சரஸ்வதி சிலையை நானும் தாயாரும் திறந்து வைக்க கிடைத்தது ஒரு வரப்பிரசாதம்.நல்ல விருந்தோம்பல். எனது பாட்டனார் ராஜசிங்கம் லட்சுமணர் அதிபராயிருந்து கற்பித்த நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்திற்கு என்ன உதவி தேவையென்றாலும் செய்வோம். அங்கு மேடை ஒலிபெருக்கி தேவையென்றார்கள். அதனைச் செய்ய சித்தமாயிருக்கிறோம்.

கேள்வி: பாடசாலைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?

பதில்: நான் உலக அழகியாயிருந்தாலும் எனக்கு கைகொடுத்தது கல்விதான். நான் பெஷன் டிசைன் நவீன வடிவமைப்பு பாடம் தான் படித்தேன்.பின்பு கனடாவில் நடிப்பு மற்றும் தொலைக்காட்சி துறையில் பட்டப் படிப்பை கடந்த வருடம் பூர்த்தி செய்தேன். அதனால் சிறந்த தொழில்வாய்ப்பு தேடி வருகிறது. எனினும் இறையருளால் இந்த அழகுத்துறையும் எனக்கு வாய்ப்பளித்துள்ளது.

கேள்வி: தங்களுக்கு எத்தனை வயது? ஐக்கிய இராச்சியத்தில் அழகுராணியாக தெரிவானது முதல் தடவையா?

பதில்: எனக்கு 21வயது. கடந்த 3 தடவைகள் இந்த கிரீடத்தை சூடியுள்ளேன். 2020_21 இற்காக நான் இறுதியாக 56 போட்டியாளர்களுடன் போட்டியிட்டு முதல் ஆசியப்பெண்ணாகத் தெரிவானேன்.

கேள்வி: தங்கள் பொழுதுபோக்கு என்ன?

பதில்:அழகுக்கலை, மற்றவர்களுக்கு உதவுதல், ஆடைவடிவமைப்பு, கலையில் ஈடுபடுதலும் பயணித்தலும்.

கேள்வி: நீங்கள் ஒரு சிறந்த பரோபகாரி என அறிகிறோம்? அந்த சிந்தனை எப்படி வந்தது?

பதில்: அந்தப் பண்பு எனது அம்மாவிடமிருந்து வந்தது. 2014இல் 60ஆயிரம் டொலர்களுக்கு மேல் நிதிச்சேகரிப்பு செய்து எண்ணற்ற தானதருமங்களைச் செய்தோம். Together for Short lives Christie Charity செயற்றிட்ஙகளினூடக மக்களுக்கு உதவியுள்ளோம். E.Francia Foundation ஐ ஆரம்பித்து சுயஉதவி செய்து வந்தேன்.

கேள்வி: தங்கள் எதிர்கால இலட்சியம் என்ன?

பதில்: இறைவன் என்னைப் படைத்தது மக்களுக்கு உதவி செய்வதற்காக. எனவே முடிந்தளவு சமூகசேவை செய்யக் காத்திருக்கிறேன்.

நேர்காணல்:
**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)

---

# கிழக்கு மாகாண இலக்கிய விழாவுக்கு ஏற்பாடுகள்; படைப்பாளிகள் மார்ச் 15 வரை விண்ணப்பிக்கலாம்

**கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2022 ஆம் ஆண்டுக்கான மாகாண இலக்கிய விழாவில் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கிய போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றோருக்கு விருது வழங்கி கௌரவிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் அறிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாணத்திலுள்ள கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை பாராட்டி கௌரவிப்பதன் மூலம் அவர்களது கலை, இலக்கியப் பணிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன் எதிர்கால சந்ததியினருக்கு படைப்புலக முன்னோடிகளாக அவர்களை இனம்காட்டுவதன் நோக்கமாகக் கொண்டதாக இந்த விழா அமைவதுடன் கீழ்வரும் விடங்களுக்கு விருதுகள் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. இலக்கியப் படைப்புக்கான விருது வழங்கலின் பொருட்டு 2021ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சிறந்த நூல்கள், குறும்திரைப்பட ஆக்கங்களைத் தேர்வு செய்யும் வண்ணம் கிழக்கு மாகாண எழுத்தாளர்களுக்கும், பதிப்பாளர்களுக்கும் மற்றும் தயாரிப்பாளர்களுக்கும் தமது படைப்புகளை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

02. 2022ஆம் ஆண்டுக்கான இலக்கிய விழாவின் போது கிழக்கு மாகாணத்தின் கலை, இலக்கிய வளர்ச்சிக்காக காத்திரமான பங்களிப்புக்களை ஆற்றிய, ஆற்றி வருகின்ற இலக்கிய வித்தகர், நாட்டார் இலக்கிய வித்தகர், ஊடக வித்தகர், கவின்கலா வித்தகர், அரங்க வித்தகர் மற்றும் பல்துறை வித்தகர் போன்ற துறைகளில் கலைஞர்களை பாராட்டி கௌரவித்து விருது வழங்குவதற்கு திணைக்களம் தீர்மானித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் ஆகக் குறைந்தது 5 வருடங்களை நிரந்திர வதிவிடமாக கொண்ட இலக்கிய கர்த்தாக்களும், கலைஞர்களும் இவ் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்.

03. இலக்கியம், நாட்டார் இலக்கியம், ஊடகம், நுண்கலை, ஆற்றுகை, குறும்படம் மற்றும் பல்துறை போன்ற கலை, இலக்கியத் துறையில் சாதனை படைத்த படைத்து வரும் இளம் கலைஞர்களை பாராட்டி விருது வழங்குவதற்கும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.





04. 2021ஆம் ஆண்டு கிழக்கு மாகாண படைப்பாளிகளினால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களை கொள்வனவு செய்யும் திட்டம் இவ்வருடமும் இடம்பெறவுள்ளது.

05. கையெழுத்துப் பிரதிகள் நூல் வடிவில் வெளியீடு செய்வதற்கு இவ்வருடமும் திணைக்களம் தீர்மானித்து அதனடிப்படையில் புலைமைத்துவம் சார் படைப்புகள், பிரதேச மற்றும் கலை தொடர்பான ஆய்வு சார் படைப்புக்கள், அறிவியலும் தொழில் நுட்பமும், பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களின் ஆவணத் தொகுப்பு, நாட்டுக் கூத்து பிரதி, வரலாற்று நாடகம், சிறுகதை மற்றும் நாவல் போன்ற கையெழுத்து பிரதிகளாக வைத்திருக்கும் படைப்பாளிகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

கிழக்கு மாகாண இலக்கிய விழாவுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள் விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் மாகாணத்திலும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தரிடமும் அல்லது http://www.ep.gov.lk எனும் வலைத்தளத்தில் தரவிறக்கம் செய்து விண்ணப்ப படிவத்தை மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாண திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என மாகாணப் பணிப்பாளர் நவநீதன் அறிவித்துள்ளார்.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

---

# சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாண்மை வங்கிச் சேவையை பிஸ்னஸ் ப்ளஸ் உடன் வலிமைப்படுத்தியுள்ள அமானா வங்கி

**தனது மூலோபாயத்திற்கமைவாக கவனத்துக்கமைய, பிஸ்னஸ் ப்ளஸ் தீர்வின் அறிமுகத்தினூடாக அமானா வங்கி தனது சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை வங்கியியல் பிரிவை வலிமைப்படுத்தியுள்ளது. வியாபாரங்களுக்கு தமக்கு அவசியமான நிதித் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் மன நிம்மதியை வழங்கி, தமது வியாபார வளர்ச்சியில் கவனம் செலுத்துவதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.**

வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கான தீர்வு பற்றி கருத்துத் தெரிவிக்கையில், “பொருளாதாரத்தை வலுப்படுத்தி முன்நோக்கி நகர்த்துவதில் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் முக்கிய பங்காற்றுகின்றன. இதன் காரணமாக இந்தத் துறையில் அமானா வங்கி தொடர்ந்தும் கவனம் செலுத்துவதுடன், அண்மைக் காலத்தில் எழுந்திருந்த பாரியளவு சவால்களுக்கு மத்தியிலும் ஆதரவளித்திருந்தது. இந்தப் பிரிவில் ஈடுபாட்டைப் பெறுவதற்கான பிஸ்னஸ் ப்ளஸ் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்காக பிரத்தியேகமான உறவு பேண் முகாமையாளரையும் கொண்டுள்ளது. வழங்கப்படும் ஏனைய சேவைகளில் உள்ளடங்கலாக, தனது இருப்பிடத்துக்கு வருகை தரும் வங்கிச் சேவை, முன்னுரிமை அடிப்படையிலான கட்டணமிடல், வர்த்தக நாமம் பொறிக்கப்பட்ட காசோலைப் புத்தகங்கள், சம்பளக் கொடுப்பனவு கட்டமைப்பு (payroll) தீர்வுகள் மற்றும் பல அம்சங்கள் அடங்கியுள்ளன” என்றார்.

“நாம் பின்பற்றும் பிரத்தியேகமான வங்கியியல் மாதிரியினூடாக, இடர்களையும் வெகுமதிகளையும் வாடிக்கையாளர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம். வங்கியுடன் ஈடுபாடு மற்றும் நம்பிக்கையுடனான உறவை பேண எதிர்பார்க்கும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு சிறந்த பொருத்தப்பாடாக இது அமைந்துள்ளது. எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை பேண முன்வருமாறு இலங்கையின் சகல சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளையும் நாம் அழைப்பதுடன், எமது பிரத்தியேகமான வங்கியியல் மாதிரியை அனுபவிக்குமாறு கோருகின்றோம். அதனூடாக எமது பணித் திட்டத்திற்கமைவாக 'வளர்ச்சியை ஏற்படுத்துவது மற்றும் வாழ்வுக்கு வளமூட்டுவது' என்பதை எய்த எம்மால் உதவக் கூடியதாக இருக்கும்” என்றார்.

சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளின் பரந்தளவு நிதித் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையிலமைந்த தீர்வுகள் மற்றும் சேவைகளை அமானா வங்கி வழங்குகின்றது. இதில் மூலதன செலவு நிதியளிப்பு, தொழிற்படு மூலதன நிதியளிப்பு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி நிதியளிப்பு, வியாபார சேவைகள், இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் லீசிங், நிரந்தர மேலதிகப் பற்று, காசோலை விலைக்கழிவு மற்றும் பணச் சேகரிப்பு தீர்வுகள், முதலீடுகள் போன்றன அடங்குகின்றன.

அமானா வங்கி பிஸ்னஸ் ப்ளஸ் இரண்டு அங்கத்துவ பிரிவுகளில் வழங்கப்படுகின்றது. அவற்றில் பிஸ்னஸ் ப்ளஸ் சில்வர் மற்றும் பிஸ்னஸ் ப்ளஸ் கோல்ட் ஆகியன அடங்கியுள்ளன. அமானா வங்கி பிஸ்னஸ் ப்ளஸ் அங்கத்துவம் பற்றிய மேலதிக தகவல்களை வங்கியின் இணையத்தளமான www.amanabank.lk இற்குச் சென்று, வங்கியின் ஹொட்லைன் இலக்கமான 011 7 756 756 உடன் தொடர்பு கொண்டு அல்லது வங்கியின் எந்தவொரு 33 கிளைகளுக்கும் சென்று பெற்றுக் கொள்ள முடியும்.

Amãna Bank
BUSINESSPLUS

இலங்கை மத்திய வங்கியின் அனுமதி பெற்று இயங்கும் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட நிறுவனமாகவும் அமானா வங்கி பி.எல்.சி திகழ்கின்றது. ஜித்தாவை தளமாகக் கொண்டியங்கும் IsDB குரூப் பிரதான பங்காளராக திகழ்வதுடன், வங்கியின் 29.97% பங்குகளை தன்வசம் கொண்டுள்ளது. IsDB குரூப் ‘AAA’ தரப்படுத்தலை தன்வசம் கொண்டுள்ள பல்தேசிய அபிவிருத்தி நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ்வதுடன், 57 நாடுகளில் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளது. 2021 செப்டெம்பர் மாதத்தில் அமானா வங்கியின் நீண்ட கால தரப்படுத்தலை BB+(lka) உறுதியான தோற்றப்பாட்டுடன் வழங்கியிருந்தது. அமானா வங்கி வேறு எவ்வித துணை நிறுவனங்களையோ, அங்கத்துவ அல்லது இணை நிறுவனங்களையோ கொண்டிருக்கவில்லை.



**இம்தியாஸ் இக்பால்...**
(பிரதம செயற்பாட்டு அதிகாரி)

## மனித உரிமை மீறல்களில்...

வேண்டாமென எந்தவொரு அரசாங்கமும், இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க தேவையில்ல எனக் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் ஆற்றப்படும் நல்ல விடயங்களை ஏற்று அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையே அவர்கள் செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

யுத்தம் காரணமாக, மாதாந்தம் சகல இனங்களிலிருந்து ம் சுமார் 250 உயிர்கள் பலியாகின. ஆனால், 2009 ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதியின் பின், ஏப்ரல் 21 தாக்குதலைத் தவிர்த்து, உயிர்கள் பலியான சந்தர்ப்பம் பூச்சியமாகும். மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன்னர், மனிதன் ஒருவன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது முக்கியமாகும். இலங்கை மீது குற்றம் சுமத்தும் நாடுகளின் கடந்த இரண்டு தசாப்தகால செயற்பாடுகளைப் பார்த்தால், அவை மனித உரிமைகளை மீறி, வேறு நாடுகளை ஆக்கிரமித்து அந்த நாடுகளில் பெருமளவான உயிரிழப்புகளை ஏற்படுத்திய பல சந்தர்ப்பங்களைக் குறிப்பிட முடியும்.

இந்த நாட்டில், ஏதாவது முக்கியமான சில பிரச்சினைகள் இருக்குமாயின், நாட்டின் சமாதானத்துக்காக அது தொடர்பில் செயற்படுவோம்.

இந்த விடயத்தில், உரிய பிரதிபலனைப் பெற்றுக் கொள்ள தங்களுக்கு உதவுமாறு அனைத்து தரப்புக்களிடமும் கூறுவதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

## எனக்கு எதிராக...

பரவாயில்லை என்றும், எனினும் பாராளுமன்றத்தில் கடமையில் உள்ள பொலிஸார் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வேண்டாம் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.ஹரீன் பெர்னாண்டோ சபையில் தெரிவித்தார்.

தாம், எத்தகைய பார்சலையும் சபைக்குள் கொண்டுவரவில்லை எனக் குறிப்பிட்ட அவர்,100 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட சிறு விளையாட்டு டோர்ச் ஒன்றை மட்டுமே கொண்டு வந்ததாகவும் தெரிவித்து அதனை சபையில் கழற்றியும் காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று காலை ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான அனுதாபப் பிரேரணை நடைபெற்ற வேளையில், தமக்கான அனுதாபப் பிரேரணை உரையின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

டோர்ச் லைட்டைக் கொண்டு வந்ததன் மூலம் நான் உத்தியோகபூர்வ செயற்பாடுகளுக்கு இடையூறாக செயற்பட்டதாகவும், எனக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் சபையில் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கை எடுத்தால் அதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

எனினும், கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு எதிராக எத்தகைய நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான், வழமையாக சபைக்கு கொண்டுவரும் எனது சிறிய பேக்கையே அன்றும் கொண்டு வந்தேன். அதில் எனது அந்த சிறிய டோர்ச்சும் இருந்தது.

நான், அதனை ஸ்கேன் இயந்திரத்தில் பரிசோதித்த பின்னரே சபைக்குள் எடுத்து வந்தேன். அந்தவகையில், என்னைப் பரிசோதித்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிகிறேன். அவ்வாறு செய்ய வேண்டாம்.

அதேபோன்று நான் அடுத்த வாரம் ரஞ்சன் ராமநாயக்கவுக்கான சில செயற்பாடுகளை மேற்கொள்ள உள்ளேன். அதன்போதும் எனக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என, கேட்டுக்கொள்வதாகவும் அவர் நேற்று சபையில் தெரிவித்தார்.(ஸ)

## உக்ரைனில் அதிகரித்து...

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக, அதிகபட்சமான கட்டுப்பாட்டைக் கடைப் பிடிக்குமாறும், பகைமையை உடனடியாக நிறுத்தப் பணியாற்றுமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இலங்கை கேட்டுக்கொள்கின்றது.

இராஜதந்திரம் மற்றும் நேர்மையான உரையாடலின் மூலம் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து முயற்சிப்பது அவசியமென இலங்கை வலியுறுத்துவதா கவுறும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாதியர் சங்கத்துக்கு...

பணிப் பகிஷ்கரிப்பை, தொடர்ந்து முன்னெடுப்பதை தடுக்கும் வகையில் கடந்த 10 ஆம் திகதி நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது. அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக சட்ட மாஅதிபர், மேற்படி சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்த உத்தரவு பிறப்பிக்கக் கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

சட்ட மாஅதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்ததையடுத்து, கொழும்பு மாவட்ட நீதவான் அருண அளுத்கே இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வார இறுதியில் மின்வெட்டை...

அண்மைய மின்வெட்டுகளின் காரணமாக, நுகர்வோர் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க தெரிவித்துள்ளார். இந்நிலையிலேயே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பஷிலின் இந்தியப் பயணம்...

அவருடன், திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவும் இந்த விஜயத்தில் பங்கேற்கவிருந்தார்.

அத்தியாவசிய பொருட்கள் மற்றும் மருந்துகளுக்கு பயன்படுத்தப்படும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான கடனை செலுத்துவதற்காக அவர் இந்தியா செல்லவிருந்தார். இந்நிலையிலேயே நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவின் இந்தியப் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அமைச்சர் பஷிலின் இந்திய விஜயத்தின்போது கடல்சார் பாதுகாப்பை அதிகரிக்கும் மூன்று பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கையில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## திறைசேரிக்குச்... (03ஆம் பக்கத் தொடர்)

குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய 2015 முதல் 2021 வரையான காலப்பகுதிக்குள் பணியகத்தினால் உரிமைத்தொகை உரிய முறையில் சேகரிக்கப்பட்டிருந்தாலும், அது திறைசேரிக்கு அனுப்பப்படாமல் பணியகத்தின் நிலையான வைப்புக் கணக்குகளில் பேணப்பட்டு வந்தமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

2016 முதல் 2021ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட உரிமைத்தொகை 16,591,075,088 ரூபாவாகும் என்பதுடன், திறைசேரிக்கு பரிமாற்றப்பட்டுள்ள தொகை 8,520,235,812 ரூபா மாத்திரமாகும். உரிமைத்தொகை சரியான முறையில் திறைசேரிக்குச் சென்றடைய வேண்டமென கோப் குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்தில் அனுமதிக்கப்பட்ட பணியாளர் தொகையைவிட அதிகமாக சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட ஜீ எஸ் எம் பி தொழில்நுட்ப சேவை (தனியார்) நிறுவனத்தின் பணியாளர்களுக்குப் பணியகத்தின் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டமை குறித்தும் கோப் குழு கலந்துரையாடியது. இது குறித்து விசாரணை நடத்தி, பணியகத்தில் வெற்றிடங்கள் காணப்பட்டால் அவற்றை நிரப்புவதற்கு நிர்வாக சேவைத் திணைக்களத்தின் அனுமதியுடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர், அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

## கலால் அனுமதிப் பத்திரம்... (03ஆம் பக்கத் தொடர்)

குறித்து கலந்துரையாடியுள்ளார்.

காலாவதியான கலால் சட்டம், திறக்கும் நேரம் போன்ற காரணங்களால், அனுமதிப் பத்திரம் பெற இயலவில்லை என ஓட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர். சுற்றுலாவிற்கு ஏற்ற புதுப்பிக்கப்பட்ட முறை இல்லாததால் ஆண்டுக்கு 3 பில்லியன் டொலர்கள் சம்பாதிக்கும் ஹோட்டல் உரிமையாளர்கள் உட்பட, சுற்றுலாத் துறையின் அவலநிலை குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டது.

அங்கு கலால் அனுமதிப் பத்திரம் பெறும் நடவடிக்கையை எளிதாக்குவதுடன் புதிய முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என கலால் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். அரசாங்கத்திற்கு அந்நியச் செலாவணியை பெற்றுத்தரும் சுற்றுலாத் துறை கொவிட் தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாத் துறைக்கு புத்துயிர் அளிக்கும் வகையில் இலங்கையிலுள்ள சுமார் 5,000 இலங்கை நிறுவனங்களுக்கு விசேட உரிமங்களை வழங்குவதன் மூலம் தமது வர்த்தகத்தை மேலும் விரிவுபடுத்த முடியும் என ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மதுபான ஒழுங்குமுறை அமைப்பான கலால் திணைக்களம், நிதியமைச்சருக்கு விளக்கமளித்து புதிய முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வெளிநாட்டமைச்சு ... (03ஆம் பக்கத் தொடர்)

முகவரியான slemb.ankara@mfa.gov.lk ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாமென்றும் வெளிநாட்டமைச்சு அறிவித்துள்ளது.

## எரிபொருள்...

களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின்மையம் மற்றும் 115 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் என்பன எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன.

அத்துடன், மத்துகம மின்னுற்பத்தி நிலையம், துல்கிரிய மின்னுற்பத்தி நிலையம் மற்றும் கெரவலப்பிட்டி மேற்கு முனைய மின்னுற்பத்தி நிலையம் என்பனவும் எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன. இன்று (26) மதியம் பத்தல மின்னுற்பத்தி நிலையமும் செயலிழக்கின்றமையால், மின்சார விநியோகத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்படுவதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவதாக சில அதிகாரிகள் அறிவிப்புக்களை வெளியிட்டுள்ள போதிலும், இதுவரையில் அவசியமான எரிபொருள் கிடைக்கப்பெறவில்லை என அந்த சபையின் பேச்சாளர் அண்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார்.

## 20 வருடங்களின் பின்னர் ...

கிழமை நோர்தாம்ப்டன்ஷயாரில் உள்ள அவரின் வீட்டில் வைத்து, அவரைக்கைது செய்ததாக பெருநகர பொலிஸின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 48 வயதான சந்தேகநபர் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டம் 2001இன் பிரிவு 51கீழ், குற்றங்கள் புரிந்தாரென்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு, விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2000ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலைச் சம்பவத்துடன் இந்நபர் தொடர்புடையவர். இந்த நடவடிக்கை குறித்து நிமலராஜனின் குடும்பத்தாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களுக்கு சிறப்பு அதிகாரிகள் ஆதரவளித்து வருகின்றனர். விசாரணைகள் தொடர்கின்றன.

விசாரணைக்கு உதவக்கூடிய தகவல்களைப் பெறுவதற்கு அதிகாரிகள் ஆர்வமாக உள்ளனர் – குறிப்பாக இங்கிலாந்தில் புலம்பெயர்ந்து வசிக்கும் இலங்கை சமூகத்தவர்களிமிருந்து, இத்தகவலை எதிர்பார்ப்பதாக பெருநகர பொலிஸின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைக்குப் பொறுப்பான தளபதி றிச்சர்ட் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

## திரவப் பால் கொள்வனவுகளின் முரண்பாடுகளை தீர்த்து வைக்கவும்

### விவசாய அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை



திரவப்பால் கொள்வனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு, பால் மற்றும் முட்டை கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் ஆகியோருக்குப் பணிப்புரை விடுத்தார்.

## உக்ரைன் மீது ரஷ்யா...

ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

நேட்டோ இராணுவ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த ரஷியா, உக்ரைன் எல்லையில் சுமார் ஒரு இலட்சத்தி ஐம்பதாயிரம் இராணுவ வீரா்களை குவித்ததால் எந் நேரமும் போர்ச் சூழல் உருவாகும் அபாயம் இருந்து வந்தது.

இதன்படி, உக்ரைன் மீது இராணுவ நடவடிக்கைளை மேற்கொள்ள ரஷிய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின் வியாழக்கிழமை உத்தரவிட்டார்.இதையடுத்து, ரஷ்யப் படைகள், உக்ரைனில் போர் தொடுக்கத் தொடங்கின. நேற்று முன்தினம் தலைநகர் கீவ் வரை ரஷ்ய படைகள் முன்னேறின. இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்தத் தாக்குதலுக்கு ஐ.நா., அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் உலகின் பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. போரை நிறுத்தவும் பல நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்தப் போரில் இரு தரப்பிலும் உயிர்ப்பலி அதிகரித்து வருகிறது. ரஷ்யா நடத்திய முதல்நாள் தாக்குதலில் 137 உக்ரைன் இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோதிமீா் ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார். மேலும், 316 பேர் காயமடைந்துள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும்பேசிய அவர், 'ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தனித்துப் போரிட்டு வருகிறது. உக்ரைனுக்கு உதவ எந்த நாடுகளும் இல்லை' என்று வேதனை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உக்ரைனிலிருந்து ஆண்கள் வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் உக்ரைன் மீது பல்முனை தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா மீது, பொருளாதார தடை விதித்துள்ளது அமெரிக்கா.

உக்ரைன் மீது ரஷியா பலமுனைத் தாக்குதல்களை வியாழக்கிழமை தொடங்கியது. இதில் 40 போா் உயிரிழந்ததாகவும், 11 விமான தளங்கள் உள்பட 74 இராணுவ நிலைகள் தகா்க்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், உக்ரைன் மீது இரண்டாவது நாளாக பலமுனைத் தாக்குதல்களை தொடங்கிய ரஷ்ய படைகள், உக்ரைன் தலைநகர் கீவ் நகர் மீது குண்டுகள் வீசி வருகின்றன.

இதனிடையே, போர் பதற்றம் நிறைந்த சூழலில் உடனடி நிதியுதவி அளிக்கத் தயாரென அறிவித்துள்ள உலக வங்கி, நெருக்கடியான நேரத்தில் உக்ரைன் மக்களுக்கு ஆதரவுடன் இருப்போமென உலக வங்கி குழுவின் தலைவர் டேவிட் மல்பாஸ் தெரிவித்துள்ளார். உக்ரைனிலிருந்து அகதிகளாக வரும் மக்களை வரவேற்க தயாராக உள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்திருந்திருக்கிறது. அத்துடன் ரஷ்யா மீது பொருளாதார தடை விதித்துள்ளது அமெரிக்கா. பொருளாதார தடையை விதித்ததற்காக ரஷ்யா சைபர் தாக்குதல் நடத்தினால் அதனை எதிர்கொள்ளத் தயரென்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் அரசும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரைனின் கேர்சன் என்ற பகுதியை கைப்பற்றியுள்ளதாக ரஷ்ய ராணுவம் தெரிவித்துள்ளது.

கேர்சன் பகுதியிலுள்ள அரசு கட்டடத்தில் ரஷ்ய தேசியக் கொடியை அந்நாட்டு இராணுவ வீரர்கள் ஏற்றியுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஏற்கனவே உக்ரைனின் செர்னோபில் மற்றும் மிலிடோபோல் நகர்களை ரஷ்ய படைகள் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஹ்ரானின் மனைவி...

பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

அவர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிய சட்டத்தரணி, பிரதிவாதிக்கு எதிரான சான்றாக முன்வைக்கப்படும் அவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சிங்கள மொழியில் உள்ளதால், அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அவசிமென நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார்.

குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள் சிங்கள மொழியில் காணப்படுவதால், அவை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கப்படல் வேண்டும் எனவும் அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் ஹாதியாவின் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

எனினும், சட்ட மாஅதிபர் திணைக்களம் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய, அரச சட்டத்தரணி மாதினி விக்கினேஸ்வரன், பிரதிவாதிகள் கோரிக்கைக்கமைய, மொழிபெயர்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியமில்லயென தெரிவித்து, தமது ஆட்சேபனையை முன்வைத்துள்ளார்.

எவ்வாறாயினும் அந்த ஆட்சேபனையை நிராகரித்துள்ள கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி, அரசியலமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள மொழி உரிமை தொடர்பில் ஆராய்கின்றபோது, பிரதிவாதி புரிந்துகொள்ளக் கூடிய மொழியில் , குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் குற்றப்பத்திர இணைப்புகள் காணப்பட்டால் மாத்திரமே நியாயமான வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து செல்லக் கூடிய சூழலை ஏற்படுத்தமென சுட்டிக்காட்டினார். இந்நிலையிலேயே வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 மற்றும் 26 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சாரா ஜஸ்மின் என்றழைக்கப்பட்ட புலஸ்தினி மகேந்திரன் என்பவர் வெடிபொருட்களை தயாரித்தமை மற்றும் அவற்றை சேகரித்து வைத்திருந்தமை தொடர்பில் அறிந்திருந்தும், அந்த தகவலை பொலிஸாருக்கு அறிவிக்காமை குறித்து

பயங்கரவாத தடைச் சட்டத்தின் 05 ஆம் அத்தியாயத்தின் அ, ஆ பிரிவுகளின் கீழ்,பாத்திமா ஹாதியாவுக்கு எதிராக குற்றப் பகிர்வுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## சபைக்குள் டோர்ச் லைட்...

எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்திற்குள் டோர்ச் லைட்டுகளை கொண்டு வந்தமை தொடர்பில், முறையான விசாரணை நடத்த வேண்டுமென ஆளும் கட்சியினர் சபாநாயகரிடம் கோரினர்.இதையடுத்தே இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென சபாநாயகர் நேற்று (25)சபையில் அறிவித்தார்.

நாட்டில் மின்வெட்டு இடம்பெறுவது தொடர்பில் கண்டனத்தை வெளியிடும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபைக்குள் டோர்ச் லைட்டுகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்துக்குள் சட்டவிரோதமான முறையிலேயே டோர்ச் லைட்டுகளை கொண்டு வந்துள்ளனரென ஆளும் கட்சியினர் கண்டனம் வெளியிட்டதுடன், இதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

அது தொடர்பில் நேற்று சபையில் கருத்த தெரிவித்த சபை முதல்வரன அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, நாம் பாரதூரமான சில விடயங்களை சபாநாயகரிடம் எடுத்துக்கூறியுள்ளோம்.

அது தொடர்பில் சபாநாயகர் நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம் என்றார்.

பாராளுமன்றத்தின் நலன்கருதி அவசர கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தியாவது இது தொடர்பில் கலந்துரையாட வேண்டியுள்தென்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல:

இதுபோன்ற சம்பவங்கள் பாராளுமன்றத்தில் இதற்கு முன்னரும் நடைபெற்றுள்ளன. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்தபோது, சபையில் மலர் வளையம் வைத்த சம்பவமும் உள்ளது. இதனால் இது தொடர்பான தீர்மானத்தை தீர்க்கமாக ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டும் என, சபாநாயகரைக் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

அச்சந்தர்ப்பத்தில் சபையில் ஒழுங்குப் பிரச்சினைய எழுப்பிய எதிர்க்கட்சி பாராளுமன்றம் உறுப்பினர் சமிந்த விஜேசிறி:

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் வசம் உத்தியோகபூர்வமான டோர்ச் லைட்டுக்கள் உள்ளன. அதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. சபைக்குள் டோர்ச் லைட்டுக்களைக் கொண்டு வந்தமை மூலமாக எவருக்காவது உயிர் ஆபத்தோ பாதிப்போ ஏற்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த ஆளும் கட்சி பிரதம கொரடா ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பாராளுமன்றத்திற்குள் டோர்ச் லைட்டுகளை அனுமதித்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் பணிகளை இடைநிறுத்த முயற்சிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அது தவறாகும். ஹரீன் பெர்ணான்டோ பையில் வைத்து டோர்ச் லைட்டைக் கொண்டு வந்துள்ளார். அது தனது தனிப்பட்ட ஒன்று என்று கூறிக் கொண்டு அவர் சபைக்குள் வந்துள்ளார்.

பின்னர் வெளியில் சென்று பொதியொன்றை கொண்டு வந்துள்ளனர். அதனைக் கொண்டு வர வேண்டாம் என்று பொலிஸ் அதிகாரிகள் தடுத்த போதும் அதனை கொண்டு வந்துள்ளனர். இந்த பாராளுமன்ற வரலாற்றில் குண்டுத்தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது. மிளகாய்த் தூள் தாக்குதல் என்பனவும் நடந்துள்ளன. இதனால் அந்த எம்.பி எப்படி அந்த பார்சலைக் கொண்டு வந்திருக்க முடியும்? அதன் ஊடாக பாராளுமன்றத்தில் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இதனைக் கருத்திற் கொண்டு அது தொடர்பாக பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்து விசாரணை நடத்துமாறு நாம், சபாநாயகரைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தவறு செய்திருந்தால், பொலிஸாரின் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தியிருந்தால், அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், பாராளுமன்றத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் நாம் சபாநாயகரைக் கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த சபாநாயகர், கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சில விடயங்களுக்கு இணங்கியுள்ளோம். அதனால், இதுபோன்ற பொருட்களை கொண்டு வர முடியாது. ஆகவே இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மாஅதிபருக்கு முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணையின் பின்னர் சபையில் அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்றார்.

## இலங்கைக்கு சுனாமி...

அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. இதற்கிடையில், வெளிநாட்டு ஊடக அறிக்கைகளின்படி, இந்தோனேஷியாவின் பிஎம்கேஜி புவி இயற்பியல் நிறுவனம், சுனாமி அல்லது பெரிய பேரழிவுக்கான உடனடி அறிக்கைகள் எதுவும் இல்லை என்று கூறியுள்ளது. கடலுக் கடியில் 10 கிமீ (6.21 மைல்) ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் சிங்கப்பூர் மற்றும் மலேசியா வரையிலும், மேற்கு சுமத்ரா மாகாணத்திலுள்ள படாங் மற்றும் ரியாவ் மாகாணத்தின் பெகன்பாரு ஆகிய நகரங்களிலும் வலுவாக உணரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. மனித உரிமைகள்...

மூல சமர்ப்பணத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட் முன்வைக்கவுள்ளார்.

இந்நிலையில், இலங்கை தொடர்பான உரையாடல் எதிர்வரும் மார்ச் (03) இடம்பெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான விஷேட பிரதிநிதிகள் குழு நேற்று ஜெனிவாவுக்கு சென்றுள்ளது.

மேலும் இலங்கை தொடர்பான அறிக்கை ஏற்கனவே அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், இலங்கை சார்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் அதற்கு பதிலளித்து உரையாற்றவுள்ளார்.

## பழைய தேர்தல் முறையில்...

தெரிவித்துள்ளதாகவும், குழுவின் தலைவரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். சகல தேர்தல்களின்போதும் தொகுதிவாரியில் 60 வீதம், விகிதாசார முறையில் 40 வீதம் என்ற அடிப்படையில் பிரதிநிதிகளை தெரிவு செயயைூம் கலப்பு தேர்தல் முறையிலான அறிக்கையை முறைப்படுத்துவதற்கு விஷேட தெரிவுக்குழு இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். அதற்கமைய, உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை நிலைப்பாடுகளை உருவாக்குவதற்காக வெற்றிபெற்ற கட்சி அல்லது குழுவுக்கு மேலதிகமாக இரண்டு ஆசனங்களை பெற்றுக்கொடுக்கவும் பரிந்துரை முன்வைக்க கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

## பிரான்ஸ் செனட் சபை...

முன்னெடுத்துள்ள கவனத்தில் கொள்ளப்படக் கூடிய காரணிகள் தொடர்பில் பிரான்ஸ் புரிதலுடன் செயற்படுமென எதிர்பார்ப்பதாக வெளியுறத்தறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகம் , இழப்பீட்டு அலுவலகம் , தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் உள்ளிட்ட தேசிய பொறிமுறைகள் குறித்தும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் விளக்கமளித்துள்ளார்.

பிரான்ஸ் செனட் சபையின், பிரான்ஸ் இலங்கை நட்புறவு குழுவின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இலங்கைக்கு சார்பாக பிரான்ஸ் செயற்படுவதற்கு அமைச்சர் பீரிஸ் இதன்போது நன்றியும் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை, அந்நியச்செலாவணி வீழ்ச்சியடைந்த தால், இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் அறிக்கையொன்றையும் அமைச்சர் இதன்போது முன்வைத்தார்.

காணாமல்போனார் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம், நிலையான அபிவிருத்தி இலக்குகள் சபை, மனித உரிமைகள் ஆணைக்குழு உள்ளிட்ட தேசிய பொறிமுறைகள் பற்றி அமைச்சர் இதன் போது கருத்து வெளியிட்டார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள குழு அதன் இரண்டாவது அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாகவும், அரசியலமைப்பு திருத்தங்கள் தொடர்பில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும், அவர்களது அறிக்கை விரைவில் கிடைக்கப்பெறும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். 42 ஆண்டுகள் பழமையான பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் தற்போது பாராளுமன்றத்தில் முன்மொழியப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பிலும் இதன் போதுதெளிவுபடுத்தப்பட்டது.மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக ஜெனிவா செல்லவுள்ளதாகவும் , இலங்கை கடந்த காலங்களில் முன்னெடுத்துள்ள கவனத்தில் கொள்ளப்படக் கூடிய காரணிகள் தொடர்பில் பிரான்ஸ் புரிதலுடன் செயற்படுமென எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

பொருளாதாரம், துறைமுகநகர் உள்ளிட்ட முதலீட்டு செயற்பாடுகள், நாட்டின் சுகாதார, கல்வி முறைமைகள் மற்றும் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்

# நிரந்தரமில்லா உலகில்...



ஒரு நாளில் வாழ்க்கை
அனைத்தையும் மாற்றிடாது
பல நாளில் துன்பங்கள்
உன்னோடு தொடர்ந்தும் வராது

மனிதர்கள் எல்லோரும்
இன்னல்களை கடந்திருப்பர்
மரணம்தான் முடிவென்றால்
மனித இனமோ மண்ணில் மறைந்திருக்கும்

பிறக்கையிலே எல்லோரும்
எதுவுமின்றி பிறந்திருப்பர்
மண்ணில் வாழ்கையிலே
அவர் தம் முயற்சியால் முன்னேறியிருப்பர்

பிறந்து விட்டோம் என்பதற்காய்
அலட்சியமாய் வாழாதே!
லட்சியங்கள் பல கொண்டு
முயற்சியை உன் செயலாக்கு

கடந்த காலம் மறந்து விடு
கற்ற அனுபவங்களை
நினைவில் கொள்
நிகழ்காலம் இதை சிந்தித்து
நிகழ்த்திவிடு உன் சாதனையை

எதிர்காலம் வரும் வேளை
எதிரிகள் வந்து விடலாம்
எதுவுமே நிரந்தரமில்லை
சோர்ந்து மட்டும் போகாதே!

மண்ணிலே மறைந்தாலும்
உன் பெயர் சொல்லும் இப்பூமி
மரணம் வரை காத்திருக்காது
நல்லதையே செய்திடு
எதிர்ப்புகளே வந்தாலும்
எதிர்த்து நிற்க பழகிடு

இந்த பூமியிலே எதுவும்
நிலையில்லை
நிலையான தர்மங்களை
நித்தமும் நீ
நிறைவாய் செய்திடு

**மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி.

# இன்னொரு தேவதாஸ்

ஈர தாலாட்டு
தோற்க்கடிக்கப்பட்ட முட் கம்பியில்
என் கடைசி முணு முணுப்பை
பிரகடனம் செய்கிறது
என் வயசு பற்றிய விசும்பல்!

தசை நார்களில் நஞ் சேற்றி
நீ இசை துரத்திய..
நாள் முதலாய்..
கலர் கனவுகளை காயப்படுத்தி
நீ புதைத்த சமாதியில்..
பூத்திருக்கிறேன்
மரண வெளிச் சங்கீதத்தோடு!

கர்வம் தடைப்பட்ட
மனச்சாட்சியின்
முரட்டுத் தனத்தை
முறுக்கி பிழிகிறேன்!
ஜீவனிக்குள் சில சுரப்பிகள்
சுய நினைவிழந்து
கிடக்கிறது கண்மணி!

இதய இறைச்சியை
தீண்டி தீண்டி
நியூவ்மோனியா நினைவுகளால்
நிலாவை காயப்படுத்தியவளே..
உன் நுரையீரல் மூளையில்..
உன் உதட்டுச்சாயம்...
உட்கார்ந்து இருக்கிறதே..
இதற்கு என்னடி அர்த்தம்?

ஆக்கிரமிப்புக்காரியே
என்னை அஸ்தியில்
சிறை வைத்து விட்டு...
சிலுவையை பிடிங்கிக் கொள்..
இன்னொருத்தியின் வருகைக்காய்
என் கல்லறையை...
தூசி தட்ட வேண்டிக்கிடக்கிறது!

பிரிவு பற்றிய பீட பூமியில்..
வரைவிலக்கணமாய்..
அருந்து தொங்குகிறேன்!
பிடிமானம் ஏதும் இல்லாமல்...
என்னை ஒரேயடியா கொண்டு விடு!

அப்போது தான்..



இந்த தேவதாஸின்
வாக்கு மூலம்
ஓய்வுக்கு வரும்.!

**டி. எல். நஸீம்**
கிண்ணியா 01

# நட்சத்திரக் கூட்டம்

ஆகாய வானத்தை
அழகு படுத்தி
ஆர்ப்பரித்து ஆலிங்கனம் தரும்
நட்சத்திரக் கூட்டங்கள்

பார்த்து பார்த்து பரவசமாக்கி
பார்வை ஒளி மயமாக்குவதும்
பந்த பாசமாக்குவதும்
நட்சத்திரக் கூட்டங்கள்

நாளைய விடியலை
நல்ல நாளாக்கி
நாட் காட்டியாகி
நல்வாழ்த்தரைப்பது
நட்சத்திரக் கூட்டங்கள்

அவனி சிறந்திட
ஆதவனின் வரவை கூறி
அரவணைத்து ஆனச தரும்
நட்சத்திரக் கூட்டங்கள்

நாள் நட்சத்திரம் பார்த்து
வதுவை நான் புனைய
திருமணப் பந்தலுக்கு
கட்டியம் கூறி
கலியாண நாளை கூறி
மகிழ்ச்சியை தருவது
நட்சத்திரக் கூட்டம்

**உடப்பூர் வீரசொக்கன்**



# வாழ்வைக் கொண்டாடு

வழிதவறி போனவர்க்கு
வாழ்க்கை ஒரு காடு
வழியறிந்து வாழ்பவர்க்கு
வசந்தமுள்ள வீடு
மொழியுணர்ந்துப் படிப்பவர்க்கு
முழு அறிவு ஏடு
விழி திறந்து நீ படித்து
வெற்றியதைத் தேடு
★
கிலிபிடித்துத் தவிப்பவர்க்கு
கேவலம் சுடு காடு
எலிபிடிக்கும் பூனையிலும்
ஈனமிவர் பாடு
சலிப்படைந்து மனமுடையும்
சஞ்சலத்தின் கூடு
நலிவடைந்து வாடுமிவர்
நடைவழியை மூடு
★
உளிசெதுக்கும் சிற்பமென
உனைசெதுக்கிப் போடு
விளிப்பதற்குள் சேவைசெய்து
விளம்புதலை நாடு
அளிப்பதிலே வள்ளலென
ஆகிவிடு ஈடு
களிப்புடனே வாழ்வதனைக்
கட்டிகொண் டாடு

**மெய்யன் நடராஜ்**



# போன்

கிரகம்பெல்லில் கருவாகி
மாட்டின்கூப்பரின்
கைவண்ணத்தில் பிறந்திட்ட
கையடக்க தொலைபேசி
தொலைதூர
குரலை ஒலிக்கச் செய்து
தசாப்தம் பல கடந்தும்
மக்கள் பயனடைந்தது
திசை மாறி...

தன்னை பல வடிவில்
உருமாற்றி
பற்பல சேவைகளை
தன்னுள் தாங்கி
மக்கள்
கையில் மலிவு விலையில்
தவழ்கின்ற செல்போன்....

சிறுவர்கள் முதல்
தள்ளாடும் கிழவிகள்
வரை பாகுபாடின்றி
பக்கட்டில் தன்
இரத்த உறவாய்
எடுத்துச்செல்லும்
உயிரில்லாத ஜீவன்....

நன்மைக்காய்
துணை நின்ற காலம்
அழிந்து
பல மணி நேரம்
தின்னும் இரக்கமற்ற
அரக்கன்
அலைபேசி....

கற்க நினைக்கும்
கபடமறியா மாணவனையும்
கலவி அறியா
இளம் வாலிபங்களையும்
கேம் என்னும் சுவையூட்டி
தன்னுள் புதைந்துள்ள
சுயறிவு அற்ற எந்திரம்....

காற்றலையில் இன்பமடைய
முகநூலாம், வட்சப்பாம், வைபராம்
இதற்காய்
கண் விழித்து தூக்கம்
தொலைக்கும் ஜீவன்களின்
ஆர்வம் அதிகரிக்க
ஏராளமாய் அலைவரிசைகள்....

அடிமையாகும் உள்ளங்களே!
அருகிலுள்ளவர்களிடம்
கதைப்பதற்கேனும்
கொஞ்சம் விடை கொடுங்கள்
உங்கள் செல்லப்பிள்ளை
அலைபேசி எனும்
தொல்லைபேசிக்கு....

**தோப்பூர்**

**முகம்மது முகைதீன் நௌபீக்**
தோப்பூர் குறூப் நிருபர்

# மறக்கமுடியாத அணைப்புக்கள்



முதல் அணைப்பு அது
முத்தான அணைப்பு அது
தாயின் மார்பினில்
நான் தூங்க
தாயின் கரங்களோ
எனை அணைக்க
சுகமான உறக்கம்
எனைத் தழுவிய
முதல் அணைப்போ...
தாயின் பாசமான
அணைப்பு...

படித்துப் பட்டம் பெறுகையில்
தோள் தட்டி அணைத்து
பெருமித முகத்தோடு
புன்னகை சிந்தும் தந்தையின்
முதல் அணைப்போ
பெறுமித அணைப்பு...

நாம் இருக்கிறோம்
பயம் எதற்கு
தனியானவள் அல்ல நீ
துணிந்து செல்லென்று
மார்தட்டிச் சொல்லி
தோள்கொடுக்கும்
உடன் பிறப்புக்களின்
முதல் அணைப்போ
தைரியமூட்டும் அணைப்பு...

இறுதிவரை
உன்னோடு தான்
இன்ப, துன்பத்திலும்
உன்னோடு தானென
முடிச்சிட்டு மணந்த
மன்னவனின்
முதல் அணைப்போ
பிரிக்க முடியாத உறவின்
வலுவான அணைப்பு...

எம் இரத்தத்தில்
பிறந்த குழந்தையை
கையில் சுமந்து அணைத்த
முதல் அணைப்போ
வாழ்வின் எல்லையில்லா
மகிழ்ச்சியை அள்ளித் தந்த
அணைப்பு...

எண்ணங்களின் எழுத்தழகி

**அறூபா அஹ்லா**
கல்முனை


திகதி 24.02.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4688
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 11,516,930.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 3 2 0 5 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 47,464,903.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2983
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,082,000.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 32 38 56 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,874,930.40

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1036
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,900,860.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 237,731,314.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J
சுப்பர் இலக்கம் 19
வெற்றி இலக்கங்கள் 08 11 12 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 718
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,712,500.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 11 18 53 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,073,293.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0029
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,208,280.00
இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 21 24 40 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,614,564.76

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 359
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,094,020.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 06 08 77 97
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,429,752.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416




# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

## திங்களன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 மீனவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை மன்றில் ஆஜர் படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையும் அவர்களின் இரண்டு படகுகளையும் கைது செய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அதனைதொடர்ந்து 12 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்றைய தினம் (25.02.2022) பகல் 11. 40 மணிக்கு ஆஜர்படுத்தப்பட்டபோது இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது எதிர்வரும் திங்கட்கிழமை இந்திய மீனவர்களை மன்றில் ஆஜர்படுத்துமாறும் அன்றைய தினம் இரண்டு வழக்குகளுக்கும் குற்றச்சாட்டு பத்திரங்களை தாக்கல் செய்யுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதே நேரம் நேற்றைய தினம் இந்திய துணை தூதரக அதிகாரிகளும் சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





யாழ்ப்பாண மரபுரிமை மையம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நேற்றையதினம் நல்லூர் இராசதானியின் தோரணவாசலின் புனர்நிர்மாண பணிகள் வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசியர் பரமு புஸ்பரட்ணம், யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உபதலைவர் பேராசிரியர் ரவிராஜ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (பருத்தித்துறைவிசேட, யாழ். விசேட நிருபர்கள்)

## உயிருக்கு போராடும் காட்டுயானை

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட நெல்லிமுறிப்பு குளத்தில் காட்டு யானையொன்று நடக்கமுடியாமல் உயிருக்கு போராடிவருகின்றது.

காலில் வெட்டுக்காயத்துடன் நடக்கமுடியாமல் வந்து யானை குளத்தில் கடந்த 18.02.2022 வீழ்ந்துள்ளது. இதனைதொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினால் யானைக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குளக்கரைப்பகுதியில் எழும்பி நடக்கமுடியாத நிலையில் யானை தண்ணீரில் வீழ்ந்துள்ளது. யானைக்கான சிகிச்சையளிக்கும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக்கத்தினர் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.



வன்னிப் பிரதேசத்தில் அனிச்சங்குளம் பகுதியில் தரம் 5 மாணவர்களுக்கான கட்டடம் பூமணியம்மா அறக்கட்டளையினரால் திருத்தி அமைக்கப்பட்டு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரனையை கனடா நாட்டில் வாழும் மோகனதாஸ் குடும்பத்தினர் பிரான்ஸ்சில் உள்ள பூமணியம்மா அறக்கட்டளை நிறுவனத்துக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஆண்டு 85 குழந்தைகள் உயிரிழப்பு

யாழ். விசேட நிருபர்

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 2021ஆம் ஆண்டு மாத்திரம் 85 சிசுக்கள் உயிரிழந்துள்ளதாக பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில், கடந்த ஆண்டு 5ஆயிரத்து 823 குழந்தைகள் பிறந்துள்ளன. அதேவேளை தாயின் கருவில் 28 வாரங்களின் பின்னர் கரு சிதைவு காரணமாக 46 சிசுக்கள் உயிரிழந்துள்ளதுடன், பிறந்து 7 நாட்களுக்குள் 39 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## இயக்கச்சி குண்டு வெடிப்பு சம்பவம்

# கைதானவர்களை விடுவிக்க கோரி தொடரும் உண்ணாவிரத போராட்டம்



யாழ்.விசேட நிருபர்

இயக்கச்சி குண்டு வெடிப்பு சம்பவத்தில் கைதானவர்களை விடுவிக்க கோரி யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கடந்த புதன்கிழமை முதல் தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக அவர்களின் உறவினர்கள் வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு யூலை மாதம் 03ஆம் திகதி இயக்கச்சி பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில், ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவரின் மனைவி நல்லதம்பி நகுலேஸ்வரியை முதலில் கைது செய்தனர்.

அதனை தொடர்ந்து, வைத்தியலிங்கம் நிர்மலதாஸ் மற்றும் இரத்தினசிங்கம் கமலாகரன் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

இதுதொடர்பில் வைத்திலிங்கம் நிர்மலதாஸின் மனைவி ராஜேஸ்வரி நிர்மலதாஸ் தெரிவிக்கையில்,

நான் ஒரு முன்பள்ளி ஆசிரியர். எனது கணவர் கைதடி ஆரம்ப சுகாதார பிரிவு வைத்தியசாலையில் சுகாதார பணியாளராக கடமையாற்றி வந்தவர். கடந்த 2020ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 06ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு அலுவலகத்திற்கு விசாரணைக்கு வருமாறு அழைத்திருந்தனர். அவருடன் நானும் சென்று இருந்தேன். விசாரணைக்கு என கணவனை மட்டும் உள்ளே அழைத்து சென்று இருந்தனர். சுமார் 3 மணி நேரம் நான் வெளியே காத்திருந்தேன். விசாரணைகள் முடியவடையவில்லை. பின்னர் என்னை வீடு செல்லுமாறு கூறி விட்டனர்.

அதன் பின்னர் மேலதிக விசாரணை என கணவனை வவுனியா, கொழும்பு என அழைத்து சென்று இருந்தனர். இயக்கச்சி பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த நபரின் தொலைபேசியில் எமது திருமண அழைப்பிதழ் இருந்தமையை எனது கணவரின் கைதுக்கு காரணமென தெரிவித்தனர். கணவர் கைது செய்யப்படும் போது , எமக்கு திருமணம் முடிந்து 157 நாட்களே ஆகி இருந்தன. கணவனை கைது செய்து 10 நாட்கள் கழித்து கணவன் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லை என என்னிடம் கூறி இருந்தார்கள். ஆனாலும் கணவனை விடுவிக்கவில்லை.

தற்போது வரை நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். விளக்கமறியல் காலம் 14 நாட்களுக்கு ஒரு தடவை நீடிக்கப்பட்டு வருகிறது என அவர் தெரிவித்தார்.

அதேவேளை இரட்ணசிங்கம் கமலாகரனின் மனைவி ஈஸ்வரி கமலாகரன் தெரிவிக்கையில், எனது கணவர் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் பணியாற்றி வந்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 06ஆம் திகதி கிளிநொச்சி காக்கா கடை சந்தி பகுதிக்கு விசாரணைக்கு வருமாறு தொலைபேசி ஊடாக கணவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பின் பிரகாரம் சென்ற போதே அவரை கைதுசெய்தனர்.

தற்போது 14 நாட்களுக்கு ஒரு தடவை விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டு வருகிறது.

குண்டு வெடிப்பில் உயிரிழந்த நபரின் தொலைபேசியில் எனது கணவரின் தொலைபேசி இலக்கம் இருந்தமையால் தான் அவர் கைது செய்யப்பட்டதாகவும் அதுவும் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்ததாக கூறப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் லீசிங் பணம் கட்டுவதற்கே வயோதிபப் பெண்ணை கொலை செய்தேன்'

## சோமசுந்தரம் அவனியூ கொலைச் சம்பவத்தின் சந்தேகநபர் வாக்குமூலம்

கரவெட்டி தினகரன் யாழ்.விசேட நிருபர்கள்

மோட்டார் சைக்கிள் லீசிங் பணம் கட்டுவதற்கு பணம் தேவைப்பட்டதால் வயோதிபப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்க சங்கிலியை அபகரித்துச் சென்றதாக சோமசுந்தரம் அவனியூ கொலைச் சம்பவத்தின் சந்தேகநபர் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகரில் தனிமையிலிருந்த வயோதிபப் பெண் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட இளம் குடும்பத்தலைவர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்கிழமை (22) அன்று யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பிரதேசத்தில் வீடொன்றில் தனிமையில் வசித்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது – 72) என்ற வயோதிப பெண் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் குடும்பத்தலைவரே கைது செய்யப்பட்டார்.

சம்பவ தினத்தன்று கொலை நடந்த வீட்டுக்கு அருகில் உள்ள சி.சி.ரி.வி கமரா பதிவில் கொலையாளி துவிச்சக்கர வண்டியில் பயணித்துள்ளார். அதனடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டவர் வியாழக்கிழமை காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் போது, வீட்டில் முதல் நாள் பூக்கன்றுகளை வெட்டி வேலை செய்தேன். மறுநாள் மிகுதி வேலையை செய்யுமாறு கேட்டிருந்தார்.

மறுநாள் சென்ற போது பட்டமரத்தை வெட்டுமாறு அயலில் உள்ள வீட்டில் கோடாரி, மண்வெட்டியை வயோதிப் பெண் வாங்கித் தந்தார். எனது மனைவிக்கு மோட்டார் சைக்கிள் லீசிங்கில் வாங்கிக் கொடுத்தேன். அதற்கான பணத்தை உறவினரிடம் வாங்கிக் கட்டியிருந்தேன். அவர் தன்னிடம் வாங்கிய 20 ஆயிரம் ரூபாய் பணத்தை மீளத் தருமாறு அடிக்கடி கேட்டார். இந்நிலையிலே தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வயோதிப் பெண்ணின் பின்னால் சென்று தலையில் தாக்கினேன். அவர் சுயநினைவற்றிருந்தார். அவரது சங்கிலியை அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டேன்" என்று தெரிவித்தார். அத்துடன் தனது வீட்டுக்கு பொலிஸாரை அழைத்துச் சென்ற சந்தேக நபர் பை ஒன்றிலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்ட கொழும்பு மாநகர சபை பிரதிமேயர் எம்.ஜ.எம். இக்பால் வலிகாமம் வடக்கு பிரதேச சபை தலைவரிடம் நூல்களைக் கையளித்தார். இதில் கொழும்பு மாநகரசபை உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

## 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் 'மானுடம் 2022' என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாட்டை எதிர்வரும் ஜூலை மாதம் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. 'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாடு தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் ஒழுங்கமைத்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# உக்ரைன் தலைநகரை நோக்கி ரஷ்ய துருப்புகள் முன்னேற்றம்

### பெரும் உயிர்ச் சேதம்: மக்கள் வெளியேற்றம்



முழு வீச்சில் இடம்பெற்று வரும் ரஷ்ய படையெடுப்பை முறியடிக்கும் முயற்சியில் உக்ரைன் இராணுவம் ஈடுபட்டிருக்கும் நிலையில், தலைநகர் கீவ்வுக்கு அருகில் உக்கிர மோதல் வெடித்துள்ளது.

தலைநகரின் புறநகர் பகுதியில் உள்ள விமானத் தளம் ஒன்றில் நேற்று வெள்ளிக்கிழமை கடும் மோதல் வெடித்திருப்பதோடு தலைநகர் கீழ் ரஷ்ய துருப்புகளிடம் வீழும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

உக்ரைனின் கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளால் கடந்த வியாழக்கிழமை ரஷ்ய படை தாக்குதலை ஆரம்பித்த நிலையில் ரஷ்ய தாக்குதல்கள் பல முனைகளிலும் இடம்பெற்று வருகின்றன. கீவ்வில் வெடிப்புகள் இடம்பெற்று வருகின்றன. அங்கு குறைந்தது அடுக்குமாடி குடியிருப்பு ஒன்று சேதமடைந்துள்ளது.

நகருக்குள்ளும் அதன் வடக்கு புறநகர் பகுதிகளிலும் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நாசக்காரர்கள் ஏற்கனவே தலைநகருக்குள் இருக்கலாம் என்று உக்ரைன் அரசு எச்சரித்துள்ளது.

வான் தாக்குதல்கள் உக்கிரமடைந்த நிலையில் கீவ்வில் இருக்கும் மெட்ரோ ரயில் நிலையத்தில் பொதுமக்கள் அடைக்கலம் பெற்றனர். இதில் மக்கள் செரிந்து வாழும் பொஸ்னியாக் பகுதியிலும் வான் தாக்குதல்கள் இடம்பெற்றள்ளன. இதில் குறைந்தது ஏட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

'புட்டின் நீங்கள் விலங்குபோல் அறுக்கப்படுவதை நாம் பார்க்க விரும்புகிறோம்' என்று கீவ் குடியிருப்பாளரான நிக் பீக் பி.பி.சி தொலைக்காட்சிக்கு தெரிவித்தார்.

தலைநகரில் ஏவுகணை தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாகவும் ரஷ்ய விமானம் ஒன்று சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் உக்ரைன் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் படையினர் என குறைந்தது 137 பேர் கொல்லப்பட்டிருப்பதாக உக்ரைன் குறிப்பிட்டுள்ளது. 100,000க்கும் அதிகமானவர்கள் ஏற்கனவே வீடுகளை விட்டு வெளியேறி இருப்பதாக ஐ.நா கணித்துள்ளது. குறைந்தது 1,000 உக்ரைனியர்கள் இரயில் மூலம் போலந்தின் ப்ரிசெமிசில் நகரை சென்றடைந்துள்ளனர்.

ரஷ்யா தனது படை நடவடிக்கையை ஆரம்பித்தது தொடக்கம் குறைந்தது 450 வீரர்களை அது இழந்திருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சர் பென் வொல்லஸ் குறிப்பிட்டுள்ளார்.

தொலைக்காட்சி உரையில் போர் பிரகடனத்தை வெளியிட்டிருந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், ஏதேனும் நாடு இதில் தலையிட முயன்றால் இதுவரை சந்திக்காத விளைவை எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

ஏவுகணை மற்றும் வான் தாக்குதல்கள் உக்ரைனிய நகரங்களில் மழை போல் பொழிந்து வருவதோடு ஊக்ரைனின் பரந்த எல்லைப் பகுதிகளின் மூன்று பக்கங்களில இருந்து டாங்கிகள் முன்னேறி வருகின்றன. ரஷ்யா உக்ரைன் எல்லைகளில் பல வாரங்கள் படைகளை குவித்து வைத்திருந்த நிலையிலேயே இந்த தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது.

தலைநகரை கைப்பற்ற ரஷ்ய பெரும் படை பலத்தை உருவாக்கி வருவதாக மேற்குலக உளவுத்துறை அதிகாரிகள் முன்னதாக எச்சரித்திருந்தனர்.

பெரும் குழப்ப சூழலுக்கு மத்தியிலும் தொடர்ந்து போராடுவதாக உக்ரைன் ஜனாதிபதி செலென்ஸ்கி உறுதி அளித்துள்ளார். புதிய இரும்புத்திரை விழுகின்றபோதும் தமது நாடு தனது மேற்கு பக்கத்தில் நீடிப்பதை உறுதி செய்வது தமது பணி என்று அவர் கூறினார்.

உக்ரைனின் அனைத்து பிராந்தியங்களிலும் உள்ள மேலதிக படையினரையும் செலென்ஸ்கி போருக்கு அழைதுள்ளார். ஆயுதம் சுமக்க முடியுமான அனைவரும் ரஷ்யாவை முறியடிக்கு முயற்சியில் இணையும்படி உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

தாக்குதலின் தீவிரம் பற்றி மேற்குலகத் தலைவர்கள் அதிர்ச்சி மற்றும் கோபத்தை வெளியிட்டுள்ளனர். பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய கூட்டணி நாடுகள் ரஷ்யாவை தண்டிக்கும் கடுமையான தடைகள் பற்றி உறுதி அளித்துள்ளன. எனினும் உக்ரைனுக்கு படைகளை அனுப்ப எந்த நாடும் முன்வரவில்லை.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் இடம்பெற்றுள்ள நேட்டோ என்ற வடக்கு அட்லான்டிக் ஒப்பந்த அமைப்பு, தமது துருப்புகளை ரஷ்யா எல்லை நோக்கி நகர்த்தியுள்ளது. சில உறுப்பு நாடுகள் உக்ரைனுக்கு இராணுவ உதவியை வழங்கியுள்ளன.

பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மெக்ரோன், ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் தொலைபேசி உரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இதில் தாக்குதல்களை உடன் நிறுத்தும்படி வலியுறுத்தி இருக்கும் மெக்ரோன், பாரிய தடைகள் பற்றியும் புட்டினை எச்சரித்ததாக பிரான்ஸ் அரசு குறிப்பிட்டுள்ளது. எனினும் இரு தலைவர்களும், 'தீவிரமாக மற்றும் வெளிப்படையாக தமது கருத்துகளை பரிமாறிக்கொண்டதாக' ரஷ்ய அரசு இந்த உடையாடல் பற்றி குறிப்பிட்டுள்ளது.

ரஷ்யா கீவ்வை கைப்பற்றி அரசாங்கத்தைக் கவிழ்க்க எண்ணுவதாக அமெரிக்கா மற்றும் உக்ரைனிய அதிகாரிகள் நம்புகின்றனர்.

## செர்னோபில் அணு நிலையத்தை கைப்பற்றியது ரஷ்ய இராணுவம்



செர்னோபில் அணு நிலையத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. இன்று ஐரோப்பாவுக்கே மிக அச்சுறுத்தலான ஒன்றுக்கு வெறுமனே அர்த்தமன்ற தாக்குதல் நடத்தப்பட்டதாக உக்ரைன் ஜனாதிபதியின் ஆலோசகர் மகைலோ பொடோலியக் இந்தத் தாக்குதல் குறித்து தெரிவித்துள்ளார்.

1986 இல் செர்னோபிலில் இடம்பெற்ற வெடிப்பு ஒன்று பாதிப்பு மற்றும் செலவு என இரண்டிலும் மனித வரலாற்றில் மிக மோசமான அணு அனர்த்தம் ஒன்றுக்கு வித்திட்டது.

ரஷ்யா தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பில் நிடித்தால் அவ்வாறான நிலை மீண்டும் ஏற்படக்கூடும் என்று ரஷ்ய ஜனாதிபதி எச்சரித்தார்.

"1986 இல் இடம்பெற்ற அவலம் மீண்டும் நிகழ்வதை தவிர்க்க எமது காவலர்கள் தமது உயிரை கொடுத்து வருகின்றனர்" என்று ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார். "இது ஒட்டுமொத்த ஐரோப்பாவுக்கும் எதிரான போர் பிரகடனமாக உள்ளது" என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அணுத் தளத்தில் மற்றொரு சுற்றுச்சூழல் அனர்த்தம் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக உக்ரைன் வெளியுறவு அமைச்சு எச்சரித்துள்ளது.

செர்னோபில் அணு நிலையத்தை சூழவுள்ள 32 கிலோமீற்றர் சுற்றளவு பகுதி 36 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இன்றும் பெரும்பாலும் உயிர்கள் வாழ தகுதியற்ற பிரதேசமாகவே உள்ளது. இந்த ஆலையின் மேலும் மூன்று உலைகள் கடந்த 2000 ஆம் ஆண்டு மூடப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன. 1986 கசிவுக்கு பின்னர் இந்த பகுதியில் கதிர்வீச்சு இன்றும் ஆபத்தான அளவிலேயே உள்ளது.

கடந்த வியாழக்கிழமை உக்ரைனுக்கு படையெடுத்த ஆரம்பத்திலேயே செர்னோபில் அணு நிலையம் உள்ள பகுதிக்கு ரஷ்ய துருப்புகள் உழைந்திருப்பதாக கூறப்படுகிறது.

## உக்ரைன் அகதிகளை ஏற்க அண்டைய நாடுகள் தயார்



ரஷ்யாவின் படையெடுப்பு காரணமாக உக்ரைனில் இருந்து வெளியேறும் அகதிகளை எதிர்கொள்ள உக்ரைனின் அண்டை நாடுகள் தயாராகியுள்ளன.

ரஷ்யாவின் வான் தாக்குதல்கள் தொடரும் நிலையில் தலைநகர் கீவ்வில் இருக்கும் மக்கள் கிராமப் பகுதி அல்லது ஐரோப்பிய ஒன்றிய எல்லைகளை நோக்கி வெளியேறி வருகின்றனர்.

சில நகரங்களில் வாகன நெரிசல் காணப்படுவதோடு சிலர் கால் நடையாக போலந்து மற்றும் ஹங்கேரி நாட்டு எல்லைகளை நோக்கு செல்கின்றனர்.

மனிதாபிமான நெருக்கடி மோசமானதாக மாற வாய்ப்பு இருப்பதாக ஐ.நா அகதிகள் நிறுவனத்தின் தலைவர் பிலிப்போ கிராண்டி தெரிவித்துள்ளார். 'இடம்பெயர்வுகள் பற்றி குறிப்பாக நாம் கவலை அடைந்துள்ளோம்' என்று கிரண்டி தெரிவித்தார்.

'நாட்டின் ஏனைய பகுதிகளில் அடைக்கலம் பெறுவதற்காக 100,000க்கும் அதிகமானவர்கள் ஏற்கனவே தமது வீடுகளை விட்டு வெளியேற ஆரம்பித்திருப்பதாக நாம் கணித்துள்ளோம்' என்று ஜெனீவாவில் இருந்து பேசிய அவர் குறிப்பிட்டார்.

உக்ரைனில் இருக்கும் மக்களுக்கு உதவி வழங்குவதற்காக உதவிகள் சேர்க்கப்படுவதாகவும் தற்போது இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வருவதால் அதனை செயற்படுத்த முடியாதிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் ஒன்றான உக்ரைனில் இருந்து வரும் அகதிகளை வரவேற்க தயாராக இருப்பதாக உக்ரைனின் ஐரோப்பிய அண்டை நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

காயமடைந்த நிலையில் நாட்டுக்குள் வரும் உக்ரைனியர்களுக்கு சிகிச்சை அளிக்க மருத்துவமனைகளை தயார் நிலையில் வைத்திருப்பதாக குறிப்பிட்டிருக்கும் போலந்து எல்லையில் அகதிகளை ஏற்கும் முகாம்களையும் அமைத்துள்ளது.

ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர் எல்லையை நோக்கி வருவதை பார்க்க முடிவதாக உக்ரைனின் தெற்கு எல்லை நாடான மோல்டோவா தெரிவித்துள்ளது.

அதிகளின் படையெடுப்பை கையாள்வதற்காக சுலோவாக்கியா மற்றும் ஹங்கேரி எல்லைக்கு படைகளை அனுப்பியுள்ளன.

## உக்ரைனியக் குடியிருப்பாளர்கள் மெட்ரோ நிலையங்களில் தஞ்சம்



ரஷ்ய படையெடுப்பின் முதல் நாள் தாக்குதலில் இருந்து தப்புவதற்கு உக்ரைனியர்கள் நிலத்தடி மெட்ரோ ரயில் நிலையங்களில் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

கீவ் மற்றும் கார்கிவ் மெட்ரோ நிலையங்களில் முதியவர்கள் மற்றும் குழந்தைள் உட்பட குடியிருப்பாளர்கள் மற்றும் குடும்பங்கள் இரவை கழிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன. பலரும் பைகள் மற்றும் தமது உடைமைகளை வைத்துக் கொண்டு போர்வையால் போர்த்தியபடி உறங்குவதை காணமுடிகிறது.

உக்ரைனில் இரவில் ஊரடங்கு அமுலில் இருந்தபோதும் குண்டு தாக்குதலில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் இடமாக மெட்ரோ நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான உக்ரைனியர்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பு தேடி அண்டை நாடுகளில் அடைக்கலம் பெற்றிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு வெளியேறியோறின் எண்ணிக்கை 100,000க்கும் அதிகம் என கூறப்பட்டுள்ளது.

உக்ரைனின் மேற்குப் பக்கமாக இருக்கும் போலந்தில் அகதிகளின் வருகைக்காக எல்லையில் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## சுமத்ரா நிலநடுக்கம்: இருவர் உயிரிழப்பு



இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் வடக்கே ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இருவர் உயிரிழந்திருப்பதாக தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சுமார் 9.40 மணியளவில் 6.2 ரிக்டர் நிலநடுக்கம் சுமத்ராவின் சில பகுதிகளை உலுக்கியது. அது 10 கிலோமீற்றர் ஆழத்திலிருந்து தொடங்கியதாகக் கூறப்படுகிறது.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இந்தோனேசியாவின் பக்கத்து நாடுகளில் நிலநடுக்கத்தின் அதிர்வுகள் உணரப்பட்டன. நிலத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் சுனாமிப் பேரலை ஏற்படுவது குறித்து எச்சரிக்கை விடுக்கப்படவில்லை.

மலேசியாவின் கோலாலம்பூர் மாநிலத்தில் சில பகுதிகளில் நிலநடுக்கத்தின் அதிர்வுகள் மிக அதிகமாக உணரப்பட்டதால் சிலர் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

ஆனால் அங்கு யாரும் காயமடைந்ததாகவோ கட்டடங்கள் சேதமடைந்ததாகவோ தகவல் இல்லை.

## நாட்டிலேயே தங்கி இருக்க உக்ரைன் ஜனாதிபதி முடிவு



உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி தொடர்ந்து நாட்டிலேயே தங்கியிருக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

அவரும் அவரது குடும்பத்தினரும் ரஷ்யப் படையினரின் முதன்மையான இலக்காக இருக்கும்போதும் செலென்ஸ்கி அவ்வாறு கூறியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு உரையாற்றிய அவர் வெளிநாட்டுத் தலைவர்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். ஆனால் நேட்டோவின் செயல்பாடு ஏமாற்றமளிப்பதாகத் செலென்ஸ்கி கூறினார்.

பாதுகாப்புக் கூட்டணியினர் உக்ரைனுக்குள் வந்து உதவ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். ஆனால் எவரும் அவ்வாறு உதவ முன்வருவதைப் பார்க்க முடியவில்லை என்று செலென்ஸ்கி கூறினார்.

சண்டையிடுவதற்காக உக்ரைனுக்குப் படையினரை அனுப்பப் போவதில்லை என்று நேட்டோ திரும்பத் திரும்பக் கூறிவந்தது. கூட்டணி வசமுள்ள கிழக்குப் பகுதிக்குக் கூடுதல் படையினரை அனுப்பிவைக்கப் போவதாக மட்டும் அமெரிக்கா கூறியிருந்தது.

# தர்கா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி
# 105வது வருடப் பூர்த்தி, 7வது பட்டமளிப்பு விழா இன்று


மத்ரஸாவின் அழகிய தோற்றம்

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப காலம் தொட்டு சன்மார்க்க கல்வியிலே ஆர்வமிக்கவர்களாகக் காணப்பட்டார்கள். இதற்காக முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் இஸ்லாமிய மார்க்கக் கல்வியைப் போதிக்கும் ஆலிம்களை உருவாக்குகின்ற அரபு மத்ரஸாக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசின் எந்தவித உதவியும் இன்றி அப்பிரதேச முஸ்லிம் மக்களது, முக்கிய தனவந்தர்களது உதவியையும் முகாமைத்துவத்தையும் கொண்டே இம்மத்ரஸாக்கள் இயங்கி வருகின்றன.

சன்மார்க்கக் கல்விக்கு உதவுவதன் மூலம் அழிவில்லா பெரும் ஈடேற்றத்தினை பெற்றுக் கொள்ள முடியும்மென்ற ஆர்வத்தில் இக்காரியம் நாடு பூராகவும் நடைபெற்று வருகிறது. இலங்கைத் திருநாட்டில் 100 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அரபுக் கல்லூரிகள் வரிசையில் தர்கா நகரில் அமைந்துள்ள முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியும் ஒன்றாகும்.

சபையினதும் முயற்சி முக்கிய காரணமாகும் என குறிப்பிடலாம்.

முஅய்யிதுல் இஸ்லாம் அரபிக் கலாசாலையின் ஆரம்பகால மௌலவி ஆசிரியர்களாக மர்ஹூம்களான ஸெய்னுல் ஆப்தீன் ஆலிம் , சம்சுதீன் ஆலிம் ஆகியோர் சேவை செய்தார்கள். 1923 ஆம் ஆண்டு காலியைச் சேர்ந்த மர்ஹூம் மௌலவி அலியார் மரிக்கார் ஆலிம் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார்கள். இவரது காலத்தில் கல்லூரி பெரும் வளர்ச்சி காண ஆரம்பித்தது. முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் புகழ் நாடெங்கும் பரவியது.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்ததுடன் இந்தியாவிலிருந்து கூட கல்வித்தாகம் கொண்ட மாணவர்கள் மார்க்கக் கல்வியைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். இது கல்லூரியின் ஆரம்ப பொற்காலம் என

தின் மூலம் கிடைக்கப் பெற்ற நன்கொடை பயன்படுத்தப் பட்டது. அத்துடன் புதுக்கட்டத்தின் மூன்றில் ஒரு பகுதி உள்ளூர், வெளியூர் தனவந்தர்களது உதவியைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

வகுப்பறைகள், வாசிக சாலை, விடுதி, கூட்ட மண்டபம் போசனசாலை உள்ளடங்களாக பூர்த்தியான கட்டடத் தொகுதியை நிறைவு செய்து கொள்வதில் தர்கா நகரைச் சேர்ந்த கல்லூரியின் பழைய மாணவரான அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்கள் தான் தொழில் புரியும் ஐக்கிய அரபு குடிய



## விழாவின் பிரதம அதிதி
**சங்கைக்குரிய அஷ்ஷெய்கு சுகைப் ஆலிம்**
**(அரூஸிய்யதுல் காதிரி , ஜலாலி ஜமாலி)**

## முஹம்மத் நஜீப் இப்னு அமீர் ஆலிமின் வாழ்த்துச் செய்தி



105வது வருட பூர்த்தியையும் கடந்த நான்கு வருடங்களாக இக்கலாபீடத்தில் கற்றுத்தேர்ந்த மாணவர்கள் ஆலிம்களாக பட்டம்பெற்று வெளியேறுவதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1930 ஆம் ஆண்டு எனது தகப்பனார் அமீர் ஆலிம் அவர்கள் இக்கல்லூரியில் ஆரம்ப கல்வியை தொடங்கினார். நானும் பாடசாலை பருவத்தில் மாலைநேர வகுப்பில் எனது ஆரம்ப மார்க்கக் கல்வியை கற்கத் தொடங்கினேன். அந்த அடிப்படையில் 13/08/2004 அன்று தற்போது அமைந்திருக்கும் இக்கட்டடத்தை எனது திருக் கரங்களால் திறந்து வைக்க அல்லாஹுத்த ஆலா எனக்கு வழிவகுத்தான். அதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைவதோடு அல்லாஹ்வை புகழ்கின்றேன். இன்று பட்டம்பெற்று வெளியேறும் ஆலிம்கள் எதிர் காலத்தில் எமது நாட்டுக்கும் சமுதாயத்துக்கும் உதவக்கூடிய முறையில் பெரும் முப்திகளாக மாற வேண்டும் என்பது எனது ஆசையாகும்.

1918ஆம் ஆண்டு முதல் கல்லூரி ஆரம்பித்தது தொட்டு இன்று வரை கல்லூரிக்காக யார் யாரெல்லாம் தனது உடலினால், உள்ளத்தினால், பணத்தால், கல்வி அறிவினால் உதவி ஒத்தாசை செய்கிறார்களோ அனைவருக்கும் அல்லாஹுத்தஆலா நற்பாக்கியங்களை வழங்க வேண்டுமென பிரார்த்திக்கிறேன்.

## கல்லூரி அதிபர் மௌலவி அஸ்மிகானின் வாழ்த்துச் செய்தி



நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் : ஒவ்வொரு காலப்பகுதியிலும் நீதமானவர்களே இந்த அறிவை சுமப்பார்கள். அவர்கள் அளவு கடந்தவர்களின் திரிவுபடுத்தலையும், வீணானவர்களின் கருத்து திருடலையும், மடையர்களின் வலிந்துரையையும் இல்லாமலாக்குவார்கள். (முஸ்னத் அஹ்மத்) மேலே கூறப்பட்ட பொன்மொழிக்கு ஏற்ப எமது முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக்கல்லூரி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீதமான உலமாக்களை உருவாக்கி புனித தீனுல் இஸ்லாத்தில் திரிவுபடுத்தல் ஏற்படுத்துவதை இல்லாதொழிக்கக்கூடிய, கருத்து திருடலை அடியோடு களையக்கூடிய, வலிந்துரைகளை தடுத்து நிறுத்தக்கூடிய உலமாக்களை உருவாக்கி வந்துள்ளதோடு இன்றும் அப்பணி சிறப்பாக நடைபெறுகிறது. தலைசிறந்த இறை பக்தியும் அறிவும் ஆற்றலும் பணிவும் ஒழுக்கமும் மிக்க உஸ்தாத்மார்கள் இந்த கல்லூரியை வழிநடத்தியிருப்பதை கல்லூரியின் பழைய மாணவர் என்ற அடிப்படையிலும், வரலாறுகள் மூலமும் அறிய முடிகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இக்கல்லூரியின் முன்னேற்றத்துக்காக பாடுபட்ட, பாடுபட்டுக்கொண்டிருக்கக்கூடிய அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

அதிலும் முன்னாள் நிர்வாக சபை தலைவர்களான இஸ்மாயில் மாஸ்டர், சுஹைப் அதிபர், மெனேஜர் அன்ஸார் ஹாஜியார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். தற்போது கலீபதுஷ் ஷாதுலி மஸா ஆலிம் அவர்களது தலைமையில் ஏனைய நிர்வாக சபையினருடைய பாரியபங்களிப்புடன் இக்கல்லூரி முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றமை விசேட அம்சமாகும்.

## 2017, 2019, 2021 ஆண்டுகளில் பட்டம் பெறும் மத்ரஸா மாணவர்கள்



### பட்டம் பெறும் மாணவர்களின் பெயர்கள்

2017
1.மௌலவி R ரிபாஸ் (முஅய்யிதி) ஆண்டிகம
2.மௌலவி F.R மஹ்மூத் (முஅய்யிதி) மாத்தளை
3.மௌலவி M.F.M பஸ்லூன் (முஅய்யிதி) ஆண்டிகம
4.மௌலவி A.K ஸெய்யித் றிழ்வான் (முஅய்யிதி) வெலிகம
5.மௌலவி M.F.M அஸதுல்லாஹ் (முஅய்யிதி) ஏறாவூர்
6.மௌலவி M.N.M ரியாஸ் (முஅய்யிதி) பாணதுறை
7.மௌலவி M.A.M அஸ்லம் (முஅய்யிதி) தர்காநகர்

2019
1.மௌலவி M.H.M ரில்பாத் (முஅய்யிதி) பொலன்னறுவை
2.மௌலவி H.K.M முப்றான் (முஅய்யிதி) தங்கல்லை
3.மௌலவி M.Z.M உமைர் (முஅய்யிதி) திக்வெல்ல
4.மௌலவி I.M ரினாஸ் (முஅய்யிதி) ஆண்டிகம
5.மௌலவி A.M அப்துல் ஹக்கீம் (முஅய்யிதி) ஆண்டிகம

2021
1.மௌலவி AG.M நஸீஹ் (முஅய்யிதி) காலி
2.மௌலவி S.I.M இன்ஸாப் (முஅய்யிதி) தர்காநகர்
3.மௌலவி M.S.M மின்ஹாஜ் (முஅய்யிதி) பேருவலை
4.மௌலவி R.M முஸ்தாக் (முஅய்யிதி) மன்னார்
5.மௌலவி A.M நஸீம் (முஅய்யிதி) ஓட்டமாவடி
6.மௌலவி M.R அப்துர் றஹ்மான் (முஅய்யிதி) கெக்கிராவ


வாசிகசாலை


கணனிக்கூடம்




வகுப்பறை

தேசிய கல்விக்கென பல சாதனைகளைக் கொண்டு வரலாறு படைத்த தர்காநகரிலே 1918 ஆம் ஆண்டு சன்மார்க்கக் கல்வியை வழங்குவதற்காக கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்து தங்கி நின்று சிறந்த உலமாக்களிடம் கல்வியைக் கற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி கலாசாலையை ஆரம்பிப்பதில் முன்னோடிகளாக திகழ்ந்தவர்கள் மர்ஹூம்களான ஐ.எல்.எம் சேஹு அப்துல்லா ஹாஜியார், சீ.எம். ஹாமிட் மரிக்கார் ஹாஜியார், அஹமட் அப்துல்லாஹ் ஹாஜியார், ஏ.கே. காசிம் ஹாஜியார் ஆகியோர்களும் அவர்களுக்கு துணையாக மர்ஹூம்களான எம்.எல்.எம் அப்துல் றஹ்மான் மரிக்கார் உதுமான் லெப்பை அவர்களும் ஆவார்.

இக்காலப்பகுதியில் பணிப்பாளர் சபையில் மர்ஹூம்களான முன்னாள் தர்கா நகர் பட்டின சபைத்தலைவர் ஏ.ஆர். முஹம்மத், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அதிபராக கடமை புரிந்த ஐ.எல்.எம். இஸ்மாயில் ஆகியோர் தமது மேலான பங்களிப்பை வழங்கி கல்லூரியின் நீண்டகால வளர்ச்சிக்கு உதவி உள்ளார்கள்.

ஸாஹிராக் கல்லூரியின் முன்னாள் அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் ஐ.எல்.எம் சுஹைப் அவர்கள் கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலம் தொட்டு இந்த அரபுக்கலாசாலையின் வளர்ச்சியில் மிகவும் ஆர்வத்துடன் செயற்பட்டு வந்தார். அத்துடன் கல்லூரியின் அண்மைக் கால வளச்சிக்கு அவர்களதும் பணிப்பாளர் குறிப்பிடலாம். மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக அரிய பல நூல்கள் கொண்ட ஒரு நூல் நிலையமும் திறந்து வைக்கப்பட்டது.

பிற்காலப் பகுதிகளில் பதுளையைச் சேர்ந்த மௌலவி அப்துல் கபூர் ஆலிம், வெலிகமவைச் சேர்ந்த முக்தார் ஆலிம், அக்குரணையைச் சேர்ந்த செய்னுல் ஆப்தீன் ஆலிம், கொழும்பு யஹியா ஆலிம், வெலிகமவைச் சேர்ந்த மௌலவி சித்தீக் ஆலிம், களுத்துறையைச் சேர்ந்த பைரூஸ் ஆலிம், மாதம்பையைச் சேர்ந்த அபுஸாலி ஹஸரத், வெலிகமவைச் சேர்ந்த ஏ.ஆர் எம் அதாரித் ஆலிம் போன்றோர்கள் அதிபர்களாக இருந்து மத்ரஸாவின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை மேற்கொண்டார்கள்.

1994 ஆம் ஆண்டு அதிபராக பொறுப்பேற்ற அக்குரணையைச் சேர்ந்த அல்ஹாஜ் மௌலவி ஏ.ஐ.எம் அபூதாலிப் அவர்களது காலப் பகுதியில் கல்லூரியில் மறுமலர்ச்சி ஏற்பட்டது எனக் குறிப்பிடலாம். இதுகால வரையிலும் தர்காநகர் பெரிய பள்ளிவாசலின் ஒரு பகுதியில் இயங்கி வந்த மத்ரஸா வேறு தனியான கட்டிடத்திற்கு மாற்ற வேண்டும் என பணிப்பாளர் சபையை வலியுறுத்தி வேண்டிக் கொண்டதால் அல்லாஹ்வின் உதவியாள் அதனை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்பையும் ஏற்படுத்தினார்கள். தற்போது மத்ரஸா நடைபெற்று வருகின்ற சகல வசதிகளையும் கொண்ட புதுக் கட்டடம் 1996 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு முதல் கட்ட வேலையை ஆரம்பிப்பதற்காக ஐக்கிய அரபுக் குடியரசு ராஜ்ஜியத்தில் உள்ள அல் நஹ்யான் நம்பிக்கை பொறுப்பு நிதியத்

ரசு இராஜ்ஜியத்தைச் சேர்ந்த ஒரு தனவந்தரின் உதவியைப் பெற்றுக் கொடுத்த இவரின் பங்களிப்பு நன்றியுடன் ஞாபகப்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். மேற்படி கட்டிடத்தின் அடிக்கல் அலவிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் மர்ஹூம் அஷ்ஷெய்ஹ் முஹம்மது ஹம்ஸா ஆலிம் பின் அப்துல்லா ஆலிம் அலவியதுல் காதிரி அவர்களால் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸ்ஸெய்யத் அலவி மௌலானா அவர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

இக்கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு முதல் மௌலவி அல்ஹாஜ் எஸ்.எச்.எம் ஜஃபர் (பாரி), மௌலவி எம். ஏ. எம் அஸ்மிகான் (முஅய்யிதி), மௌலவி ஏ.எஸ்.எம் இக்ராம் (முஅய்யிதி) ஆகியோர் அதிபர்களாகக் கடமை புரிந்துள்ளார்கள். 2010 முதல் 2015 வரை மௌலவி எம் எஸ் அஹ்மத் (மஹ்லரி) அவர்கள் கடமையாற்றி வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்றார்கள். அதன் பிறகு இலங்கையில் தலைசிறந்த மூத்த அறிஞர்களில் ஒருவரும் பல தேர்ச்சிபெற்ற உலமாக்களை தனது கரங்களால் உருவாக்கியவரும் தனது வாழ்நாளையே மத்ரஸா பணிக்காக அர்ப்பணித்த அல் உஸ்தாத் அப்துல் வாஹித் (பஹ்ஜி) அவர்கள் 2015 முதல் 2019 வரை கடமையாற்றினார். அவர்களோடு இணைந்து பணியாற்றிய பன்னூலாசிரியரான மௌலவி அஸ்மிகான் (முஅய்யிதி) அவர்களின் வழி நடாத்தலில் தற்போது கல்லூரி வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அவருக்கு பக்கபலமாக நிர்வாகத்தினரும் பழைய மாணவர்கள் ஒன்றியமும் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். இக் கல்லூரி பழைய மாணவர்கள் கல்லூரி வளர்ச்சிக்காக நன்கொடைகளை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் எம்மை விட்டு பிரிந்த மிக நீண்ட காலம் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் மெனேஜராகவும் கடமையாற்றிய மர்ஹூம் அன்சார் ஹாஜியார் பாராட்டப்பட வேண்டியவராகும். அன்னாரின் சேவை ஈடுசெய்ய முடியாததாகும். முன்னேற்றப்பாதையில் வீருநடை போடும் மேற்படி கல்லூரியின் பணிப்பாளர் சபைத் தலைவராக தர்காநகர் ஜமாத் கவுன்ஸில் தலைவரும், கலீபதுஷ்ஷாதுலியுமான அல் ஹாஜ் மௌலவி மஸா ஆலிம் இருப்பதோடு ஏனைய நிர்வாக அங்கத்தவர்கள் உறுதுணையாக இருக்கிறார்கள்.

**அகில உலக அரூஸியத்தில் காதிரியா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய செய்ஹ் நாயகம் அல்லாமா அப்ழலுல் உலமா தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம் பாதில்ஜமாலி, பீ.ஏ. ஜலாலி அன்னவர்கள் பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பது விஷேட அம்சமாகும்.**

பேருவளை விசேட நிருபர்
பி.எம்.முக்தார் ...




வாகரை முதல் மண்முனைப்பற்று வரை

# வீதி அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

## சிவனேசதுரை சந்திரகாந்தன் எம்.பியின் முயற்சிக்கு பலன்



மட்டக்களப்பு குறுப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேசம் தொடக்கம் வாழைச்சேனை வரையிலும் வாழைச்சேனை தொடக்கம் மண்முனைப் பற்று பிரதேசம் வரையிலுமாக சுமார் 4700 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 89 கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் உரியநடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் BT 1, BT 2 திட்டத்தின் மூலம் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உலக வங்கியின் நிதியின் கீழ் சுமார் 138 கிலோ மீற்றர் வீதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீதி அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் நல்லாட்சி அரசில் அந்த வேலைத் திட்டம் அவ்வாறே நிறுத்தப்பட்டிருந்தது.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் பிரதம மந்திரியின் கவனத்திற்கு விடயத்தினை கொண்டு சென்று குறித்த வீதி அபிவிருத்திப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயலாளர் தலைமையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுமார் 89 கிலோ மீட்டர் வீதிகளையும் 5 தொகுதிகளாகப் பிரித்து உடனடியாக வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் செயலாளரினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட குழுவினரும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயலாளர் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# திருமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக நியமனம்



முள்ளிப்பொத்தானை குறுப் நிருபர்

திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திருமதி கே. விஜயதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். வியாழக்கிழமை (24) இவர் தம் கடமைகளை மாவட்ட செயலகத்தில் சுபநேரத்தில் ஆரம்பித்தார்.

இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர உத்தியோகத்தரான இவர் 1994ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவை திறந்த பரீட்சை மூலமாக திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்டார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம், குச்சவெளி பிரதேச செயலகங்களில் உதவி திட்டமிடல் பணிப்பாளராகவும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட விவசாய பணிப்பாளராகவும்(பதில்) கடமையாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் பதவியை பெற்றுக் கொள்வதற்கு முன்னர் இவர் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, கல்விச்சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றினார்.


இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**கேள்வி அறிவித்தல்**

**Procurement of a Brand New Maintenance and Emergency Response Tug (MERT)**

**B/17/2022**

**பிற்சேர்க்கை**

மேலேயுள்ள தலைப்பில் இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக ஏற்கனவே விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்றுக் கொண்ட வளமான விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் அழைக்கின்றது.

1.6.1 ஆம் உப-வாசகத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியான ''இல. 109, காலி வீதி, கொழும்பு-03'' என்பதை தயவு செய்து நீக்கிவிட்டு கீழே வழங்கப்பட்டுள்ள பிழைதிருத்தப்பட்டுள்ள முகவரியை பதிலீடு செய்யவும்.

முன்னைய புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

இதனால் ஏற்பட்டுள்ள எந்தவொரு அசௌகரியங்களுக்காகவும் இபெகூ மன்னிப்புக் கோருகின்றது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, டொக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094 11 5455335**
**தொலைநகல்: 0094 11 5455424**


# பெண் தலைமை குடும்பங்களுக்கு வீட்டுத் தளபாடங்கள் அன்பளிப்பு




துறைநீலாவணை நிருபர்

அம்பாறை மாவட்ட அரசு சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு வளமான வாழ்வுக்கு கைகொடுப்போம் என்னும் வேலைத்திட்டத்தின் கீழ் பெண்கள் தலைமை தாங்கும் தேவையுடைய குடும்பத்திற்கான வீட்டுத் தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை (24) இடம் பெற்றது.

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பின் தலைவர் ஐ எம் நிஸ்மி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ எம் அப்துல் லத்தீப், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம் ரீ எம் சரீம், பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் செயலாளர் ஏ புஹாது, ஹிஜ்ரா சமூக சேவைகள் அமைப்பின் தலைவரும் நிந்தவூர் அனர்த்த முகாமைத்துவ அணியின் செயலாளருமான எம் எஸ் எம் நிப்றாஸ் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

# குளங்களுக்கு அழகு சேர்க்கும் பூக்கள்

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)



கிழக்கு மாகாணத்தில் பெரும்பாலான சிறு குளங்கள் நிரம்பியுள்ள நிலையில் அக்குளங்களுக்கு அழகு சேர்க்கும் வண்ணம் வெண்தாமரை, அல்லி, மற்றும் வெங்காயத்தாரை போன்றன பூத்துக்குலுங்குவதையும், அதனை அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் பார்த்து இரசித்து வருவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரியபோரதீவு பெரியகுளம், கோவில்போரதீவுக்குளம், பொறுகாமம்குளம், வெல்லாவெளிக்குளம், பழுகாமத்துக்குளம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் உள்ள சிறு குளங்களில் இக்காட்சி அப்பகுதிக்கு மேலும் அழகு சேர்ப்பதாக அப்பகுதிவாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் நாளை 13 வது திருத்தம் தொடர்பில் கருத்துப்பகிர்வு நிகழ்வு

( மண்டூர் குறுப் நிருபர் )

தமிழ்த்தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதிகாரப் பகிர்வில் 13வது திருத்தத்தின் நோக்கு நிலை கருத்தரங்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர்கூடத்தில் நாளை (27) ஞாயிற்றுக்கிழமை காலை 10, மணிக்கு இடம்பெறவுள்ளது. வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையிலான இந்நிகழ்வில், தமிழ்பேசும் மக்களின் ஐக்கியமும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பில் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும் இராஜதந்திர நோக்கு நிலையில் தமிழர் அரசியல் எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் யதீந்திராவும் கிழக்கு மக்களின் இருப்பும் அரசியல் அணுகுமுறைகளும் எனும் தலைப்பில் த.வசந்தராசாவும் மற்றும் அறிவாந்த சமூகமும் அரசியல் இருப்பும் தொடர்பாக வா.குணாளனும் உரையாற்றும் அதேவேளை, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.


**Repeat Your ad For Better Offers**



## மீளப் பெறாத அடகுப் பொருட்களைப் பகிரங்க ஏலத்தில் விற்றல்

உடிஸ்பத்துவை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் நான்கு வங்கிகளிலும் 2020.06.30ஆம் திகதி வரை அடகு வைத்து மீளப் பெறாத தங்க நகைகளை வரும் 2022.03.11 வரை கிராமிய வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வட்டியை செலுத்தி ஏலத்தில் விற்பதை தடுக்கலாம். இல்லையெனில், வரும் 2022.03.12ஆம் திகதி காலை 9.00 மணிக்கு உடிஸ்பத்துவை பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**இங்ஙனம்**
**முகாமையாளர்,**
**'உடிஸ்பத்துவ பலநோக்கு கூட்டுறவு சங்கம்.**

2022.02.26
**தொலைபேசி இலக்கம்.**
**081-2053740**



## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

**வலு சக்தி அமைச்சு**

**B/21/2022**

**காணியொன்றின் கொள்வனவிற்காக விலைமனுக் கோரல்**

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தினால், மேற்கொள்ளப்படும் செயற்றிட்டமொன்றிற்காக வத்தளை பள்ளியவத்த பிரதான வீதிக்கு அல்லது வத்தளை ஹேகித்த (B459) பிரதான வீதிக்கு முகப்பாகவுள்ள 40 பேர்ச்சுக்குக் குறையாத காணியொன்று தேவைப்படுகின்றது.

உங்கள் விலைமனுக்கள், காணி உறுதி மற்றும் வீதி வரைபடத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் பெறுகை முகாமையாளர், இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், இலக்கம் 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு-09 என்ற முகவரிக்கு, 2022.03.21 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். மேலதிக தகவல்கள் தேவையெனின் திரு. விதுரங்க தொ. பே. இல. 0115455363 அல்லது திரு வேதித்த தொ.பே. இல. 0115455364 ஐ அழைக்கவும்.

**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியம்) மூலம்,**
**தலைவர் - திணைக்களப் பெறுகைக்குழு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல. 609, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09**

**தொ.பே. 011-5455335,**
**தொலைநகல்: 0115455424**



**SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD**

ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**வர்த்தக அமைச்சு**

## ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்பு/ தீர்வு மேம்பாட்டுக்காக உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முற்சி (SMES)/ தொழில்நுட்ப தொடக்கங்களுக்கான நிதி உதவி

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்புகள்/ தீர்வு மேம்பாட்டுக்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி (SMES)/ தொழில்நுட்ப தொடக்கங்களுக்கான நிதி உதவி திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளது. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவி தேசிய விஞ்ஞான மன்றத்தினால் (NSF) வழங்கப்படும்.

**யாருக்காக**

புத்தாக்க தயாரிப்புகள்/ தீர்வுகளுடன் ICT SMEs/ தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள்

**உதவிக்கான பகுதிகள்:**

- ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்பு/ தீர்வு மேம்பாட்டுக்காக SMEs/ தொழில்நுட்ப தொடக்கங்களை பலப்படுத்தல் மற்றும் உதவுதல்.
- அவதானம் செலுத்தப்படும் தொழில்நுட்ப பிரிவுகளில் IP உரிமம், PCT application பெறுவதற்கு நிறுவனங்களுக்கு உதவுதல் (IoT, AI, VR/AR)
- வெளிநாட்டு சந்தையில் இலங்கையின் உள்நாட்டு ICT வர்த்தகக் குறியை நிறுவுதல்
- உலகளாவிய மதிப்பு சங்கிலிகளுடன் இணைப்புகளை நிறுவுதல்

**தகைமை அளவுகோல்:**

- SME அல்லது தொடங்குனராக இருத்தல் வேண்டும். (இணையதளத்தில் வரையறைகளை பார்க்கவும்)
- ICT தயாரிப்புகள் அல்லது ICT மென்பொருள் பயன்பாட்டின் அனைத்து SMEs/ தொடங்குனர்களும் 100% உள்ளூர் உரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சந்தைக்கு தயாரான தயாரிப்பு/ சேவையை மேம்படுத்தி இருத்தல் வேண்டும்.
- ICT தயாரிப்பு/ மென்பொருள் தீர்வு மேம்பாட்டு துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (ஆவண அத்தாட்சி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)
- இதனை ஒத்த திட்டங்களுக்காக கடந்த 3 ஆண்டுகளுக்குள் எந்த ஒரு அரச நிதி உதவியையும் பெறாத எந்த ஒரு நிறுவனமும்.

**தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான** EDB **இன் உதவி**

செலவினப் பகிர்வு அடிப்படையில் செயற்படுத்தப்படும் இந்த உதவித் திட்டத்தில், மீள் நிரப்பல் அடிப்படையில் நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சம் 4.0 மில். ரூபா வரையான திட்ட செலவின் 70% இனை EDB ஏற்கும்.

திட்ட வழிகாட்டல்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

2022 மார்ச் 04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் ''அறிவித்தல்கள்'' தலைப்பின் கீழ் கிடைக்கப்பெறும் ''ஆர்வ வெளிப்பாட்டு'' படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுடைய நிறுவனங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிக்கின்ற நிறுவனங்களுக்கு இந்த உதவித் திட்டத்தின் சுருக்கமான விபரங்களுக்கு ஒன்லைன் நிகழ்ச்சி ஒன்று (Webinar) ஏற்பாடு செய்யப்படும். வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022 மார்ச் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு மின்னஞ்சல்: ravindi@edb.gov.lk, உதவிப் பணிப்பாளர் - ரவிந்தி ரணராஜா மற்றும் மின்னஞ்சல்: dinesh@edb.gov.lk, 0112303862 அல்லது 011-2300705 (233) என்ற தொலைபேசி வழியாக ஏற்றுமதி ஊக்குவிப்பு அதிகாரி – திரு தினேஷ் அத்தநாயக்க ஆகியோரை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றுனர்**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**இல. 42, EDB/ NDB கோபுரம், நவம் மாவத்தை, கொழும்பு 02.**

**இணையதளம்: www.srilankabusiness.com**




# மலையக அபிவிருத்தி திட்டங்களை கண்காணிக்க ஜீவன் நேரடி விஜயம்





ஹற்றன் விசேட நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் கீழ் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தித்திட்டங்களை இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டார்.

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட நானுஓயா கிலன்டன் கீழ் பிரிவு தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டம் மற்றும் பாதை போன்ற அபிவிருத்தி பணிகளை தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் நேற்றுமுன்தினம் (24) நேரில் சென்று பார்வையிட்டார். இதே வேளை கொட்டகலை பிரதேசசபைக்குட்பட்ட கொட்டகலை திம்புல்ல பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் வீதி அபிவிருத்திகளையும் அவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜ், கொட்டகலை பிரதேச சபையின் தலைவர் ராஜமணி பிரசாத் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் அதிகாரிகள் உட்பட பலர் சென்றிந்தனர்.

# ஹப்புகஸ்தென்ன தோட்டத்திலுள்ள பிரஜாசாலை மண்டபம் புனரமைப்பு

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

ஜனாதிபதியின் சௌபாக்கியா தெக்ம வேலைத்திட்டத்தின் ஊடாக ஹப்புகஸ்தென்ன தோட்டத்திலுள்ள பிரஜாசாலை மண்டபத்தின் புனரமைப்பு பணிகளுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

"சௌபாக்கிய தெக்ம" விசேட வேலைத்திட்டத்தின் கீழ் கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்கு தலா 4மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு அதன் ஆரம்பகட்ட வேலைகளை முதல் காலாண்டில் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மஸ்கெலியா பிரதேச சபையின் மவுசாகலை வட்டாரத்தில் வெற்றி பெற்ற பழனியாண்டி ஆனந்தனுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முதல் காலாண்டுக்கான வேலைத்திட்டமாக ஹப்புகஸ்தென்ன தோட்ட பாலர் பாடசாலை மண்டபம் தற்போது பிரஜாசாலை மண்டபமாக மாற்றி அமைப்பதற்கான மேற்பார்வை மற்றும் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ஆனந்தன், மவுசாகலை வட்டார இளைஞரணி தலைவர் ரொமேஸ் தர்மசீலன் ஆகியோர் களத்திற்கு சென்று பார்வையிட்டதோடு மஸ்கெலியா பிரதேச சபையின் தொழிநுட்பப்பிரிவு அதிகாரிகளும்(Technical Officer's) வருகைத் தந்து சம்மந்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கான திட்டமிடல்களை நெறிப்படுத்தினர்.

குறித்த வேலைத்திட்டங்களை விரைவில் செய்து முடிக்க முழுமையாக உதவி செய்வதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.



இ / பரி யோவான் தமிழ் தேசிய பாடசாலையின் பரத நடன ஆசிரியையும் , அபிநய கலாகேந்திர நாட்டியப்பள்ளி இயக்குனருமான பரதநடன நுண்கலைமானி, கலாவித்தகர் செல்வி. சிகிவாகினி லிங்கநாதனின் நடனநிகழ்வொன்றின் போது எடுக்கப்பட்ட படம்.

# கிராம மக்கள் பசும்பால் உற்பத்தியில் ஆர்வம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

நாட்டில் நிலவும் பால்மா தட்டுப்பாடு மற்றும் அந்நிய செலாவணிப் பிரச்சினைக்கு தீர்வாக சப்ரகமுவ மாகாண சபை மற்றும் கால்நடை பண்ணைகள் அபிவிருத்தி அமைச்சு என்பன இணைந்து 100 கிராமிய பசும்பால் உற்பத்தி கிராமங்கள், பாற்பண்ணைகள் மற்றும் பால் உற்பத்திப் பதனிடும் நிலையங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கிணங்க இவ்விரண்டு மாவட்டங்களிலும் 100 பாற்பண்ணைகள் மற்றும் பசும்பால் உற்பத்தி பதனிடும் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இதன்மூலம் உள்நாட்டு பால் உற்பத்திப் பாவனையை அதிகரிப்பதுடன் பெருமளவு அந்நிய செலாவணி மீதியாவதாகவும் கிராமிய மட்டத்தில் இப்பணிகளை மேற்கொண்டு வரும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்திட்டத்திற்கு இணங்க பசும்பால் மற்றும் இத்துறைசார்ந்த உற்பத்திகளை போதியளவு பொது மக்களுக்கு இலகுவாக கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஊவா மாகாண சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது வழங்கும் விழா





லுணுகல நிருபர்

சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் சின்னஞ்சூட்டும் பிரதான நிகழ்வானது ஜனாதிபதி தலைமையில் கடந்த புதன்கிழமையன்று (23) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

ஜனாதிபதி விருதினை பெற்றுக்கொள்ளத் தகுதியுடைய நாடுபூராகவும் உள்ள அனைத்து சாரணர்களையும் ஒரே இடத்திற்கு அழைக்க முடியாத கொவிட் 19 சூழ்நிலையினை கருத்திற் கொண்டு ஜனாதிபதி விருதினை வழங்கி வைக்கும் மாகாண மட்டத்தினான நிகழ்வானது நிகழ்நிலை (Zoom) தொழில்நுட்பத்தின் ஊடாக அனைத்து சாரணர்களையும் ஒருமித்து இடம் பெற்றிருந்தது.

இதற்கமைய ஊவா மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட 5 சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது மற்றும் சின்னஞ்சூட்டும் நிகழ்வானது ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று (23) மாலை 2.30 மணியளவில் ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர் எம். எம். விஜயநாயவின் தலைமையில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நிகழ்நிலை ஊடாக இடம்பெற்ற நிகழ்வின்போது ஜனாதிபதி விருதுக்கு தெரிவாகி சின்னங்களைப் பெற்றுக்கொண்ட சாரணியர்களை வாழ்த்தியிருந்ததுடன், இந்நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் பிரதான ஆணையாளரும், சட்டத்தரணியுமான ஜனபிரித் பெர்னாண்டோவும் கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் ஊவா மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாகாண விளையாட்டு அமைச்சின் செயலாளர் நிஹால் குணரத்தன, இலங்கை சாரணர் இயக்கத்தின் விசேட ஆணையாளர் திலும் துமிந்த உள்ளிட்ட சாரணர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# 450 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பாலம்

பலாங்கொடை தினகரன் நிருபர்


பலாங்கொடை கஹடபிடிய மற்றும் பலவத்துகந்துர ஆகிய பிரதேசங்களை ஒன்றிணைத்து தொரவெல்ஓய ஊடாக புதிய பாலம் ஒன்றை நிர்மாணிக்க சப்ரகமுவ மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய பாலத்தை நிர்மாணிக்க சப்ரகமுவ மாகாணசபை 450 இலட்சம் ரூபாவினை செலவு செய்துள்ளது. இப்பாலத்தினை நிர்மாணித்ததன் காரணமாக ஹபுகஹகும்புர படுகம்மன கஹடபிடிய தொடுபலதென்ன யக ஹலுதென்ன கிரிமெடிதென்ன தெஹிகஸ்தலாவ கிரிந்திகல பலவதுகந்துர முகுனமலே ஆகிய கிராமத்தில் வாழ்கின்ற பொது மக்களுக்கு இதன் மூலம் பாரிய நன்மை கிடைத்துள்ளது.

இப்பிரதேசங்களில் வாழ்கின்ற பொதுமக்களுக்கு பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்குச் செல்லக் கூடிய குறுகிய பாதை இதுவாகும்.

இப்பாலத்தை நிர்மாணிப்பதன் மூலம் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் நன்மை அடைந்துள்ளனர். இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் இரத்தினபுரி இணைப்பு கமிட்டி கூட்ட தலைவருமான அகில சாலிய எல்லாவல, பலாங்கொடை பிரதேச சபை தலைவர் எம்.எம். சுனில் பேமசிரி ஆகியோரின் முழு முயற்சியினால் இப்பாலம் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காயங்களுடன் சிறுத்தையின் சடலம் மீட்பு



நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிட்போட் பகுதியில் தனியார் தோட்டப்பகுதியிலிருந்து இறந்த நிலையில் சிறுத்தையொன்று நேற்று மதியம் மீட்கப்பட்டுள்ளதாக நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முற்பகல் பகுதிக்கு தொழிலுக்குச் சென்றவர்களால் சிறுத்தையின் சடலமொன்று இருப்பதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு பொலிஸார் அறிவித்ததையடுத்து புலியின் சடலம் ரந்தனிகலவிலுள்ள வனவிலங்கு வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது. சுமார் 8 வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தையின் சடலத்தில் காயங்கள் இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரவள்ளிக் கிழங்கு ஏற்றுமதி மூலம் டொலர் வருமானம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

மரவள்ளிக்கிழங்கு ஏற்றுமதியின் மூலம் டொலர் உழைக்கும் விவசாயி ஒருவரை ஊக்குவிக்கும் நிகழ்வு எம்பிலிபிட்டிய உடவளவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது

சிறிய அளவில் பொதி செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்கு ஏற்றுமதியை ஆரம்பித்த பீ.அஜித் என்ற விவசாயியே இவ்வாறு ஊக்குவிக்கப்பட்டுள்ளார்.

தனது சுய முயற்சியின் மூலம் தொழிலை மேற்கொண்டுவருகின்றார்.



இவரது பொதி செய்யப்பட்ட மரவள்ளிக்கிழங்கு டுபாய், கட்டார் உட்பட பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தனது சிறிய உற்பத்தி தொழிற்சாலையில் மரவள்ளி கிழங்கை சுத்திகரித்து பொதி செய்யும் இவரது தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் ஏற்றுமதி அபிவிருத்தி அமைச்சர் ஜானக வக்கும்புர இவருக்கு அவசியமான அரச உதவிகளை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

# டீசல் தட்டுப்பாடு; சாரதிகள் பெரும் அவதி

ஹற்றன் விசேட நிருபர்

மலையகப்பகுதிகளிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்றுமுன்தினம் காலை முதல் டீசல் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவிவருகிறது.



டீசல் தட்டுப்பாடு காரணமாக நேற்று காலை வேளையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வாகன வரிசை காணப்பட்டன. ஒவ்வொரு வாகன சாரதிகளும் எரிபொருள் நிரப்புவதற்காக முண்டியடித்து கொண்டு செல்வதை அவதானிக்கமுடிந்தது. இதனால் வாகன நெரிசலும் ஏற்பட்டது. தற்போது தலவாக்கலை, கொட்டகலை, ஹற்றன் உள்ளிட்ட பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் தீர்ந்துள்ளன. இதனால் வாகன சாரதிகள் மற்றும் பொது போக்குவரத்தில் ஈடுபடும் பஸ் சாரதிகள் டீசல் எரிபொருளினை தேடி ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நோக்கி சென்று வருவதாகவும் தெரிவிக்கின்றனர். இதனால் தாங்கள் பெரும் சிரமங்களுக்கு உட்பட்டிருப்பதாகவும், பாடசாலை மாணவர்களை கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமை புரிபவர்கள் கருத்து தெரிவிக்கையில் டீசல் தட்டுப்பாடு ஏற்படும் என்பதனை அறிந்து பொது போக்குவரத்தில் ஈடுபடும் வாகன சாரதிகள் போதுமான அளவு டீசலை பெற்றுக் கொண்டனர். ஒரு சிலர் தேவைக்கு அதிகமாகவும் பெற்றுக்கொண்டனர். இதனால் தற்போது டீசல் முடிந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஒரு சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மாத்திரம் அவசர நோய்காவி வண்டி மற்றும் அவசர தேவைக்காக மட்டும் வழங்குவதற்கு டீசல் வைத்திருப்பதாகவும் ஒரு சிலர் தெரிவித்தனர்.

# அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை புவக்கஹவெலை பகுதியில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தி வளமான காடுகளை வெட்டி இரத்தினக்கல் அகழ்வதாக பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

இதனால் சுற்றாடலுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இரத்தினக்கல் அகழ்வதற்கு வழங்கப்பட்ட நிலப் பகுதிக்கு மேலதிகமாக வளமான காடுகள் வெட்டி அழிக்கப்படுவதனால் நீர்நிலைகள் பாதிக்கப்படுவதாகவும் சேற்று கழிவு நீர் வடிந்து செல்வதால் குடிநீரும் வயல் விவசாய நிலங்களும் பாதிக்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் முறையிடுகின்றனர்.

எனவே இரத்தினக்கல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு இம்மக்கள் வினயமாக வேண்டுகின்றனர்.



# நேர்மையும் வாக்கு மாறாத செயற்பாடும் எனது மூலதனமாகும்...

## சர்வதேச மனித உரிமை அமைப்பின் மத்திய மாகாணத்திற்கான சட்ட ஆலோசகர், சட்டத்தரணி ராஜசேகரன் மணிவண்ணன்

சர்வதேச மனித உரிமை அமைப்பின் மத்திய மகாணத்திற்கான சட்ட ஆலோசகர், சட்டத்தரணி ராஜசேகரன் மணிவண்ணன் தம் சட்டத்துறையின் ஆளுமைமிக்க செயற்பாட்டினாலும் சமூகத்துறை செயற்பாட்டினாலும் கலை இலக்கிய செயற்பாட்டிலும் பன்முக ஆளுமை கொண்ட பண்புயர்மிக்க மனிதர். எந்தவொரு நேரத்திலும் சிரித்த முகத்தோடு இனம் மதம் மொழி கடந்து மற்றவர்களை மதித்து அவர்களோடு இணைந்து உறவாடி மனிதாபிமானப் பணிகள் புரிகின்ற சட்டத்தரணி ராஜசேகரன் மணிவண்ணனின் பண்பு ஒரு தனித்துவமானவையே. மனிதநேயமும் கடின உழைப்பையும் கொண்டவர்.

இவர் மாத்தளை மாவட்ட சட்டத்தரணி சங்கத்தின் ஆறு வருடம் செயலாளராகவும் மூன்று வருடம் தலைவராகவும் செயலாற்றியவர்., பிரன்ஸ் ஒப் சாஹிரா அமைப்பின் உபதலைவர், மாத்தளை காந்தி மாகா சபையின் உப தலைவர் முதலிய பிரபல்யமான பொது அமைப்புக்களில் பிரதான பதவிகளை வகித்து அதிசயிக்கத்தக்க சமூப் பணிகளை ஆற்றி வருகின்றார்.

அதேவேளை மாத்தளையிலுள்ள எச்.என்.பி, டி.எப்.சி.சி. அமானா ஆகிய வங்கிகளின் சட்ட ஆலோசகராகவும் மற்றும் ஶ்ரீ முத்துமாரியம்மன் கோயில் அறங்காவளர் சபையின் சட்ட ஆலோசகராகவும் உள்ளார். இவரின் சமூகப் பணிகளுக்கு சான்றாக பல்வேறு அமைப்புக்களினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரத்தோட்டை இந்து தமிழ் மகா வித்தியாலத்தின் விருது, மாத்தளை சாஹிராவின் 75 வது பவள விழாவின் விருது, 2018.11.22 தங்கந்த தமிழ் தோட்டப் பாடசாலையின் விருது. 2018 மாத்தளை வர்த்தக சங்கத்தின் விருது. மாத்தளை பாக்கியம் இந்து தேசிய பாடசாலையின் விருது 2018 மாத்தளை சுவாமி விபுலானந்தர் கலாமன்றத்தின் பொன் விழா விருது 2018 மாத்தளை சுதுகங்கை அருள்மிகு ஶ்ரீ 7 முக காளியம்மன் கோயிலின் வாணி விழா விருது. 2011 நிருத்தியாஞ்சலி கலாமன்றத்தின் வெள்ளி விழா விருது என விருதுகளை பாராட்டுக்களை பெற்ற இவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்கள் குடும்ப வாழ்க்கை பின்னணி குறித்து கூற முடியுமா?**

நான் 1971.02.10 மாத்தளையில் பிறந்தேன். தந்தை முருகையா ராஜசேகரம். அம்மா பெயர் அரியமுத்து பூரணம். மனைவி ஆறுமுகம் கிருசாந்தி, கொழும்பு தெமட்டைக்கொட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.எனக்கு இரு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

எனது தாத்தாவான அரியமுத்து செட்டியார் நேர்மையும் வாக்கு மாறாத செயற்பாட்டை எனது மூலதனமாக எடுத்துக் கொண்டு இன்று வரைக்கும் எனது தொழிலுக்கும் எனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்துக் கொண்டிருக்கின்றேன். அந்த நேர்மையும் வாக்குமாறாத் தன்மையும் தான் என்னை இந்தளவுக்கு கொண்டு வருவதற்கு பெரும் துணையாக இருந்துள்ளது.

எனது மனைவி அன்று தொடக்கம் இன்று வரைக்கும் எனது தொழிலும் சமூகப் பணிகளுக்கும் எந்தவிதமான தடங்களுக்கும் இல்லாமல் மனப்பூர்வமாக உதவி செய்து வருகின்றார். எனது பிள்ளைகளும் அப்படியே.

ஆரம்பக் கல்வியினை இரத்தோட்டை தமிழ் மகா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்பு தொடக்கும் 05ஆம் வகுப்பு வரையிலும் படித்தேன். 1981 களில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். அதன் காரணமாக கொழும்பு டி. எஸ். சேனநாயக கல்லூரியில் கல்வி கற்க அனுமதி கிடைத்தது.

அந்தக் காலத்தில் 1983 களில் நிலவிய இனப்பிரச்சினை மற்றும் தங்குமிட வசதியின்மை காரணமாக அங்கு கல்வியை தொடர முடியாது போனது. மீண்டும் மாத்தளைக்கு வந்து மாத்தளை சாஹிரா கல்லூரியில் இணைந்து கொண்டேன். இரண்டு வருடம் மாத்தளை இந்து தேசிய கல்லூரியிலும் மற்றும் உயர்தரக் கல்விக்காக மீண்டும் சாஹிராக் கல்லூரியில் இணைந்து கற்றேன். 1990 களில் க. பொ. த உயர் தரப் பரீட்சைக்கு தோற்றி சட்டக் கல்லூரிக்கு தெரிவானேன். நான்கு வருடங்கள் கல்வி கற்றேன். இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு கல்வி போதித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதில் நான் கடமைப்பட்டுள்ளேன்.

சட்டக் கல்வியை படித்து முடித்த பிறகு எனது ஆரம்ப பயிற்றுநர் தற்போதைய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸிடம் ஆறு மாதம் தொழில் புரிந்து அவருடைய சட்ட அனுபவங்களைப் பெற்றுக் கொண்டேன். பின்னர் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக நியமனம் பெற்ற பிறகு 1998 களில் நேரடியாக மாத்தளைக்கு வந்து சட்ட சேவையினை இன்று வரையிலும் எனது தொழிலாக செய்து வருகின்றேன்.

**சட்டத்துறை பற்றி உங்கள் கருத்து என்ன?**

சட்டத்துறைக்குச் செல்லுதல் இந்தக் காலத்தைப் பொறுத்த வரையிலும் மக்களுக்கு கூடுதலாக சேவை செய்யக் கூடிய சிறந்த ஒரு தொழிலாகத் தான் இதை நான் கருதுகின்றேன். மற்றத் தொழில்களை விட மக்களின் அடிமட்டத் தேவைப்பாடுகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளக் கூடிய மிகப் பெரிய வாய்ப்பு இந்த தொழிலுக்கு இருக்கிறது. அதற்கு மேலாக சமூக சேவை செய்வதற்கு எண்ணம் உள்ளவர்களுக்கு இவ்வாறான தொழிலில் ஈடுபடுவது தமது மனப்பான்மையை வெளிப்படுத்துவதும் தமது மனதிலுள்ள வெளிப்பாடுகளைக் காட்டுவதற்கும் சிறந்ததொரு



வாய்ப்பாக அமையும். ஆனால் என்ன தொழில் செய்தாலும் நமது நேர்மையும் அயரா உழைப்பும் எந்தவொரு தொழிலுக்கும் அவசியம். அது இந்தத் தொழிலுக்கும் கட்டாயம் பயன்படும். இது இல்லாமல் நாங்கள் நீண்ட கால தொழிலைச் செய்வது கஷ்டம்.

**இன்றைய மனித உரிமைகள் செயற்பாடுகள் பற்றி கூறுவீர்களா?**

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேச மனித உரிமை அமைப்பின் சட்ட ஆலோசகராக என்னை நியமித்து இருக்கின்றார்கள். இலங்கையை பொறுத்த வரையிலும் அதிகமான பிரதேசங்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் என்னால் முடிந்தளவு செயற்பாடுகளை செய்து கொடுத்து வருகின்றேன். பொலிஸ் நிலையத்தில் இருந்து நீதி மன்றம் வரைக்கும் அவர்களுக்கு உரிமைகளைப் பாது



காப்பதற்கும் அவர்களுக்கு ஏற்படும் துன்புறுத்தல்களை தடுப்பதற்கும் முடிந்தளவு தனிப்பட்ட ரீதியாக நான் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

பொலிஸாரால் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்ட நேரத்தில் இருந்து அவரை நீதிமன்றம் கொண்டு செல்லும் வரை அவருக்கு ஏற்படும் துன்புறுத்தல்கள் உள்ளிட்ட அவர்களுடைய பாதுகாப்பு சம்பந்தமாக முடிந்தளவு பாதுகாப்பை வழங்கி வருகின்றேன்.

இலங்கையில் சர்வதேசப் பிரகடனங்கள் பயன்படுத்துகின்றார்கள். மனித உரிமைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கு அதிகமான நிறுவனங்கள் இருக்கின்றன. ஆகவே மனித உரிமை மீறுதல் என்பது இலகுவான காரியமல்ல. மனித உரிமைகள் மீறப்படும் இடத்தில் அதை அவதானித்து குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு சரியான நேரத்தில் தெரிவிப்பது தான் எங்கள் சேவையின் ஒரு பாகமாக இருக்கிறது.

**உங்களது சமூகச் செயற்பாடுகள் பற்றி**

இக்கேள்விக்கு அவர் முதலில் சொல்ல விரும்ப வில்லை. மௌனம் சாதித்தார். என்னுடைய அழுத்தம் காரணமாக மனம் திறந்தார். நான் தொழில் புரிந்து ஒரு நிலைமைக்கு வந்த பிறகு முதலாவது ஆரம்ப பாடசாலையான இரத்தோட்டைக் கல்லூரிக்குச் சென்று அதிபர் ஆசிரியர்களிடம் கலந்தாலோசித்து அந்த மாணவர்களுக்கு அப்போதைய கால கட்டத்திற்கு தேவையான விடயங்களைக் கேட்டறிந்தேன். அந்த நேரத்தில் அவர்கள் முக்கியமாக கேட்டது போட்டோ பொப்பி இயந்திரம் ஒன்று தேவையெனக் கோரினார்கள். அதை நான் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்தேன். அதைத் தொடர்ந்து அவர்களது கல்வி நடவடிக்கைகள் விழாக்கள் போன்றவற்றுக்கு என்னால் ஆன உதவிகள் செய்துள்ளேன்.

அதற்கு மேற்கொண்டு அப்பாடசாலையில் கல்வி கற்று பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட இரு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி உதவிகள் வழங்கினேன்.

அடுத்தபடியாக நான் கல்வி கற்ற சாஹிராக் கல்லூரிக்கும் தேவையாளவு தளபாட வசதிகளையும் ஆய்வு கூடத்திற்கு தேவையான வசதிகளையும் செய்துள்ளேன். இந்து தேசிய கல்லூரிக்கும் தளபாடங்கள் மற்றும் சிறுவர்கள் விளையாட்டு பூங்காவை மறுசீரமைத்து மாணவச் செல்வங்கள் பயன்படுத்தக் கூடிய முறையில் நிர்மாணித்துக் கொடுத்துள்ளேன்.

இவை தவிர மாத்தளை கோம்பிலிவெல தமிழ் மகா வித்தியாலத்தில் ஒரு போட்டோ கொப்பி இயந்திரம் வாங்கி வழங்கியுள்ளேன். கவ்டுபெல்ல தமிழ் வித்தியாலயத்திற்கு மல்டி மீடியா பொரஜெக்டர் ஒன்று வாங்கி அன்பளிப்புச் செய்தேன். உலுகங்க தமிழ் மகா வித்தியாலயத்திற்கு போட்டோ கொப்பி இயந்திரம் ஒன்று வாங்கி அன்பளிப்புச் செய்தேன்.

தற்போது உயர் தரம் கல்வி பயிலும் இரு பிள்ளைகளுக்கு மாதாந்தம் புலமைப் பரிசில் நிதி உதவி வழங்கி வருகின்றேன். ஹெல்கடுவ தமிழ் மகா வித்தியாலயத்திற்கு புகைப்படப் பிரதியொன்று வாங்கி அன்பளிப்புச் செய்தேன். கந்தே நுவர தமிழ் வித்தியாலயத்திற்கு நீர் தாங்கி ஒன்றும் வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளேன்.

எனது நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மிகவும் வறுமைக்குட்பட்ட ஒரு குடும்பத்தினருக்கு மாத்தளை சுதுகங்க தோட்டத்தில் ஒரு காணியொன்றை வாங்கி வீடொன்றையும் நிர்மாணித்துக் கையளித்துள்ளேன். இது ஒரு கூட்டு முயற்சியாகும். அவர்கள் அந்த வீட்டில் சந்தோசமாக வாழ்வதைப் பார்க்கும் எங்கள் மனதிற்கு நல்லதொரு சந்தோசத்தைத் தருகிறது. என்னுடைய பங்களிப்பு அதில் இருக்கிறது.

இன்னும் காணிகள் வாங்கி வைத்துள்ளோம் அதிலும் எதிர்காலத்தில் வெகு விரைவில் வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

1988-1990 களில் மாத்தளை சாஹிராக் கல்லூரியில் கற்ற வகுப்பு நண்பர்கள் ஒன்றிணைந்து பிரன்ஸ் ஒப் சாஹிரா என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் அந்தப் பாடசாலைக்கு தேவையான அனைத்து வசதிகளையும் கல்வி மேம்பாடு பௌதீக வளம், உதவிகளைச் செய்து வருகின்றோம். க.பொ.த சாதாரணப் பரீட்சையில் 9 ஏ சித்தி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் மவுண்டன் பைசிக்கிள் வாங்கி கொடுத்து வருகின்றோம். எங்கள் அமைப்பிலுள்ள குழுமத்திலுள்ள நண்பர்களின் தேவைப்பாடுகள் அதாவது வறுமையில் உள்ள நண்பர்களின் தேவைப்பாடுகளையும் கண்டறிந்து நிறைவு செய்து வருகின்றோம். இதுதான் எங்களுடைய முக்கியமான கோட்பாடாகும். இன்று வரையிலும் நல்ல பணிகளை அவ்வமைப்பு முன்னெடுத்து வருகின்றது.

இந்த வருடத்தில் அவ்வமைப்பு 10 வருடத்தை நிறைவு செய்கிறது. இப்தார் நிகழ்வுகளை நாங்கள் நடத்துவோம். அது எங்களுடைய ஒரு முக்கியமான நிகழ்வு. கொரோனா தொற்றுக் காரணமாக 2 வருடம் செய்ய முடியாமல் போய் விட்டது. கடந்த 08 வருடம் தொடர்ந்து செய்து வந்துள்ளோம். இந்த வருடம் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கின்றோம். காலம் உதவிகள் செய்தால் எதிர் வரும் நோன்பு இப்தார் செய்யத் தயாராக இருக்கின்றோம். அது மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் இரத்ததான முகாம்கள் செய்து வருகின்றோம். மாத்தளை மாவட்டத்தில் அதிகளவு இரத்ததானம் வழங்கும் அமைப்பு இதுவாகத் தான் இருக்கும்.

**நீங்கள் இளந் தலைமுறையினருக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?**

நாங்கள் எங்கு பிறந்தோம், எங்கு படித்தோம் என்ற தாழ்மையுணர்வு தேவையில்லை. எங்கு இருந்தாலும் எங்களுடைய மனம் உறுதியாக இருந்தால் நாம் எதையும் சாதித்து வெற்றி பெற முடியும். அதற்காக முயற்சி செய்யுங்கள்.

மாவத்தகம தினகரன் நிருபர்

# உக்ரைனில் இருந்து தமிழகம் திரும்பும் மாணவர்களின் பயண செலவை அரசே ஏற்கும்



உக்ரைனில் சிக்கியுள்ள தமிழக மாணவர்கள் தாயகம் திரும்புவதற்கான பயண செலவை அரசே ஏற்கும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், உக்ரைனில் சிக்கி தவிக்கும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள், பொது மக்களை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். அதில், 'தமிழகத்தை சேர்ந்த தொழில்முறை படிப்புகள் பயிலும் சுமார் 5 ஆயிரம் மாணவர்கள் மற்றும் மாநிலத்தில் இருந்து அங்கு குடியேறியவர்கள் உக்ரைனில் சிக்கி தவித்து வருகின்றனர். அவர்களை இந்தியாவுக்கு அழைத்து வர வேண்டும்' என கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

'உக்ரைனில் படிக்கும் தமிழகத்தை சேர்ந்த மாணவர்கள் 916 பேர் தமிழக அரசை தொடர்பு கொண்டுள்ளனர். தமிழக மாணவர்கள், அங்கு பணியாற்றும் தமிழர்கள் பத்திரமாக மீட்கப்படுவார்கள். உக்ரைனில் மாணவர்கள், பணி நிமித்தமாக உள்ளவர்கள் என 5 ஆயிரம் தமிழர்கள் உள்ளனர். 5 ஆயிரம் பேரை மீட்டு வர தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உக்ரைனில் உள்ள மாணவர்கள் தமிழகம் திரும்புவதற்கான செலவை தமிழக அரசே ஏற்கும்.' இவ்வாறு முதல்வர் அறிவித்துள்ளார். மாணவர்களின் பயண செலவை அரசே ஏற்கும்.

# உக்ரைனில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்

உக்ரைன் மீது ரஷிய படைகள் உக்கிரமான தாக்குதலை 2 ஆவது நாளாக நடத்தி வருகிறது. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி என மும்முனை தாக்குதலை நடத்துவதால் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. உக்ரைன் நாட்டின் ஏராளமான இராணுவ இலக்குகளை ரஷிய படைகள் தாக்கி அழித்துள்ளன. அதேபோல் உக்ரைன் தங்களை தற்காத்துக் கொள்ள, ரஷிய படைகளுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் தொடர்ந்து பதற்றமான சூழல் உள்ளது.



ரஷியா தொடுத்துள்ள போரை தடுத்து நிறுத்த உலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். குறிப்பாக, இந்த விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும், ரஷிய அதிபர் புதினுடன் இந்திய பிரதமர் மோடி பேச வேண்டும் என இந்தியாவுக்கான உக்ரைன் தூதர் டாக்டர் இகோர் பாலிகா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ரஷிய அதிபர் புதினை இந்திய பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தார். எந்த பிரச்சினையாக இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தினார். இந்நிலையில், உக்ரைனில் உள்ள மாணவர்கள் உள்பட இந்தியர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று ரஷிய அதிபர் புதின் உறுதியளித்துள்ளார்.

# கடன் வாங்கி காலத்தை ஓட்டும் பாகிஸ்தான்

**நம்பிக்கை இழந்துள்ள மக்கள்**

பல ஆண்டுகளாக அன்றாட விவகாரங்களுக்கே கடன் வாங்கிக்கொண்டு, உதவிக்காக கெஞ்சிக் கொண்டிருக்கும் ஒரே அணுசக்தி நாடு பாகிஸ்தானாக தான் இருக்கும் என அந்நாட்டின் இஸ்லாம் கபார் பத்திரிகை விமர்சித்துள்ளது.


கோவிட் பாதிப்பிற்கு முன்பே பாகிஸ்தானில் பொருளாதார நிலை மோசமாக இருந்தது. கோவிட்டிற்கு பின் நிலைமை மேலும் மோசமடைந்தது. பாகிஸ்தானில் எரிபொருள் விலை மற்றும் மின் கட்டணங்கள் வரலாறு காணாத உச்சத்தில் உள்ளன. இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எப்.,) பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெற்று நிலைமையை சமாளித்து வருகின்றனர். தற்போது ஐ.எம்.எப்., ஆனது 6வது தவணையாக பாகிஸ்தானுக்கு கடனளிக்க ஒப்புதலளித்துள்ளது. இதனை அந்நாட்டு நிதியமைச்சர் சவுகத் தாரின் மகிழ்ச்சியுடன் அறிவித்திருந்ததை அந்நாட்டு பத்திரிகை கடுமையாக சாடியுள்ளது.

இது தொடர்பாக இஸ்லாம் கபார் கூறியிருப்பதாவது:

தேசத்தை அடிமைப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து புதிய தவணை கடனை பெறுவதற்கு நிதியமைச்சர் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். இது ஆச்சரியம் மட்டுமல்ல வருத்தமும் அளிக்கிறது. அன்றாட விவகாரங்களுக்கு கடன்கள் தேவைப்படும் ஒரே அணுசக்தி நாடு அநேகமாக பாகிஸ்தானாக தான் இருக்கும். உதவிக்காக கெஞ்சிக்கொண்டிருப்பது பல பத்தாண்டுகளாக தொடர்கிறது. தவறான நிதி மேலாண்மை மற்றும் நாட்டை நடத்த வெளிநாட்டு நிதிகளை சார்ந்திருப்பது போன்றவற்றால் அரசாங்கத்தின் மீதான மக்களின் நம்பிக்கை புதிய வீழ்ச்சியில் உள்ளது. என கூறியுள்ளது.

**உ.பியில் கார் விபத்து**

# தப்பினார் ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர்



ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா உத்தரபிரதேச மாநிலத்தில் உள்ள காஜிபூரின் ஜமானியா, முஹமதாபாத் உள்ளிட்ட பல்வேறு சட்டசபை தொகுதிகளில் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்.

நேற்று காலை வாரணாசியில் இருந்து தனது சொந்த ஊரான காஜிபூருக்கு ஆளுநர் மனோஜ் சின்ஹா சென்றுக் கொண்டிருந்தார். அப்போது கட்டுப்பாட்டை இழந்த கார் திடீரென ராஜ்காட் பாலத்தின் சரிவில் பொருத்தப்பட்டிருந்த இரும்பு தூண் மீது மோதியது. இதில் காரின் இடது பக்கம் சேதமடைந்தது. காரின் ஒரு சக்கரமும் பஞ்சர் ஆனது.

இது குறித்து தகவல் அறிந்து விரைந்த பொலிசார் ஆளுநரை பத்திரமாக மீட்டு மாற்று காரில் அனுப்பி வைத்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விபத்தில் ஆளுநர் உள்பட யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று ராம்நகர் காவல் நிலையப் பொறுப்பாளர் அஷ்வினி பாண்டே தெரிவித்தார்.

## பெறுகை அறிவித்தல்

### மினுவங்கொட பிரதேச சபை

மினுவங்கொட பிரதேச சபையின் மாபொதல உப அலுவலக வளாகத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள 2 மாடியுடனான 9000 அடிக்குக் கிட்டிய அளவான அலுவலக கட்டிடமொன்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆலோசனை சேவை வழங்கும் அனுபவமுள்ள நிறுவனங்களிலிருந்து கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

**1. வேலைகள்**

i. கட்டிடங்களை வடிவமைத்தல் (Architectural Drawing)
ii. கட்டமைப்பு வடிவமைத்தல் (Structural Drawing)
iii. மதிப்பீடுகளை தயாரித்தல்
iv. பெறுகை மாதிரிகள் மற்றும் பெறுகை மேற்கொள்ளல் வரையான ஆவணங்களைத் தயாரித்தல்
v. பற்றுச் சீட்டுக்களை பரிசீலித்தல் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட வேலைகளை நிறைவேற்றுதல்.
vi. நீர்மாணங்களை மதிப்பீடு செய்தல்

கீழ்க்காணும விபரங்களை வழங்குதல் வேண்டும்.

**2. நிறுவனத்தின் விபரம்**

i. தகைமை மற்றும் அனுபவம்
ii. ஊழியர் குழாம் பற்றிய தகவல் அறிக்கை
iii. அறவிடப்படும் கட்டணம்
iv. நிறுவனத்தின் செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழ் பிரதி

மேற்படி விடயத்திற்காக ஆலோசனை சேவை வழங்குவதற்கு ஆற்றல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து கேள்விப் பத்திரங்கள் 2022.03.21ம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். இடங்களைப் பரிசீலித்தல் அலுவலக நேரங்களில் நிறைவேற்ற முடிவதுடன் கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre Bid meeting) 2022.03.10ம் திகதி மு.ப. 10.00இற்கு நடைபெறும்.

**பெறுகை விபரங்கள்**

i. பெறுகைப் படிவங்கள் விநியோகித்தல் : 2022.02.28 முதல் 2022.03.18ம் திகதி பி.ப. 3.00 வரை
ii. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் : 2022.03.21 மு.ப. 10.00 வரை
iii. கேள்விகள் திறத்தல் : 2022.03.21 மு.ப. 10.05 இற்கு

கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூளையில் பெயரைக் குறிப்பிடல் வேண்டும் அத்துடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்வி திறக்கப்படும் வேளைக்காக கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் எழுத்து மூல அனுமதியுடைய பிரதிநிதி யொருவருக்கு சமுகமளிக்கலாம்.

கேள்விகளை பெற்றுக்கொள்ளும் போது மீளளிக்கப்படாத தொகையாக ரூ. 5000.00 மற்றும் மீளளிக்கப்படும் தொகையாக ரூ. 50000.00 தொகையை பிரதேச சபையில் வைப்புச் செய்து குறித்த பற்றுச் சீட்டின் பிரதியை அல்லது 2022.05.20 வரை செல்லுபடியாகும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப் பிணையொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் கட்டாயமாகும்.

கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் மினுவங்கொட பிரதேச சபைக்கு உரித்தாகும்.

சரியாகப் பூர்த்தி செய்து விடுவிக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் 2022.03.21ம் திகதி மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், மினுவங்கொட பிரதேச சபை, உடுகம்பொல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் அல்லது அவ் இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

**தலைவர்,**
**மினுவங்கொட பிரதேச சபை**
**திகதி. 2022.02.28**

**தொலைபேசி இலக்கம் 033-2222335**


# குருநாகல் மாவட்ட அஹதிய்யா மாநாடு மார்ச் 5ஆம் திகதி

குருநாகல் மாவட்ட அஹதிய்யா பாடசாலைகள் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 5ம் திகதி 9 மணியளவில் சியம்பளாகஸ் கொடுவ தேவா மத்திய நிலையத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்மேளனத் தலைவர் தேசபந்து கலாநிதி பீ.எம்.பாரூக் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் குருநாகல் மாவட்ட முஸ்லிம் சமய சலாசார உத்தியோகத்தர் டீ.எம்.இஹ்ஸான் மரிக்கார் உட்பட பல முக்கிய சமூக பிரதிநிதிகள் விசேட அதிதிகளாகக் கலந்துகொள்வார்கள்.

குருநாகல் மாவட்டத்திலுள்ள அஹதிய்யாப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள் மற்றும் அஹதிய்யாப் பாடசாலைகளின் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் பங்குபற்றும் இக் கூட்டத்தில் அஹதிய்யா தொடர்பான சில விடயங்கள் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் புதிய நிர்வாக உத்தியோகத்தர்களும் இந் நிகழ்வில் பங்குகொண்டு கருத்துக்கள் பரிமாறவுள்ளார்கள்.

இக் கூட்டத்தின் பின்னர் குருநாகல் மாவட்டத்தின் சகல முஸ்லிம் கிராமங்களிலும் அஹதிய்யாவை வியாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அதன் தலைவர் கலாநிதி பீ.எம்.பாரூக் தெரிவித்தார்.



கெக்கிராவ ஸ்ரீ போதி இராஜாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆலயத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது,...
படம் திறப்பனை தினகரன் நிருபர்


## கேள்விக்கான அழைப்பு

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு -10
(சுகாதார அமைச்சு)

### வைத்திய உபகரணங்களை கொள்வனவு செய்தல்

01. 2022.03.30ம் திகதி மு.ப. 10.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழே காணப்படும் வைத்தியசாலை உபகரணங்களை வழங்குவதற்காக பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| உருப்படி | தொடர் இலக்கம் | உருப்படி எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரு) |
|---|---|---|---|
| Hospital Equipment | SG-II/83/2022/01 | 42 | 8000.00 |

02. இலங்கைச் சந்தைக்கு உபகரணங்களை உற்பத்தி செய்து வழங்கும் உற்பத்தியாளர்களால் பெயர் குறிப்பிடப்படும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மட்டும் இக் கேள்வி அழைப்பிற்கு சமுகமளிப்பதற்கு தகைமை பெறுவர்.

03. கேள்வி ஆவணங்களை வாரத்தின் வேலை நாட்களில் 2022.02.26 முதல் 2022.03.29 வரை மு.ப. 9.30 முதல் பி.ப. 2.00 வரை இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திடம் மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 0112691111 நீடிப்பு - 2722)

04. பொறியிடப்பட்ட கேள்விகள் 2022.03.30 மு.ப 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைப்பதாயின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும்.

05. மேலதிக தகவல்கள் தேவைப்படின் இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளரிடம் விசாரித்துப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011-2694595)

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு**
**இலங்கை தேசிய வைத்தியசாலை**
**கொழும்பு - 10**




மாத்தளை மாவட்டத்தில் நஞ்சற்ற ஆரோக்கியமான உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் வாளவெள கமநல சேவை பிரிவில் தொறக்கும்புற பணியில் வயற்காணியில் விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளின் மேற்பார்வையில் இயற்கை பசளை உற்பத்தியை மாத்திரம் பயன்படுத்தி செய்யப்பட்ட நெற்செய்கையின் அமோக விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். விவசாய உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்ட குறித்த வயல் நெற்செய்கை செய்யும் போது பிடிக்கப்பட்ட படம்
படம் மாத்தளை சுழற்சி நிருபர்


சுற்றுலாத்துறை அமைச்சு

## இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை (SLTDA)

### இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தேசிய விடுமுறை விடுதிகளுக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்

**ஒப்பந்த இல. SLTDA/RM/NC/NCB/Janitorial-NHR/2022/11**

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தேசிய விடுமுறை விடுதிகளுக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் கோருகின்றார்.
2. சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி மூலப்பிரமானங்களின் பிரகாரம் இயைபுடைய வியாபாரப் பதிவையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022 பெப்ரவரி 25ஆம் திகதி முதல் 2022 மார்ச் 17ஆம் திகதி வரையில் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையின் இணையதளத்திலிருந்து (https://sltda.gov.lk/tender) தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணமான 7,500.00 ரூபாவை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையினால் இலங்கை வங்கியின் கோப்பரேட் கிளையில் பேணப்படும் 7119413 எனும் கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். (குறிப்பு: வரவுத் துண்டில் வைப்பாளர்களின் விபரம் மற்றும் வைப்பிற்கான காரணம் எனும் இடத்தில் ''மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்'' எனக் குறிப்பிட்டு விலைமனுவுடன் வைப்புப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்தல் வேண்டும் மற்றும் கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் ஏனைய கொடுப்பனவு முறைகள் அனுமதிக்கப்படமாட்டாது)
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2022 மார்ச் 03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு SLTDA பணிப்பாளர் சபை அறையில் (1ஆம் மாடி) இடம்பெறும்.
6. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் நகல் பிரதியுடன் விலைமனுக்களை 2022 மார்ச் 18ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, பெறுகைப் பிரிவு (4ஆம் மாடி), இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, இல.: 80, காலி வீதி, கொழும்பு-03 எனும் முகவரிக்கு ஒன்றில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாக ஒப்படைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தேசிய விடுமுறை விடுதிகளுக்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
7. தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அனைத்து விலைமனுக்களும் அவைகளை மூடிய பின்னர், கொழும்பு-03, இல. 80, காலி வீதி, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை, தரை மாடியிலுள்ள முகக்கூட இடப்பரப்பில் (Lobby area) சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
9. விலைமனுக்களுடன் இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் ரூபா (260,000.00 இல. ரூபா) பெறுமதியான விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுவின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 28 நாட்களுக்கு அப்பால் செல்லுபடியாகும் தன்மையில் விலைமனு உத்தரவாதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
10. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 0112426800 (நீடிப்பு 303, 305, 277) மின்னஞ்சல் முகவரி: sltdaproc@srilanka.travel, amilam@srilanka.travel மற்றும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
11. அனைத்து விலைமனுக்களும் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள 1987 ஆம் ஆண்டின் இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்டதும் மற்றும் இதற்குப் பின்னர் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் (PCA3 படிவம்) பதிவுச் சான்றிதழுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12. சுற்றுலாத்துறை அமைச்சு, இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறேதும் நிறுவனத்தினொரு ஊழியர் அல்லது ஒரு கம்பனி மற்றும் அல்லது தனிநபரொருவர் நெருங்கிய வியாபாரம் அல்லது உறவு ஆகியவற்றைக் கொண்டிருப்பின், ஒப்பந்தத்தை வழங்கும் தகுதியை இழந்து விடுவார்.
13. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும். மேலும், இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது எவ்வித காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரருக்கும் விலைமனுக்களை தயாரிப்பதற்கும் அல்லது அவற்றை ஒப்படைப்பதிலுமுள்ள எந்தவொரு கிரயச் செலவிற்கும் அல்லது எந்தவொரு செலவினங்களுக்கும் இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபையானது பொறுப்பேற்க மாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல. 80, காலி வீதி,**
**கொழும்பு 03.**



## விலைமனுவிற்கான அழைப்பு

### உள்ளூர் மேம்பாட்டு ஆதரவுத் திட்டம் - (Credit Number: P 163305)
### வலிகாமம் தெற்கு பிரதேச சபை ~ சுன்னாகம்

1) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது உலக வங்கியிடமிருந்து உள்ளூர் மேம்பாட்டு ஆதரவுத் திட்டத்திற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்கு செலவிட உத்தேசித்துள்ளது.

2) கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வட மாகாணம், சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சார்பாக, உள்ளூர் அதிகார பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது கோருகின்றார்.

3) விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைவரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல. 021 224 0017. தொலைநகல்: 021- 224 0327) 2022 மார்ச் 25 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5) தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 5 ஆம் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

6) ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, வெற்றிகரமான விலைமனுதாரர்கள் நிதி அமைச்சு அல்லது உலக வங்கி அல்லது ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறேதாவது நிறுவனங்களினால் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் கட்டிட மற்றும் வீதி நிர்மாணத்துறையில் கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

7) அட்டவணையில் காட்டப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய பின்னர், 2022 பெப்ரவரி 26 ஆம் திகதியிலிருந்து 2022 மார்ச் 25 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வேலை நாட்களில் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம். ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

8) 2022 மார்ச் 28 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல் பிரகாரம் விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9) சுன்னாகம், வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 2022 மார்ச் 07 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அவர்களின் சொந்த செலவிலேயே விலைமனு முன்னோடிக் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம்.

| இல. | ஒப்பந்த இல. | பணி விளக்கம் | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள சிவில் ஆகு செலவு (மில்.ரூபாவில்) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்) | ஒப்பந்தக் காலப்பகுதி | தேவைப்படும் தரம் | விலைமனுவை சமர்ப்பிக்கும் இறுதி திகதியிலிருந்து செல்லுபடியாகும் காலப்பகுதி | தேவைப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | பிணைத் தொகை (ரூபாவில்) | செல்லுபடியாகும் காலப்பகுதி |
| 01 | LDSP/NP/JAE/VSPS/2021/03(R) | சகல வசதிகளுடன் கூடிய மரக்கறி, மற்றும் மீன்சந்தை அமைத்தல் - மைலங்காடு, ஏழாலை | 10.762 | 3,500.00 | 90 நாட்கள் | கட்டிடங்கள் சி-6 அல்லது மேற்பட்டது | 77 நாட்கள் | 108,000.00 | 2022.07.11 ஆம் திகதி வரையும். |
| 02 | LDSP/NP/JAF/VSPS/PT1/01 | ஈவினை வீதித்திருத்தம் | 4.586 | 2,000.00 | 90 நாட்கள் | வீதி சி-8 அல்லது மேற்பட்டது | 63 நாட்கள் | 46,000.00 | 2022.06.27 ஆம் திகதி வரையும் |
| 03 | LDSP/NP/JAF/VSPS/PT1/02 | பட்டியோலை வீதித்திருத்தம் | 1.829 | 2,000.00 | 60 நாட்கள் | வீதி சி-9 அல்லது மேற்பட்டது | 49 நாட்கள் | 19,000.00 | 2022.06.13 ஆம் திகதி வரையும் |

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்,
வட மாகாணம். தொலைபேசி: 021-224 0017

26.02.2022



## சிறு விளம்பரம்

காணி/தோட்டம்

616
வீடு சொத்து
கொழும்பு மாவட்டம்
விற்பனைக்கு

யூனியன் பிளேஸ் 0320 - 3 படுக்கையறையுடன் முழுமையான தளபாடத்துடனான அப்பார்ட்மென்ட் விற்பனைக்கு. தொடர்பு ரஞ்சித் பெல்பொல 0112821504, அல்லது 0773251404 முதன்மையானவர்கள் மட்டும். 013925

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.
கம்பனியின் பெயர்:
**ரீ.்ப் தல்பெ (பீவீடீ) எல்டீடி**
பதிவிலக்கம்: **PV 00252100**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**24.01.2022**
பதிவு முகவரி :
**ரோஸ்வூட் எஸ்டேட், ஹுபுகல, வக்வெல்ல, காலி**
**கம்பனி செயலாளர்**

### பொது அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 8(1)ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியொன்றின் பெயர் பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது

Ceylon Waste Management (Private) Limited Ceylon Waste Management Limited **என மாற்றம் செய்யப் பெற்றுள்ளது.**

**செயலாளர்.**

# சமூக செயற்பாடு, இளம் அரசியல் தலைமைத்துவ ஆளுமை

# பஸ்லான் பாரூக்

சமூக செயற்பாட்டின் மூலமும் அரசியலின் மூலமும் இளம் தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளை கொண்ட பஸ்லான் பாரூக் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் பஸ்லான் பாரூக்கின் சமூகப் பணியானது கண்டி மாவட்டத்தில் புறக்கணிக்கப்படும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலையினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் மக்கள் மத்தியில் பேசப்படும் நல்லதொரு செயற்பாடாக காணப்படுகிறது.

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்பு உளரீதியாக முஸ்லிம் சமூகம் பாதிப்படைந்துள்ளது. இதிலிருந்து முஸ்லிம் சமூகம் மாற்றமுற வேண்டுமாயின் கல்வித் துறையில் மீளெழுச்சி பெற வேண்டும். பல்லின மக்களிடையே சகவாழ்வை ஏற்படுத்தவும் இன ஒற்றுமையினை வலுவாக்கவும் கல்வி பெரும் பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு முஸ்லிம் மாணவர்களும் கல்விக்கு முன்னுரிமை வழங்கி கற்பதற்கு ஊக்கப்படுத்தி வழிகாட்டுதல் அவசியம். அது மட்டுமல்ல விளையாட்டுத் துறையின் மூலமும் சமூக நல்லிணக்கம் ஏற்படுவதோடு உடல் ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்தக் கூடியது. எனவே எமது வாலிபர்களை போதை வஸ்துப் பாவனை மற்றும் வேறு ஒழுக்கநெறி பிறழ்வுகளிலிருந்து பாதுகாத்தல் அவசியம்.

மேலும் பல்லினங்களிடையே தேசிய நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான ஒரே மார்க்கம் சிங்கள மொழியே. பெரும்பான்மையின மக்கள் பேசும் சிங்கள மொழியினை ஒவ்வொரு முஸ்லிம்களும் பேச வேண்டும். அந்த வகையில் கண்டி மாவட்டத்தில் சிங்கள மொழி கற்கை நெறியினை முஸ்லிம் மாணவர்கள் சகலரும் கற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்துள்ளார் பஸ்லான் பாரூக். இந்த நிகழ்ச்சித் திட்டம் கண்டி மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பஸ்லான் பாரூக் இன, மத,மொழி பிரதேச வேறுபாடுகளுக்கப்பால் செயற்பட்டு வரும் ஒரு மனித நேயமிக்கவர். பஸ்லான் பாரூக் பவுண்டேசன் மூலமாக தைப்பொங்கலை முன்னிட்டு அவர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள வறிய தமிழ் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைத்தார். யூ.ஆர்.ஐ. அமைப்பு ஏற்பாடு செய்த நத்தார் பண்டிகை விசேட கரோல் இசை நிகழ்விலும் பங்குபற்றி பல்லின மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவர். இவர் கண்டி மாவட்ட சவாட்கிக் குத்துச் சண்டை கழகத்தின் விசேட ஆலோசகரும் கூட.

இவ்வாறு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்து செயற்பட்டு வரும் இளம் துடிப்புள்ள பஸ்லான் பாரூக் அவர்களுக்கு மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில் 06.11.2021 ஆம் திகதி பண்டாரநாயக ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் 'சாம ஸ்ரீ தேச கீர்த்தி' கௌரவப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இக்கௌரவம் கிடைத்தமைக்காக ஏ.எம்.பி. விளையாட்டுக் கழகத்தினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்தவராக இணைந்து கொண்ட போது அவரின் திறனை அறிந்து ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பளைத் தேர்தல் தொகுதியின் முஸ்லிம் விவகார செயலாளர் பதவியும் வழங்கப்பட்டது. இளம் சமூகச் செயற்பாட்டாளர் என்ற வகையில் அவருக்குக் கிட்டியுள்ள மதிப்பார்ந்த கௌரவமாகும். இவ்வாறு பல்வேறு அரசியல் சமூக அமைப்புக்களின் மூலம் பட்டங்களும் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது,....















**கல்வியின் முன்னேற்றத்தின் மூலமாகத்தான் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய சவால்களை வெற்றிக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில் சேவையாற்றி வருகின்றீர்கள். அது யதார்த்தம். அது குறித்து உங்கள் கருத்து,..**

2022 ஆம் ஆண்டில் கல்வியினையே இலக்கு வைத்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். பாடசாலை மாணவர்களை கருத்திற் கொண்டு எதிர்கால தலைமைத்துவத்திற்கான வழிகாட்டலை செய்து கொண்டு போகின்றோம். ஒவ்வொரு பாடசாலையிலும் அந்தந்த பாடசாலைக்கு உகந்த ஒரு திட்டம் ஒன்றை உருவாக்கி செயற்பட்டு வருகின்றோம்.

இன்றைய வாலிபர்கள் எதிர்காலத் தலைவர்கள் என்று கூறிவிட்டு எங்களுடைய பொறுப்பு முடிந்து விட்டதென்று சும்மாதான் இருக்கிறோம். மாணவர்களின் கற்றலுக்கான சரியான வளங்கள் வழங்கப்பட்டால்தான் நாளைய தலைவர்களாக அவர்கள் உருவாகுவார்கள். கல்வி என்பது ஒரு அழியாத சொத்து. இது உலகில் எங்கு இருந்தாலும் அச்சமின்றி வாழ முடியும். கட்டாயம் கல்வியின் பக்கம்தான் சமூகத்தின் கவனம் செலுத்தப்பப்பட வேண்டும். கண்டி மாவட்டம் முழுவதிலும் கல்வி செயற்றிட்டங்களை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.பெற்றோர்கள் சொத்து சுகங்களை சேர்த்து வைப்பதில் எந்தப் பயனுமில்லை.

ஒரு சிலரின் செயலால் முஸ்லிம் சமூகம் தாழ்வு மனப்பான்மையுடன் வாழ வேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இன்னும் அதில் இருந்து முஸ்லிம் சமூகம் மீண்டு வரவில்லை. இந்த தாக்குதலின் பின்னணியை பெரும்பான்மையின மக்கள் சற்று சரியாக விளங்கி இருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இன்னும் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை.

எமது சமூகம் இந்த நாட்டில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்று சொன்னால் கட்டாயம் எதிர்காலத்தில் எமது மாணவர் சமூகம் கல்வியில் உயர் நிலையினை அடைய வேண்டும் என்பதையே நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

கல்வியில் தான் எமது சமூகம் முன்னேற வேண்டும். கல்வியில் உயர் இலக்குகளை அடைந்து அரச உயர் பதவிகளில் இருத்தல் வேண்டும். இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு இன, மத வேறுபாடுகளின்றி சேவையாற்ற வேண்டும்.இந்த இலக்கை கல்வியின் ஊடாகத் அடைய முடியும். கல்வியின் மூலம் எமது சமூகம் முன்னேற்றத்தை அடையலாம். இன்று ஒட்டு மொத்த முஸ்லிம் பெற்றோர்களும் பாடசாலையின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இதுதான் இந்த கால கட்டத்தின் மிக முக்கியமான தேவை.

இந்த திட்டம் கண்டி மாவட்டம் முழுவதும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயம். சமூகப் பற்றுள்ள தேசப்பற்றுள்ள ஆரோக்கியமான சந்ததியினரை இதன் மூலம் உருவாக்க முடியும்.

**நீங்கள் எத்தகைய கல்வி அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரத்திற்கான வழிகாட்டல் வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.முதல் கட்டமாக வெலம்பொட மற்றும் வட்டதெனிய பிரதேசங்களில் 06.2.2022 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்டது. வெலம்பொட மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் கைட் அமைப்பு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், மற்றும் பஸ்லான் பாரூக் பவுண்டேஷன் அமைப்பு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. இதன் முதலாம் கட்ட நிகழ்வு வெலம்பொட திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஸம்ரின் ஜரூக் வளவாளராக கலந்து கொண்டார்.

கல்வி சமூகத்தின் கேடயம் என்ற தொனிப் பொருளில் சமூகத்தின் வளர்ச்சிக்காக கல்வியை மேம்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் பஸ்லான் பாரூக் பவுண்டேசன் அமைப்பு வட்டதெனிய வை. டப்ளியு எம். ஏ. பெண்கள் அமைப்புடன் இணைந்து பெமினா பெண்கள் வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் சிங்களப் பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சகோதரிகள் அன்றாட வாழ்வில் சிங்கள மொழியில் கதைக்க முடியாமல் சங்கடப்படுகிறார்கள். பாடசாலை கல்வியை முடித்த மாணவிகள் திருமணமான மற்றும் திருமணம் ஆகாத அனைத்துப் பெண்களுக்கு சிங்கள மொழி போதிக்கப்படுகிறது. இம்மொழியினை கற்றவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழையும் வழங்கி வருகின்றோம்.

பஸ்லான் பாரூக் பவுண்டேசன் மடவலையிலும் கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மடவளை நுகதெனிய அக்அக்ஷ வித்தியாலயத்தின் தளபாடப் பற்றாக் குறை காணப்படுவதாக ஆசிரியர் ராபியின் வேண்டுகோளுக்கிணங்க தளபாட உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

திகன பிரதேசத்திலும் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இது ரோயல் பீஸ் லேடிஸ் அமைப்பின் ஏற்பாட்டில் வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணப் பொருட்கள் இலவசமாக வழங்கி வைக்கும் வைபவம் கண்டி திகன கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலை பொருளாதார நெருக்கடி போன்ற இக்கட்டான சூழ்நிலையிலும் ரோயல் பீஸ் லேடிஸ் அமைப்பு 125 மாணவர்களுக்கான 2 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கி வைத்தது. இது இவர்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் பணியாகும்.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் முஹமட் பாசில் மௌலவி எம். எம். முர்ஷாத், பள்ளேகலை பள்ளிவாசல் தலைவர் ரிஸ்மி ஹாஜியார், பொருளாளர் முஹமட் ஜவ்பர், மௌலவியா ஜரீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.ரோயல் பீஸ் லேடிஸ் அமைப்பு நான்கு ஆண்டுகளாக முதலாம் தரம் முதல் 13 தரம் வரை கல்வி பயிலும் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

பஸ்லான் பாரூக் பவுண்டேசன் அமைப்புடன் இணைந்து ரோயல் பீஸ் லேடிஸ் அமைப்பு மாணவர்களுக்கு கல்வி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

வெலம்பொட ஹிதாயப்புர மஸ்ஜிதுல் ஹுதா பள்ளி வாசலின் மேல் மாடியில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு ஆரம்ப கட்டட வேலைத் திட்டத்திற்கான நிதி உதவியினை அமீர் மற்றும் மஸ்ஜித் நிர்வாகத்தின் தலைவர் ஆகியோரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தேன்.

கல்ஹின்ன ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.எம்.எம். இக்ராம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கு நீண்ட காலமாகத் தேவைப்பட்டு வந்த ஸ்மாட் வகுப்பறைத் திட்டத்துக்கு ஸ்மாட் தொலைக்காட்சி மற்றும் அலுமாரி ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளேன்.

இதன் போது ரிவ்கான் தலைவர் Roxx Fashions (Pvt) Ltd. Ceiling கட்டுமானத் திட்டத்தை மேற்கொள்ள முன்வந்தார். லஜிணத்துள் உலமாவின் தலைவர் மௌலவி முஹமட் நன்கொடை வழங்கினார்.

புதிய கல்வி திட்டங்களை அறிமுகப்படுதும் விடயமாக ஆசிரியர்களுடன் ஒரு கலந்துரையாடலும் நடைபெற்றது.

அக்குறணை ஸாஹிரா தேசிய கல்லூரியின் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான ஒரு தொகை நிதி உதவியை வழங்கி அக்கல்லூரியின் அதிபரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளேன். இது பாடசாலையின் அபிவிருத்தி, மாணவர்களின் கற்கை நெறிக்கு உதவியையும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் வழங்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

பிலிமத்தாலாவை இலுக்வத்தை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் அம்மாணவர்களின் நலன் கருதிப் பரிசுப் பொருட்களை வழங்கினேன். இப்பாடசாலையின் எதிர்கால கல்வி நடவடிக்கை தொடர்பிலான கூட்டத்திலும் கலந்து கொள்ளக் கிடைத்தமையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். எமது சமூகம் கல்வியில் ஒரு சிறந்த சமூகமாக முன்னேற வேண்டும் என்ற நோக்கிலேயே கண்டி மாவட்டத்தில் கல்விக்கான பல வேலை திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். இப்படி பல தரப்பட்ட கல்வி மேம்பாட்டுக்காக திட்டங்கள் வகுத்து செயற்பட்டு வருகின்றேன்.



* பஸ்லான் பாரூக் பவுண்டேஷன் அமைப்பின் தலைவர்...
* கண்டி மாவட்ட சவாட் கிக் குத்துச் சண்டை கழகத்தின் விசேட ஆலோசகர்

**நீங்கள் கம்பளையில் பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களில் முக்கிய பதவிகளிலும் சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றீர்கள். அது பற்றிக் கூறுவீர்களா?**

மனிதன் பிறக்கும் போது எந்தவொரு இலட்சியத்தோடும் கனவுகளோடும் பிறப்பதில்லை. ஆனால் பெற்றோர்களோ அக் கனவுகளைக் காணுகின்றனர். அதற்கான வழிகளையும் காட்டுகின்றனர். எனது குழந்தை பெரியவனாகி பட்டம் பெற்று பெரிய நிலையில் இருக்க வேண்டும். நாளைய சமுதாயம் போற்ற வேண்டும்.நாளை எமது பிள்ளைகள் சிறந்த தலைவனாக வர வேண்டும் என்பதே பெற்றோர்கள் காணும் கனவாகும். அக்கனவுகளை சமூக செயற்பாட்டின் மூலமாவது நிறைவேற்றி வைக்க வேண்டும் என்ற அந்த தூய எண்ணத்தோடு கம்பளையிலுள்ள பல்வேறு சிவில் அமைப்புக்களுடன் இணைந்து சேவையாற்றி வருகின்றேன்.

சமூகத் தொண்டு பணிகள் ஆற்ற வேண்டும் என்று சிறு வயது முதல் ஆசையும் ஆர்வமும் இருந்தது. அந்த வகையில் பல நிறுவனங்களில் முக்கியஸ்தராக இருந்து வருகின்றேன். அவை மட்டுமல்ல பல தொண்டு நிறுவனங்களை ஸ்தாபித்து பலதரப்பட்ட சமூகத் தொண்டுப் பணிகளை ஆற்றியும் வருகின்றேன்.

கம்பளை முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஸ்தாபகர் நான். கம்பளை நகர் பெரியவிலான வர்த்தகங்களை கொண்டிருந்தாலும் ஒரு வர்த்தக சங்கம் இருக்கவில்லை. வர்த்தகர்களை ஒன்று சேர்த்து இச் சங்கத்தை ஆரம்பித்து அதன் செயலாளரக இருந்து கடந்த மூன்று ஆண்டுகள் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றேன்

கம்பளை சமூக நல்லிணக்கத்தைக் கருத்திற் கொண்டு கம்பளையில் இயங்குகின்ற முக்கியமான அமைப்பான முஸ்லிம் வர்த்தகர் சங்கம் மற்றும் நலன்புரி அமைப்புக்களில் முக்கிய உயர் பதவிகளில் சேவையாற்றுகின்றேன். அத்துடன் ஸ்தாபகர் கம்பளை ட்ரெஸ்ட. இவ்வமைப்பும் நாட்டின் அவசர தேவையினைக் கருத்திற் கொண்டு தூய்மையான எண்ணத்துடன் சமூகப் பணியினை ஆற்றி வரும் அமைப்பு. உள்ளூர் மற்றும் வெளி ஊர்களில் இருந்தும் அத்தியாவசியமான தேவையினைக் கருத்திற் கொண்டு செயற்பட்டு வருகின்றேன்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கண்டிக் கிளை சமாதான செயற்பாட்டை கருத்திற் கொண்டு அதன் தன்னார்வ உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு சேவையாற்றி வருகின்றேன்.

**விளையாட்டுத் துறை ரீதியாக நீங்கள் முன்னெடுக்கும் வேலைத் திட்டங்கள் எவை?**

பாகிஸ்தான் லாகூரில் நடைபெற்ற சவாட் கிக் குத்துச் சண்டைப் போட்டியின் தரப்படுத்தல் நிகழ்வு கம்பளையில் சமீபத்தில் நடைபெற்றது. அதற்கான முழு அனுசரணையும் வழங்கி அதில் கலந்து கொண்டேன். இப்போட்டியில் கலந்து கொண்ட 11 பேர்களில் 7 பேர் தங்கப் பதக்கத்தையும் 5 வெண்ணகலப் பதக்கத்தை பெற்று இரண்டாவது முறையாகவும் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர். அந்த வகையில் இந்த வெற்றியில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். அத்தோடு கண்டி மாவட்ட சவாட் கிக் குத்துச் சண்டை அமைப்பின் ஆலோசகராகவும் இருந்து செயற்பட்டு வருகின்றேன்.

எனது ஊரில் உள்ள ஏ.எம்.பி. விளையாட்டுக் கழகம் என் மீது அதிகப்பற்றுள்ள விளையாட்டுக் கழகமாகும். இதன் உன்னத பணிகளில் நானும் ஒருவனாய் அவர்களுடன் இணைந்து கைகுலுகிக் கொண்டு செயற்பட்டு வருகின்றேன். எனக்கு சாம கீர்த்தி பட்டம் கிடைத்தமைக்கு வலுசேர்க்கும் வகையில் என்னைப் பாராட்டி கௌரவம் வழங்கியவர்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப் படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். என்னால் இயன்றளவு உதவிகளை இந்தக் கழகத்திற்கு தொடர்ந்து செய்து வருகின்றேன்.

உடுநுவர அறவாவல Arafa Super Kings கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது. அவ் விளையாட்டியிலும் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தேன்.

கண்டி தெஹியங்க 'யங் பைட்டர்ஸ்' (Young Fighters Sports Club) விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணம்; பஸ்லான் பாரூக் பவுண்டேஷனால் கையளிக்கப்பட்டது.

உடுநுவர ஹன்தெஸ்ஸ பூவெலிகட Y.A.N (Youth Network) விளையாட்டுக் கழகத்தின் நீண்டகால தேவையான 'ஜிம்' உடற்பயிற்சி உபகரணங்கள் பஸ்லான் பாரூ பவுண்டேஷனால் கையளிக்கப்பட்டது. இளம் சமுதாயத்தவரின் உடல் ஆரோக்கியம் மற்றும் முறையான பொழுதுபோக்கின் முக்கியத்துவம் கருதியே இவ்வுதவிகளைச் செய்து வருகின்றோம்.

SPARTANS SPORTS CLUB கம்பளை இளைஞர் விளையாட்டுக் கழகம், மற்றும் இன்னும் பல விளையாட்டு கழகங்களுடன் இணைந்து முதல் முறையாக விசேடமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று இடம்பெற்றது. அதில் விசேட அதிதியாக நான் கலந்து கொண்டேன். அவர்களுடன் இணைந்தும் செயற்பட்டு வருகின்றேன்.

**உங்களின் இதர செயற்பாடுகள் தொடர்பில்...**

மடவளை உடதலவின்ன மகளிர் சங்கம் மற்றும் ஹிக்மா ஜனாசா சங்கம் ஏற்பாடு செய்த விழாவில் கலந்து கொண்டேன். ஹிக்மா ஜனாசா சங்கத்துக்கு பாதுகாப்பு பொதிகள் வழங்கி வைத்ததோடு, மகளிர்களுக்கான சுய தொழில் சம்பந்தமான ஒரு கலந்துரையாடலும் நடாத்தப்பட்டது.

இதன் போது வரும் காலங்களில் பல திட்டங்கள் உடதலவின்னையில் நடாத்துவதற்கு தீர்மானம் செய்யப்பட்டது.

அக்குறணை மாவத்தபொல பிரதேசத்துக்கு ஊர் மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க விஜயம் செய்து, அங்கு பாதை ஒன்றை நிர்மாணிக்க நிதி ஒதுக்கீடு செய்தேன். இதனை ஊர் மக்களும் இணைந்து திட்டத்தை மேற்கொண்டனர். இதன் மூலம் அப்பிரதேச மக்கள் நன்மை அடைந்துள்ளார்கள்.

வாலிபர்களுக்கான வேலை வாய்ப்பு திட்டம். கண்டி மாவட்டத்தில் வேலைவாய்ப்பில்லாத இளைஞர்களுக்கு வேலை திட்டம் ஒன்றை முன்னெடுத்து இது வரை 50க்கும் மேட்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த 50 குடும்பங்களின் கஷ்டத்தை சிறிதளவாவது குறைக்க இந்த திட்டம் உதவியாக இருக்குமென நான் கருகின்றேன்.

இவ்வாறு இளந் தலைமுறையினரின் எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு கற்றல் விடயத்தில் வழிகாட்டல்களையும் சுயதொழில் வாய்ப்புக்கான ஆலோசனைகளையும், சமூக நல்லிணக்கத்திற்கான செயற்பாடுகளையும் சிங்கள மொழி அறிவு அற்றவர்களுக்கான மொழி அறிவினையும், முஸ்லிம் பிரதேசங்களில் காணப்படும் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றி வைப்பதில் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றேன். இதுவே சமூக மாற்றத்திற்கான முக்கிய தேவைப்பாடாகவும் இருக்கிறது.

எனவே கண்டி மாவட்டம் முழுவதிலும் மாணவர்களுக்கான கல்வி சார் வேலைத் திட்டம், பெண்களுக்கான வலுவூட்டல் வேலைத் திட்டம், விளையாட்டு வீர வீராங்கனைகளை மேம்படுத்தும் வேலைத் திட்டங்களில் தீவிராமாக ஈடுபட்டு வருகின்றேன்.

**நேர்காணல் இக்பால் அலி**





# ஏ.எப்.சி ஆசிய கிண்ண இறுதி தகுதிகாண் சுற்று: இலங்கை அணி சி குழுவில்



எதிர்வரும் 2023ஆம் ஆண்டு சீனாவில் இடம்பெறவுள்ள ஏஎப்சி ஆசிய கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப்பிற்குரிய, தகுதிகாண் தொடரின் இறுதிச் சுற்றுக்குரிய அணிகள் நிரல்படுத்தல் மலேஷியாவின் கோலாலம்பூர் நகரில் இடம்பெற்றிருக்கின்றது.

மொத்தம் 24 நாடுகளின் கால்பந்து அணிகள் பங்கெடுக்கும் இந்த தகுதிகாண் தொடரின் இறுதிச் சுற்றில் ஆறு குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டு மோதல்கள் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு குழுவில் இருந்தும் முதல் இடங்களைப் பெறும் ஆறு அணிகளும், இரண்டாம் இடத்தினைப் பெறும் ஐந்து சிறந்த அணிகளும், ஆசிய கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப்பில் விளையாடும் தகுதியினைப் பெற்றுக் கொள்ளும்.

2023ஆம் ஆண்டுக்கான ஆசிய கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப் தொடருக்கு சீனா, அவுஸ்திரேலியா, ஈரான், ஈராக், ஜப்பான், தென் கொரியா, லெபனான், ஓமான், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், சிரியா மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளின் அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கால்பந்து அணி ஆசிய கிண்ண இறுதி தகுதிகாண் சுற்றில் குழுசி இல் இடம்பெற்றிருக்கின்றது. இலங்கையுடன், குழு சி இற்கான தகுதிகாண் போட்டிகள் இடம்பெறவிருக்கும் உஸ்பெகிஸ்தான் மற்றும் தாய்லாந்து, மாலைதீவுகள் அணிகளும் இந்த குழுவில் இடம்பெற்றிருக்கின்றன.

ஆசிய கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப் தொடருக்குரிய தகுதிகாண் போட்டிகள் இந்த ஆண்டின் ஜூன் மாதம் இடம்பெறவிருக்கின்றதோடு, 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய கிண்ண கால்பந்து சம்பியன்ஷிப் தொடர் அடுத்த ஆண்டின் ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## அணிகள் விபரம்

**குழு ஏ**
ஜோர்டான்
குவைட்
இந்தோனேசியா
நேபாளம்

**குழுபி**
மொங்கோலியா
பலஸ்தீன்
பிலிப்பைன்ஸ்
எமன்

**குழு சி**
உஸ்பெகிஸ்தான்
தாய்லாந்து
இலங்கை
மாலைதீவுகள்

**குழு டி**
இந்தியா
ஹொங்கோங்
ஆப்கானிஸ்தான்
கம்போடியா

**குழு ஈ**
மலேஷியா
பஹ்ரைன்
துர்க்மெனிஸ்தான்
பங்களாதேஷ்

**குழு எப்**
கிரைக்ஸ் குடியரசு
தஜிகிஸ்தான்
மியன்மார்
சிங்கப்பூர்

# முதலாவது 20க்கு20 போட்டியில் 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி



இரு அணிகளும் மோதும்
இரண்டாவது ஆட்டம் இன்று

இந்த வெற்றியின்மூலம் மூன்று போட்டி கொண்ட 20க்கு20 தொடரில் இந்தியா 1–0 என முன்னிலையில் உள்ளது. இரண்டாவது போட்டி 26ம் இன்று தரம்சாலாவில் நடக்கிறது.

இலங்கை அணி 60 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில், போராடிய அசலங்க அரை சதம் கடந்து ஆறுதல் அளித்தார்.

இந்தியாஇலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான முதல் 20 ஓவர் போட்டி லக்னோவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 2 விக்கெட் இழப்பிற்கு 199 ஓட்டங்கள் குவித்தது. அதிரடியாக ஆடிய இஷான் கிஷன் 56 பந்துகளில் 10 பவுண்டரி, 3 சிக்சர்களுடன் 89 ஓட்டங்கள் குவித்தார். ரோகித் சர்மா 44 ஓட்டங்களும், ஸ்ரேயாஸ் அய்யர் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களும் சேர்த்தனர்.

இதையடுத்து 200 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, இந்திய பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் துவக்கத்திலேயே தடுமாறியது. துவக்க வீரர் நிசங்க ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். அதன்பின்னரும் சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் சரிந்தன.

60 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகள் இழந்த நிலையில், போராடிய அசலங்க அரை சதம் கடந்து ஆறுதல் அளித்தார். எனினும் இலங்கை அணியால் இலக்கை எட்ட முடியவில்லை.

20 ஓவர்களில் இலங்கை அணி 6 விக்கெட் இழப்பிற்கு 137 ஓட்டங்களே சேர்த்தது.

அசலங்கா 53 ஓட்டங்களுடனும், சமீர 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்திய அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா தரப்பில் புவனேஸ்வர் குமார், ஸ்ரேயாஸ் அய்யர் தலா 2 விக்கெட் எடுத்தனர்.

# சைக்கிளோட்ட வீரர் பொத்துவில் சுல்பிகாருக்கு சாய்ந்தமருது அல் – ஹிலால் வித்தியாலய கல்வி சமூகம் வரவேற்பு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



இனங்களுக்கிடையில் இன ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு தழுவிய தனிநபர் சைக்கிளோட்டம் அண்மையில் சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை வலியுறுத்தி நாடு முழுவதும் தனிநபராக 1407 கிலோமீற்றர் சைக்கிள் சவாரியை பொத்துவிலை சேர்ந்த சுல்பிகார் சர்வமத தலைவர்களின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்தார். இந்த சைக்கிள் சவாரி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, திருகோணமலை, கல்முனை, பொத்துவில், ஹம்பாந்தோட்டை ஊடாக கொழும்பை வந்தடையுள்ளது. புதன்கிழமை மாலை சாய்ந்தமருதை சென்றடைந்த வேளையிலேயே இந்த நிகழ்வின் இடம்பெற்றது. இந் நிகழ்வில் கல்முனை வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் , சாய்ந்தமருது கோட்ட கல்விப்பணிப்பாளர் என்.எம்.ஏ.மலீக் , அல் ஹிலால் அதிபர் யு.எல்.நஸார் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## பௌஸி ஞாபகார்த்த பிளைங் ஹோர்ஸியன் சுப்பர் ஸ்மாஸ் ரி–20 சுற்றுப்போட்டி

**(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)**

சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டு கழகத்தின் 40 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மர்ஹூம் பௌஸி ஞாபகார்த்த பிளைங் ஹோர்ஸியன் சுப்பர் ஸ்மாஸ் ரி20 சுற்றுப்போட்டிக்கான நிரல்படுத்தல் மற்றும் வெற்றிக்கி. ண்ணங்கள் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நாளை (27) ஞாயிற்றுக் கிழமை இரவு 7.30 மணிக்கு சாய்ந்தமருது அல்ஜலால் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சுற்றுத்தொடரில்,பங்கு பெற விரும்பும் கழகங்கள் இன்று (26) சனிக்கிழமை மாலை 6 மணிக்கு முன் நுழைவுக் கட்டணத்தை செலுத்தி தங்களது அணியின் வருகையை உறுதி செய்து கொள்ளுமாறு சுற்றுப் போட்டிஏற் பாட்டுக் குழுவினர் தெரிவி த்துள்ளனர்.

# நியூயோர்க் நகர மரதன் இந்த ஆண்டு முழு திறனுக்கு திரும்புகிறது



நியூயோர்க் நகர மரதன் இந்த ஆண்டு முழு திறன் கொண்ட களத்திற்கு திரும்பும், நவம்பர் 6இல் நிகழ்வில் 50,000 க்கும் மேற்பட்ட ஓட்டப்பந்தய வீரர்கள் எதிர்பார்க்கப்படுவார்கள் என்று நியூயோர்க் வீதி ஓட்டப்பந்தய வீரர்கள் வியாழக்கிழமை அறிவித்தனர்.

நியூயோர்க் முழுவதும் வருடாந்திர 26.2 மைல் மலையேற்றம் 2019 இல் சாதனை அளவாக 53,627 ஃபினிஷர்களைக் கொண்டிருந்தது, ஆனால் கோவிட்19 தொற்று நோய் காரணமாக 2020 நிகழ்வு இரத்து செய்யப்பட்டது.

பந்தயத்தின் 50 வது பதிப்பு 2021இல் அரங்கேற்றப்பட்டது, ஆனால் கோவிட்19 பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் காரணமாக களம் 33 0000 ஓட்டப்பந்தய வீரர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. 25,010 ஓட்டப்பந்தய வீரர்கள் மட்டுமே தூரத்தை நிறைவு செய்தனர்.

கடந்த ஆண்டு மரதன் நியூயோர்க் நகரத்தின் மீட்புக்கு ஒரு உயர்த்தும் மற்றும் ஒருங்கிணைக்கும் தருணமாகவும், புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை, உத்வேகம் மற்றும் விடாமுயற்சியின் அடையாளமாகவும் செயல்பட்டது, என்று பந்தய இயக்குனர் டெட் மெடெல்லஸ் கூறினார்.

இந்த நவம்பரில், நியூயோர்க்கில் சிறந்த நாட்களில் ஒன்றை வழங்க நாங்கள் ஒன்றாக வருவதால், உலகெங்கிலும் இருந்து ஓட்டப்பந்தய வீரர்கள் முழுமையாக திரும்புவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

கென்யாவின் ஆல்பர்ட் கோரிர் கடந்த நவம்பரில் ஆண்கள் பட்டத்தை 2 மணி 8 நிமிடங்கள் 22 நொடிகளில் வென்றார், சக நாட்டவரான பெரஸ் ஜெப்ச்சிர் 2:22:39 இல் பெண்கள் பட்டத்தை வென்றார்.

# அக்கரைப்பற்று வோல்கர்ஸ் யூனியன் நடாத்தும் நடைப் போட்டி; அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில்

**(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)**

அக்கரைப்பற்று வோல்கர்ஸ் யூனியன் நடாத்தும் வருடாந்த மாபெரும் நடைப் போட்டி 2022 இவ்வாண்டும் அக்கரைப்பற்று நீர்ப்பூங்காவில் மார்ச் மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அக்கரைப்பற்று வோல்கர்ஸ் யூனியன் அங்கத்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் 07 போட்டிகளும், பொதுமக்களுக்கு 03 போட்டிகளும், அதிதிகளுக்கும் அனுசரணையாளர்களுக்கும் ஒரு போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வயதெல்லை அற்ற இலகு ஓட்டம் 5000 மீற்றர், 19 தொடக்கம் 40 வயது வரைக்குமான ஆண்களுக்கான நடைப்போட்டி 3000 மீற்றர், 41 தொடக்கம் 60 வயது வரைக்குமான ஆண்களுக்கான நடைப்போட்டி 2500 மீற்றர், 20 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான நடைப் போட்டி 2500 மீற்றர், 13 தொடக்கம் 18 வரைக்குமான ஆண்களுக்கான நடைப்போட்டி 2000 மீற்றர், 13 தொடக்கம் 18 வரைக்குமான பெண்களுக்கான நடைப்போட்டி 2000 மீற்றர், 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கான நடைப்போட்டி 1000 மீற்றர் மற்றும் 20 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கான நடைப்போட்டி 3000 மீற்றர், 20 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான நடைப் போட்டி 2500 மீற்றர், 61 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கான நடைப்போட்டி 1500 மீற்றர் அவற்றுடன் அதிதிகளுக்கும் அனுசரணையாளர்களுக்கும் 1000 மீற்றர் நடைப் போட்டி என்பன நடைபெறவுள்ளது.

போட்டிகள் அனைத்தும் 250 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் விண்ணப்பங்களை பெற்று போட்டியில் கலந்து கொள்ளவும்.




# தவிசாளர் வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்டம் திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நவாஸ் பங்கேற்பு

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக் ஏற்பாடு செய்த தவிசாளர் வெற்றிக் கிண்ணம் உதைபந்தாட்டப் சுற்றுப் போட்டியின் இறுதி லீக் போட்டியின் இறுதிப்போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இப் போட்டியில் அட்டாளைச்சேனை லக்கி அணியும் அட்டாளைச்சேனை ஹீரோஸ் அணியும் பங்கு பற்றியது. இதில் லக்கி அணி 1 0 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது. லக்கி அணியின் சார்பில் டிலுக்ஸன் ஒரு கோலினை அடித்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் லக்கி அணியினர் சிறப்பாக விளையாடியதுடன் சிறந்த பந்து பரிமாற்றங்களை மேற்கொண்டது இப்போட்டியில் லக்கி அணியினர் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது.

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் மூத்த உதைபந்தாட்ட வீரரும் திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக்கின்சிரேஸ்ட பிரதித்தலைவருமான ஹம்சா சனூஸ் தலைமையில் இடம் பெற்ற இப்போட்டியில் திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் புதிய தலைவர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.எம்.நவாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்..எம்.எம்.ஹனீபா பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.எம். ஜூனைதீன்,சிரேஷ்ட உதைபந்தாட்ட வீரர்கள் மற்றும் திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் செயலாளர் அன்வர் நௌசாட், பிரதித் தலைவர் ஐ.எச்.ஏ.வஹாப், மூத்த உதைபந்தாட்ட வீரர்கள்,திகாமடுல்ல உதைபந்தாட்ட அபிவிருத்தி லீக்கின் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன் வீரர்கள் அறிமுகத்திலும் பங்கேற்றனர்.

இப்போட்டியில் லக்கி அணி மற்றும் அட்டாளைச்சேனை உதைப்பந்தாட்ட அணியுடன் எதிர்வரும் 12ம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 26ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.